விலை : 20.00

பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 பங்குனி 12 வெள்ளிக்கிழமை (25.03.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097

கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

T.P: 021 720 1005



இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email:kalyanamalai.jaffna@gmail.com

பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## மிருக மனிதர்கள் சமூகத்தில்

# பண்பாடுள்ள சந்ததி உருவாக பாடசாலைகள் மிக முக்கியம்



(கேகாலை)

கொடூரமான தன்மைகளுடன் மனிதாபிமான மற்றவர்களாக மனிதர்கள் வாழ்ந்து வருகின்ற சமூகத்தில் பண்பாடுள்ள எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்கு பாடசாலைகள் முன்னின்று செயற்பட வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்


பிரெஞ்சு மொழி

- பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
- எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA ( DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை.
- இலவசம் : படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTRE, VISA FORM நிரப்புதல் CD, BOOKS பாவனை...
- யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்

ஆரம்பம் விரைவில் : உடன் அழைத்துப் பதியவும்

021 222 8093 எ, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

## 14 கிலோ கேரள கஞ்சாவுடன் 19 வயது இளைஞன் கைது!



23ஆம் பக்கம் பார்க்க....

## வினாப்பத்திரத்தில் மகிந்தவின் பெயர்

(கொழும்பு)

பௌத்த சமய பரீட்சை வினாத்தாளில் மகிந்த ராஜபக்ஷவின் பெயரையும் காலஞ்சென்ற இந்நாட்டின் அரசியல் தலைவர்களின் பெயர்களுடன் இணைத்து விடைப் பகுதியில் வரும் விதமாக வினாப்பத்திரமொன்று வட மேல் மாகாணத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது.

தரம் 10 இற்கான பௌத்த சமய வினாத்தாளில் இந்த வினா சேர்க்கப்பட்டுள்ளது. 23ஆம் பக்கம் பார்க்க....

## பிரகீத் கடத்தப்பட்டமை தொடர்பான விசாரணைகளை நிறுத்த வேண்டாம்

### உயிருக்கு ஆபத்து என்கிறார் மனைவி சந்தியா

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷ குறித்து எழுதிய குடும்ப மரம் என்ற புத்தகம், வரைந்த கேலிச்சித்திரங்கள் தொடர்பாகவே தனது கணவர் கிரித்தலே முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ளதாக ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தனது கணவரை கடத்திச் சென்று தடுத்து 23ஆம் பக்கம் பார்க்க....

## 'அரசைக் கவிழ்க்க என்னைச் சந்திக்கவும்'

(கொழும்பு)

எதிர்க்கட்சிகள் சில ஒன்றிணைந்து தேங்காய் உடைக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுவது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று கருத்துத் தெரிவித்துள்ளார்.

குருநாகல் பகுதியில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போது அவர் பின்வருமாறு 23ஆம் பக்கம் பார்க்க....

## பொருத்து வீட்டுத் திட்டத்தின் நடவடிக்கையை நிறுத்துங்கள்

### வடக்கு மாகாணசபையில் பிரேரணை நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

மத்திய மீள்குடியேற்ற அமைச்சினால் வடக்கு கிழக்கில் மேற்கொள்ளப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை முறையற்ற விதத்தில் வடக்கில் அமைப்பதற்கு முயற்சிகள் நடந்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், குறித்த பொருத்து வீட்டு திட்டத்தின் மேலதிகமான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் பிரேரணை நிறைவேற்றியுள்ளனர்.

அத்தோடு அந்த பொருத்து வீட்டு திட்டத்திற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். வடக்கு மாகாண சபையின் 24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்ப்பாண கண்காட்சியில் பிரபாகரனின் அடையாளம்

(கொழும்பு)

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொலிஸ் சாட்சியங்கள் இரண்டாவது கண்காட்சி, யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நாளை மறுதினம் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை இந்தக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

கடந்த 6 தசாப்தங்களுக்கு முன்னால் இருந்து இதுவரையான காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற குற்றங்களுடன் தொடர்புடைய அரிய புகைப்படங்கள் இதில் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு 200 வருடங்கள் சிறைத் தண்டனை 23ஆம் பக்கம் பார்க்க....

## தரம் - 5




## 51 இராணுவ வீடுகளைக் கொண்டமைந்த படை வீரர் கிராமத்திற்கு வடக்கு சபையில் எதிர்ப்பு

(வவுனியா)

வவுனியா கொக்எலிய பகுதியல் நிர்மாணிக்கப்பட்டுள்ள இராணுவத்திற்கான 51 வீடுகளை கொண்ட நல்லிணக்க படைவீரர் கிராமத்திற்கு வடக்கு மாகாண சபை ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். வடக்கு மாகாண சபையின் 48 ஆவது அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன் போதே மேற்படி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் வழிகாட்டலின் கீழ் 56-வது படைப்பிரிவின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ள வீடமைப்பு திட்டம் நல் 23ஆம் பக்கம் பார்க்க....

## ஆணைக்குழுமுன் கோத்தா ஆஜர்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ பாரிய நிதி மோசடிகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னிலையில் நேற்று ஆஜராகியுள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க....

## விற்பனையாகிறது

பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கில மொழி வளர்ச்சிக்கான தமிழ் மொழி மூல விளக்கங்களுடன் ஆசிரியர் K.சண்முகநாதன் Senior Lecturer - ELTE, University of Jaffna) அவர்களின் ENGLISH FOR COMMUNICATIONS என்னும் நூல் விற்பனையாகிறது. (C-4133)

நெல்லியடி சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, யாழ்ப்பாணம் அன்னை புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தக சாலை மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம்.


# நிதி அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

(கொழும்பு)

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானம் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியினரால் இந்த நம்பிக்கையில்லா தீர்மான யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொருளாதாரக் கொள்கைகள் பிழையான முறையில் வகுக்கப்பட்டமையினால் இவ்வாறு நம்பிக்கையில்லா தீர்மான யோசனை முன்வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட இரண்டாவது நம்பிக்கையில்லா தீர்மானம் இதுவாகும்.

2015-ம் ஆண்டு இறுதியிலும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### அருணாசலம் அகிலதாஸ்



எமது கல்லூரியின் அதிபராகவும் பதவி உயர்வு பெற்று நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் தற்போது யாழ் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று பணியாற்றும் திருவாளர் அருணாசலம் அகிலதாஸ் அவர்கள் மேலும் பல உயர்வு பெற பாராட்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் (C-4128)



## யாழ்ப்பாணக் கல்லூரி தயாரித்து வழங்கும்

JAFFNA COLLEGE

சடங்கு நிலை ஆற்றுகை (Pass)

### குருதி வடிந்த காவியம்



காலம்: 27.03.2016

நேரம்: மாலை 5.30

இடம்: யாழ்ப்பாணக் கல்லூரி

பஜனையையும் திருப்பாடுகளின் காட்சியையும் கண்டுகளிக்க அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் (C-4126)



## மிக்சர் வேலைக்கு ஆட்கள் தேவை

வேலை பழகிய மற்றும் பழகிச் செய்ய விரும்பும் பெண்கள் தேவை. உடனே நேரில் வரவும்.

பாரதி கைத்தொழில் நிறுவனம்
இல. 19, சம்பியன் லேன்,
கொக்குவில்
T.P : 0774014328

(4004)



WESTERN UNION MONEY TRANSFER

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :- 021222 5392


# வெளிநாட்டு வேலை; 10 பேர் மீட்பு

(கொழும்பு)

வெளிநாட்டில் வேலை பெற்றுத் தருவதாக கூறி மாதக்கணக்கில் விடுதியொன்றில் தங்க வைக்கப்பட்டிருந்த பத்துப் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் மீட்கப்பட்டுள்ளனர்.

கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றின் அடிப்படையில் ஏழு பெண்கள் மற்றும் மூன்று ஆண்களும மருதானை பகுதியிலுள்ள குறித்த விடுதியில் இருந்து இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக கூறப்படும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் மருதானை மற்றும் அக்கரைப்பற்று ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (செ-12)


## முதலாம் ஆண்டு நினைவு

(கஜானந் பிரிண்டேர்ஸ் உரிமையாளர்)

### அமரர். இராசேந்திரம் செல்வானந்தன்

(தோற்றம் : 17.10.1982 மறைவு : 04.04.2015)



உதிர்ந்த மலரை எண்ணி
கண்ணீர் உதிர்க்கும் மலர்கள்

ஒரு கொடியில் பூத்ததாம் ஆறு மலர்கள்
அன்பாய் ஆதரவாய் ஆனந்தமாய்
ஒன்றையொன்று பிரிந்திடாது
ஒன்றிணைந்து உறவாடி
அன்போடு இணைந்தே இருந்ததாம்.

யார் கண்தான் பட்டதோ!
ஒரு நாளில் உதிர்ந்ததாம் ஒரு மலர்
வருத்தம் கொண்டதாம் இருந்த மலர்கள்
வருமோ இனி அந்த மலர் என்று எண்ணி.

காலம் தோறும் கண்ணீர் சிந்தியதாம்
அந்த மலரை பறித்ததை எண்ணி!
அருமையாய் பெருமையாய் இருந்த மலர் தன்னை
இழந்ததால் அது போல் மலர் ஒன்று பூத்து வருமா
என்று காத்திருந்து கண்களும் பூத்துப் போயின.

பெரும் துன்பத்தால் வாடுதாம்
வாழ்ந்து கொண்டிருக்கும் மற்ற மலர்கள்
மறக்குமோ அதை!
மண்ணில் வாழும் மலர்கள் – தாம்
மண்ணில் வாழும் வரை
உதிர்க்கிறதே கண்ணீரை
உதிர்ந்த மலரை எண்ணி!

கடந்த 04.04.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தெய்வம் அமரர். இராசேந்திரம் செல்வானந்தன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுக் கிரியைகள் 25.03.2016 இன்று இணுவில் அறிவாலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-4130)

உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் கோவிலடி. குடும்பத்தினர்



## கண்ணீர் அஞ்சலி

எமது சங்கத்தின் மதிப்பார்ந்த தலைவரும் ஆலோசகருமான வைத்திய கலாநிதி இராஜசிங்கம் தெய்வேந்திரன் அவர்களின் மறைவிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்தி அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்



ஓம் சாந்தி

வட மாகாண புற்றுநோய் எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம் (c-4134)



## கண்ணீர் அஞ்சலி

வைத்திய கலாநிதி
இராஜசிங்கம் தெய்வேந்திரன்



சைவ சமய விவகாரக் குழு ஸ்தாபகரும், முன்னாள் தலைவருமான வைத்திய கலாநிதி இராஜசிங்கம் தெய்வேந்திரன் அவர்கள் 23-03-2016 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தாருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய நல்லூர்க் கந்தனை பிரார்த்திக்கின்றோம்.

சைவ சமய விவகாரக் குழு
யாழ் மாநகர சபை

(C-4127)



## தேவை

முல்லைத் தீவு பகுதியில் தோட்டவேலைக்கு உடனடியாக ஆள் தேவை.
0771681697, 0771133667 (C-4134)




வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# 16 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன

## வடக்கு மாகாண முதலமைச்சர் வழங்கினார்





(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள 27 குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கென 16 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய வாழ்வாதார உதவிகள நேற்று முன்தினம்வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் அவரது அலுவலகத்தில் வைத்து பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இதில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், முன்னாள் போராளிகள், விதவைகள் உள்ளிட்ட 12 பேருக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக 13 இலட்சத்து 63 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்கள் தேவைக்கேற்ப பெறுமதியுடைய காசோலைகள் வழங்கப்பட்டன.

மேலும் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் 13 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன. அத்துடன் வாழ்வாதாரத்தை ஊக்குவிப்பதற்கென 2 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும் தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலைக்கு ஒரு தொகுதி பாடப்புத்தகங்களும் முதலமைச்சரால் வழங்கப்பட்டன. (இ-9)

# நள்ளிரவுவேளை திடீரென மணியோசை; ஆலயத்தில் திருட்டு முயற்சி முறியடிப்பு

## கொல்லன்கலட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவிட்டபுரம் கொல்லன் கலட்டி சடச்சப்பை ஞான வைரவர் ஆலயத்தில் நள்ளிரவு வேளை இடம்பெற்ற திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

குறித்த ஆலயத்திற்குள் நுழைந்த மூன்று திருடர்கள் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் மேற்படி திருட்டுமுயற்சியில்ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை ஆலயத்திற்கு அண்மையிலுள்ள வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த ஒருவர் திடீரென அங்கு விரைந்து ஆலய மணியை ஒலிக்கச் செய்து திருடர்களை திக்குமுக்காட செய்துள்ளார்.

ஊர்மக்கள் ஆலய மணிச் சத்தத்தை கேட்டுஅங்கு கூடுவதை அறிந்த திருடர்கள் தாம் கொண்டு வந்த அலவாங்கு, மண் வெட்டி,பொல்லுகள் மற்றும் 200 ரூபா பணம், தீப்பெட்டி என்பனவற்றை அங்கேயே போட்டுவிட்டு தப்பித்து ஓடியுள்ளனர்.

இதேவேளை நள்ளிரவு வேளை இடம்பெற்ற இந்தத் திருட்டைதடுத்து நிறுத்தியவர் ஆலயத்துக்கு அந்த நேரம் எவ்வாறு தான் வந்தேன் எனக் கூறியது எல்லோரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது.

ஆழ்ந்த உறக்கத்தில் தான் இருந்தபோது அடியவர் ஒருவர் தனது வாகனம் ஆலயத்திற்கு அருகில் பழுதடைந்து நிற்பதாகக் கூறியதையடுத்து அங்கு தான் சென்றதாகவும் அப்போது ஆலயத்திற்குள் திருடர்கள் நிற்பதை அவதானித்து ஆலய மணியை ஒலிக்கச் செய்ததாகவும் கூறியுள்ளார்.இதேவேளை உறக்கத்திலிருந்தவரை ஆலயத்திற்கு அழைத்த நபர் அந்நேரம் சுன்னாகத்திலிருந்ததாக கூறினார் என குறித்த ஆலயத்தின் பரிபாலன சபைத்தலைவர்என்.சிவகரன் தெரிவித்தார்.

இன்று வெள்ளிக்கிழமை குறித்த ஆலயத்தில் மணவாளக்கோலத்திருவிழா வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடாகியிருந்த நிலையில் இந்தத் திருட்டுச்சம்பவம் இடம்பெறறது எனவும் இருப்பினும் வைரவப் பெருமான் அடியவர் உருவில் சென்று திருட்டு முயற்சியைத் தடுத்து அருளியுள்ளார் என்றும்அப்பகுதிமக்கள்மேலும் தெரிவித்துள்ளனர். (இ

# தமிழ் மொழி புறக்கணிப்பானது இனநல்லிணக்கத்துக்கு குந்தகம்

## அரச கட்டடங்களில் தமிழ் பெயர்கள் வேண்டுமென வலியுறுத்தி பிரேரணை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழி புறக்கணிப்பானது இன நல்லிணக்கத்துக்கு குந்தகமாகவே அமையும் என்பதை சுட்டிக்காட்டி வடக்கில் திறந்து வைக்கப்படும் அரச கட்டடங்கள் தூய தமிழ் பெயர்களை கொண்டிருத்தல் வேண்டும் என்ற பிரேரணை வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் 48 அமர்வு நேற்றைய தினம் நடைபெற்றது.

இதன்போதே மேற்படி பிரேரணை பேரவைத்தலைவர் சீ.வீ.கே சிவஞானத்தால் முன்மொழிந்து நிறை வேற்றப்பட்டுள்ளது. கடந்த மார்ச் மாதம் எட்டாம் திகதி சண்டிலிப்பாய் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் விதாதா வள நிலையம் என்ற பெயரில் அலுவலக கட்டடங்கள், விஞ்ஞான தொழில் நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்களில் மட்டுமன்றி பெயர் பலகைகளிலும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலும் விதாதா என்ற சொல் மட்டுமே பாவிக்கப்பட்டுள்ளது. இநத நிலையம் என்ன நோககத்திற்காக திறந்து வைக்கப்படுகின்றது என்பதனை புரிந்து கொள்ள முடியாததாகவே உள்ளதுடன் இது ஒரு தமிழ் மொழி புறக்கணிப்பாகவே பார்க்கப்படுகின்றது.

இவ்வாறான முன்னைய செயற்பாடுகளே தமிழ் மக்கள் மத்தியில் கசப்புணர்வை ஏற்படுத்தின. இவை இன்னும் தொடர்வது இன நல்லிணக்கத்துக்கு குந்தகமானது என்பதனை தெரிவிப்பதுடன், அரசியலமைப்பு ஏற்பாடுகளை மீறும் இது போன்ற செயற்பாடுகள்மேலும் தொடராதிருப்பதற்கான பணிப்புரைகளை வழங்கி உதவுமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரினை இந்தச் சபை கோருகின்றது என சிவஞானம் தனது பிரேரணையை முன்மொழிந்தார.

இந்த பிரேரணை அனைவரது ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு, பிரேரணையின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சு ஆகியோருக்கு அனுப்பி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.(இ-4)

# சிசிலியாவிற்கு நேற்றுப் பிணை

கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள லலித் கொத்தலாவலவின் மனைவி சிசிலியா கொத்தலாவல நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

செலிங்கோ நிறுவனத்தின் முன்னாள் தலைவர் லலித் கொத்தலாவலவின் மனைவி சிசிலியா கொத்தலாவல லண்டனிலிருந்து டுபாய் ஊடாக இலங்கைக்கு விமானத்தில் வந்தபோது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆசிரியர்களின் உடைமைகள் மீதான தாக்குதலைக் கண்டிக்கின்றோம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் ஆசிரியர்களின் உடைமைகள் மீதான தாக்குதலை கண்டிப்பதாகவும் இந்த நாகரிகமற்ற செயலை மேற்கொள்பவர்கள் மீது உடனடியாக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் கழகம் தெரிவித்துள்ளது.

நேற்றையதினம் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கல்விப் பாரம்பரியத்தில் 125 ஆண்டுகள் கடந்தும் பல்லாயிரக்கணக்கான சமுதாய வல்லுநர்களை உருவாக்கி வருகின்ற பெருமைசேர் கல்லூரி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகும்.

இக்கல்லூரியில் கற்பிக்கின்ற ஆசிரியர்கள் பல வழிகளில்அச்சுறுத்தப்பட்டுவருகின்றனர். இதன் மூலமாக குழப்பவாதிகள் சாதிக்க நினைப்பது என்ன? இப்படிப்பட்ட அச்சுறுத்தற் செயற்பாடுகளில் இருந்து இந்த ஆசிரிய சமூகத்தை யார் காப்பது? எனவே தான் இந்தக் கவனயீர்ப்பு செய்தியை ஆசிரியர் கழகத்தினராகிய நாங்கள் யாவருக்கும் வெளிப்படுத்துகின்றோம்.

தற்பொழுது பொறுப்பேற்றுக்கொண்ட இக் கல்லூரியின் அதிபர் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மாணவர்களின் கல்வி மற்றும் ஒழுக்கச் செயற்பாடுகளில் காத்திரமான மாற்றங்களை ஏற்படுத்தி வரும் இச்சமயத்தில் அதிபர் ஆசிரியர்களின்உடைமைகள் சேதமாக்கப்படுவது வேதனை அளிப்பதாக அமை கின்றது.

08.03.2016 அதிகாலை 2.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் அதிபர் இல்லத்தையும் அதிபர் இல்லத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிருந்த கார் அடித்து சேதம் விளைவிக்கப்பட்டது.அதன் தொடர்ச்சியாக இக் கல்லூரியின் ஆசிரியர் ஒரு வரது வீடானது 23.03.2016 அன்று இரவு 8 மணிக்கு மூர்க்கத்தனமாக கொலைவெறி உந்துதலோடு தாக்கப்பட்டிருக்கிறது.

இச்சம்பவத்தை ஆழ்ந்து நோக்கும் போது திருட்டு நோக்கோடு மேற்கொள்ளப்பட்ட முயற்சி இல்லை என்பது யாவருக்கும் புலனாகும்.

குறித்த இவ் ஆசிரியர் கற்பித்தற் செயற்பாட்டோடு மட்டும் நில்லாது மாணவர்களது ஒழுக்க நடவடிக்கைளையும் சிறப்பாக மேற்கொண்டு வருபவர் என்பதும் குறிப்பிடப்பட வேண்டிய முக்கியமான விடயமாகும்.

மாணவர்கள் ஒரு சிலரின் செயற்பாடுகள் ஆசிரியர்களால் கண்டிக்கப்படுகின்ற போது இத்தகு நாகரிகப் பண்பற்ற அச்சுறுத்தற் செயற்பாடுகளில் ஒரு சிலர் ஈடுபடுவதாக அறிய முடிகிறது. இவ்வாறான கல்விப் பாரம்பரியத்தை சீரழிக்கும் செயற்பாடுகளை தடுத்து நிறுத்தி யாழ்.குடாநாட்டின கல்விப் பாரம்பரியத்தை உத்வேகம் உடையதாக முன்னெடுத்துச்செல்ல சகல தரப் பினரும்உதவவேண்டும்என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ-9)

# ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கொண்டு வரவுள்ளதாக, பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தான் பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வினவிய கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் பிழையான தகவல்களை வழங்கியுள்ளதன் மூலம், பாராளுமன்றத்தை தவறாக வழிநடத்தியுள்ளதாக, மகிந்தானந்த அளுத்கமகே இதன்போது மேலும் தெரிவித்தார். (இ-5)

## 65 ஆயிரம் வீடமைப்பு திட்டத்தில்

# பாரிய ஊழல்

## அநுர குற்றச்சாட்டு

(கொழும்பு)

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மீள்குடியேற்றம் புனர்வாழ்வு மறறும் இந்து சமய அலுவல்கள் அமைச்சின்கட்ட கேள்வி மனுக்கோரலின் போதும் வடக்கில் 65 ஆயிரம் வீடமைக்கும் திட்டத்தின் போதும் பாரிய ஊழல் மோசடி இடம்பெற்றிருப்பதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவும் ஜே.வி. பியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. சபையில் குற்றம் சாட்டியுள்ளார்.**

நேற்று வியாழக்கிழமை நிலையியற் கட்டளை 23/2 இன் கீழ் கேள்வி எழுப்பிய போதே மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டினார். (இ-5)

## இலங்கை கடற்பரப்பிற்குள் அத்துமீறிய

# 24 இந்திய மீனவர்களுக்கும் ஏப்ரல் 7வரை விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட 24 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றபதில் நீதவான் ஆர்.சபேசன் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

நெடுந்தீவு வடக்கு கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு ஒரு படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட ஜெகதாப்பட்டினத்தை சேர்ந்த 3 இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைத்தனர்.

குறித்த 3 இந்திய மீனவர்களுடன் ஏற்கனவே வெவ்வேறு திகதிகளில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 21 இந்திய மீனவர்கள் உட்பட 24 பேர் நேற்றைய தினம் மன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது அவர்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-9)

# 2016 - இருபது - 20 உலகக்கிண்ணத்தில் அரையிறுதியில் இடம்பெறப்போவது யார்?

இருபது-20 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் 'சுப்பர்-10' சுற்று விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

இதில் 'குழு-2' பிரிவில் விளையாடிய 3 போட்டிகளிலுமே (இந்தியா, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான்,) வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதல் அணியாக அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்துள்ளது.

அந்த அணி கடைசி ஆட்டத்தில் பங்களா தேஷை நாளை 26-ம் திகதி சந்திக்கிறது. அந்த அணியை வெல்வதன் மூலம் 'குழு-2' பிரிவில் முதல் இடத்தை பிடிக்கும் முனைப்பில் உள்ளது.

அதேசமயம் பங்களாதேஷ் அணி தான் மோதிய 3 ஆட்டத்திலும் தோற்று தொடரை விட்டு வெளியேற்றப்பட்டது.

இந்நிலையில் இந்தியா, அவுஸ்திரேலியா, பாகிஸ்தான் ஆகிய 3 அணிகளில் ஒன்று தான் இந்த பிரிவில் இருந்து அரையிறுதிக்கு முன்னேறும்.

இந்திய அணி 3 ஆட்டத்தில் 2 வெற்றி, ஒரு தோல்வியுடன் 4 புள்ளிகள் பெற்று 2-வது இடத்தில் இருக்கிறது.

கடைசி லீக் ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை நாளை மறுதினம் 27-ம் திகதி எதிர் கொள்கிறது. இதில் கண்டிப்பாக வென்றால் தான் இந்தியா அரையிறுதிக்கு நுழைய முடியும்.

அதேசமயம் அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் இன்று மோதுகிறது. இதில் அவுஸ்திரேலியா தோற்றால் இந்தியா கூடுதல் வாய்ப்பை பெறும்.

அவுஸ்திரேலிய அணி அரையிறுதிக்கு செல்ல 2 ஆட்டத்திலும் (பாகிஸ்தான், இந்தியா) வெல்ல வேண்டும். அந்த அணி தற்போது 2 புள்ளியுடன் இருக்கிறது.




பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலியாவை கண்டிப்பாக அதிக ஓட்டங்களில் வெல்ல வேண்டும். ஆனால் அணிக்கு மிகவும் குறைவான வாய்ப்பே இருக்கிறது.

**குழு 1 பிரிவு**

இந்த பிரிவில் எந்த அணி அரையிறுக்கு முன்னேறப் போகிறது என்பது நிலையில்லாமல் இருக்கிறது. ஆப்கானிஸ்தான் 3 ஆட்டத்திலும் தோற்று வெளியேற்றப்பட்டது.

மேற்கிந்திய தீவுகள் அணி 4 புள்ளியுடன் இருக்கிறது. தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கு எதிரான ஆட்டத்தில் ஒன்றில் வென்றாலே அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுவிடலாம்.

4 புள்ளியுடன் இருக்கும் இங்கிலாந்து அணி கடைசி ஆட்டத்தில் இலங்கையை கண்டிப்பாக வீழ்த்த வேண்டும். தென்னாபிரிக்க அணி எஞ்சிய 2 ஆட்டங்களில் (மேற்கிந்திய தீவுகள், இலங்கை) வெல்ல வேண்டும்.

2 புள்ளிகளுடன் உள்ள இலங்கை அணி அடுத்த 2 போட்டிகளில் இங்கிலாந்து, தென்னாபிரிக்காவை வீழ்த்த வேண்டும். ஆனால் இது அந்த அணிக்கு மிகவும் சவாலானது. (க)

# மரண அறிவித்தல்

## வைத்திய கலாநிதி இராஜசிங்கம் தெய்வேந்திரன்



தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டிக்குளி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வைத்திய கலாநிதி இராஜசிங்கம் தெய்வேந்திரன் (23.03.2016) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம் - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜதுங்கம் - தையல் நாயகி தம்பதியரின் அன்பு மருமகனும், வைத்திய கலாநிதி செங்கமலம் (ஓய்வுபெற்ற மயக்க மருந்து வைத்திய நிபுணர் - யாழ். போதனா வைத்திய சாலை, பொருளாளர் - யாழ்.ஜெய்ப்பூர் நிலையம்) அவர்களின் அன்புக் கணவரும், துஷ்யந்தி (அதிபர் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), தமயந்தி (திட்ட இணைப்பாளர் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, பரி.யோவான் கல்லூரி), செந்தூரன் (மென்பொறியியலாளர் - அவுஸ்ரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துசீதரன் (உப அதிபர் - யாழ். பரி.யோவான் கல்லூரி), மோளி லோரன்ஸ் (முகாமையாளர் - ஹற்றன் நஷனல் வங்கி - சங்கானை), தர்ஷிதா (மென்பொறியியலாளர் - அவுஸ்ரேலியா) ஆகியோரின் மாமனாரும், திவ்யா, டெவின், டனிஷா, டிவேஷ், டிஷ்னா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற இராஜமனோகரன் மற்றும் நித்தியானந்தன், அருள்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், நகுலேசதேவி, கனகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (25-03-2016) பி.ப 1.00 மணிக்கு 36/7, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, சுண்டுக்குளியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தெல்லிப்பழை, கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவாக ஏற்றுக்கொள்ளவும்.

**தொ.பே : 0777 283 616, 0777 316 487**

தகவல் : குடும்பத்தினர்

(4007)

## இன்றைய போட்டிகள்

**அவுஸ்ரேலியா VS பாகிஸ்தான்**

மாலை 3.30 மொகாலி

**தென்னாபிரிக்கா VS மேற்கிந்திய தீவுகள்**

இரவு 7.30 நாக்பூர்

# வட மாகாண வல்லவன் இன்று ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்க அனுமதியுடன் வடமாகாண ரீதியாக நடத்தும் **வட மாகாண வல்லவன்** மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இன்று நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக பொது மைதான த்தில் நடைபெறும் ஆரம்பப் போட்டியில் நெடியகாடு விளையாட்டக்கழகமும் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார். (க)

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆடைத் தொழிலகத்துக்கு (Garments) நன்கு தையல் அனுபவமுள்ள ஆண்கள் தேவை. நேர்முக தேர்வு எதிர்வரும் ஞாயிறு (27/03/2016) அன்று இடம்பெறும்.

இடம்: T.K Garments
No-53/2,
பழைய கச்சேரியடி,
கிளிநொச்சி.

மேலதிக தொடர்புகளிற்கு:
**உ.தீபன்**
**0777 -482050**

(4005)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# சர்வதேச மகளிர் தினமும் முதியோர் ஒன்றுகூடலும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட அங்கத்தினரும் வடமாகாண அமையத்தின் இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகத்தினரும் முதியோர் ஓய்வூதியர் நலன்விரும்பிகளும் ஒன்றிணைந்து நடத்தும் சர்வதேச மகளிர் தினமும் முதியோர் மாதாந்த ஒன்றுகூடலும் நிகழ்வு நாளைமறுதினம் காலை 9.30மணிக்கு யாழ்ப்பாணம் இல.161, 1ம்குறுக்குத் தெருவில் (யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி அருகாமையில்) யாழ். சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை இணைச்செயலாளர் வீ.ஸ்ரீசக்திவேலும் தலைவர் க.கணேசமூர்த்தி தலைமையுரையையும் யாழ்.சென் ஜோன்ஸ்அம்புலன்ஸ்செல்வரஞ்சன் (O.ST.J.) அறிமுகவுரையையும் நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்பு நிகழ்ச்சியாக மகளிர் கௌரவிப்பும் நிகழவுள்ளது. இதனைத் தொடர்ந்து கழகத்தின் "முதியோர்" பத்திரிகை 5வது வெளியீடும் ஆய்வுரையும் இடம்பெறும்.

"மகளிரும் ஆரோக்கியமும்" பற்றிய சிறப்புரையை யாழ்ப்பாணம் தாதியர் கல்லூரி சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி சதானந்தி நந்தகுமாரன் நிகழ்த்தவுள்ளார். (இ)

# அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைபு பற்றிய தெளிவூட்டல் நிகழ்வும் கருத்தறிதலும்

தமிழ் மக்கள் பேரவையின் நிபுணர் குழுவால் தயாரிக்கப்பட்ட அரசியல் தீர்வுத்திட்ட முன்வரைபு பற்றிய பொதுமக்களுக்கான தெளிவூட்டல் நிகழ்வும் கருத்தறிதலும் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நாளை சனிக்கிழமை 26ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்கள் வைத்தியர் பூ.லஷ்மன், ரி.வசந்தராஜா ஆகியோர் தலைமையில் நடைபெறும். (இ)

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் மயிலு பொன்னம்மா (சரசு)

அவனிக்கு:- 27.03.1942 அவனடிக்கு:-24.02.2016

திதி:- அபரபக்க துதியை

உதரத்தில் இடங்கொடுத்து உதிரத்தால் பால் கொடுத்து-நிதம்
அதரங்கள் சேர்த்து வைத்து அரவணைத்து முத்தமிட்டு
சிதறாத சிந்திப்புடன் சிறப்பாக எமை வளர்த்தே-இன்று
பதறாது பரமன் பாதம் பக்குவமாய் சென்றீரோ!!!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

சென்ற 24.02.2016 புதன்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் அன்புத்தெய்வம் அமரர் மயிலு பொன்னம்மா (சரசு) அவர்களின் மரணச் செய்தி கேட்டு இல்லம் நாடி வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் உடன் வந்து உதவியவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் சமூக வலைத்தளங்களூடாக அஞ்சலித்தோருக்கும் மலர்வளையம் சாத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளில் பங்கு கொண்டோருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளை முன்வைப்பதோடு தொடர்ந்து 25.03.2016 வெள்ளிக்கிழமை இன்று ஆவரங்கால் ஆதவன் மண்டபத்தில் நடைபெற இருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லியோடை,
அச்சுவேலி.

இதனை தனிப்பட்ட அழைப்பாக
ஏற்றுக்கொள்ளவும்.

(3997)

குடும்பத்தினர் சார்பாக
மகன்: ம.இரங்கநாதன்

# இராசி பலன்

25.03.2016
(பங்குனி 12, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு
துதியை முன்னிரவு 9.41மணிவரை
சித்திரை பின்னிரவு 12.13 மணிவரை
சுபநேரம் 6.15-7.45 மணிவரை
இராகுகாலம் 10.45-12.15 மணிவரை
பெரிய வெள்ளி

| | | | |
|---|---|---|---|
| சூரி, புத | | | |
| சுக், கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி, உத்தரட்டாதி பகல் 10.53இற்கு துலா-சந் | | |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | சந் |

வளவன்

**மீனம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை, குடும்பத்தில் சிறு சிறு வாக்கு வாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**மேடம்:** மறக்க முடியாத இனிய சம்பவங்கள் நடைபெறலாம், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர்.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**கும்பம்:** நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலில் வேகம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**மகரம்:** எண்ணிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், விரதம், வழிபாடுகளில் அதிக நம்பிக்கை கூடும், வருமானம் திருப்திகரமானதாக இருக்கும்.

**சிம்மம்:** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், உறவுபகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**தனுசு:** தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், ஆடம்பரப் பொருட்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயனசுகக் குறைவான நாள், வழிபாட்டால் காரியம் சாதிக்க வேண்டிய நாள்.


**துலாம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், தேகநலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

**கன்னி:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொழில் ரீதியாக புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

# வடக்குமாகாண சுகாதாரத் தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பில் மத்திய அரசுக்கு தெரியப்படுத்தப்படும்

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)



**வடக்கு மாகாணத்தில் சேவையில் ஈடுபட்டுவரும், மற்றும் நிறுத்தப்பட்ட சுகாதார தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படுவது தொடர்பில், மத்திய அரசிற்கு தாம் தெரியப்படுத்துவதாக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உறுதியளித்துள்ளார்.**

எனினும் மத்திய அரசால் குறிதத நிரந்த நியமனம் தொடர்பில் வடக்கு மாகாண சபையே நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியது தொடர்பில் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் திருப்தியான பதிலை வழங்கவில்லை என தொண்டர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றி வரும், கடமையாற்றிய சுகாதார தொண்டர்கள் தாம் பணியிலிருந்து நிறுத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும, நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரியும், நேற்றைய தினம் வடக்கு மாகாண சபை முன்பாக கவனயீர்ப்பு போராடத்தை மேற்கொண்டனர். காலை ஒன்பது மணியளவில் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தின் போது பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்ட வடக்கில் உள்ள அனைத்து சுகாதார தொண்டர்கள் மற்றும் பணியில் ஈடுபட்டு வரும் சுகாதார தொண்டர்கள் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.




கடந்த இரு வருடங்களுக்கும், பத்து வருடங்களுக்கு முன்னதாகவும் இணைத்துக்கொள்ளப்படும் போது நிரந்தர நியமனம் தருவதாகவே கூறி இணைத்துக் கொண்டதாக போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தொண்டர்கள் தெரிவித்தனர். எனினும் ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்னர் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி தாம் பணியிலிருந்து நிறுத்தப்பட்டு விட்டதாகக் கூறும் தொண்டர்கள், இடைநிறுத்தப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகின்றன. இதுவரை இந்த காலப் பகுதியில் கொடுப்பனவு எவையும் இன்றியே நாங்கள் பணியாற்றி வருகின்றோம்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், முன்னுரிமை அடிப்படையில் நியமனம் எனக் கூறி ஏமாற்று வேலை செய்கின்றார்கள், பதினாறு வருடம் ஏமாற்றியது போதும் போதும், எமக்கு நியாயம் வேண்டும், நிரந்தர நியமனம் கிடைக்காவிட்டால் போராட்டம் தொடரும், ஊதியமின்றி பணியாற்றுகின்றோம் இரக்கமில்லையா?, மத்திய அரசு வழங்குவதாகக் கூறுகின்றனர். ஆனால் மாகாணம் ஏன் மறுக்கின்றது? என எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

மேலும் எமது குறித்த தொண்டர்களது நியமனம் குறித்து சிறுவர், மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரனது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது, இதனை அவர் மத்திய சுகாதார அமைச்சருக்கு தெரியப்படுத்தியிருந்த நிலையில் மத்திய சுகாதார அமைச்சு இது தொடர்பில் வடக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்து நிரந்தர நியமனம் வழங்குமாறு அறிவுறுத்தி மத்திய அமைச்சின் செயலாளரினால் வடக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு இருந்தது.

எனினும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சு இதுவரை எந்த வித நடவடிக்கைகளையும்எடுக்காமல் இறுதியாக நடைபெற்ற ஆட்சேர்ப்பின் போது 180 நாட்கள் பணியில் ஈடுபடாதவர்களுக்கும் செல்வாக் கின் அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சரிடம் கூறியிருந்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வடக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிக்கையில், உங்களுடைய கல்வித் தரம் தொடர்பில் எமக்கு ஒன்றும் தெரியாது. ஆனாலும் நீங்கள் போர்க்காலத்தில் பணியில் ஈடுபட்டிருந்தீர்கள் என்பதன் அடிப்படையில் உங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு மத்திய அரசுக்கு நாங்கள் தெளிவு படுத்து வோம் என முதலமைச்சர் தெரிவித்தார்.

எனினும் தொண்டர்களின் போராட்டம் தொடர்பில் திருப்திகரமான பதிலை வழங்காத சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், இது தொடர்பில் தாம் மத்திய அரசுக்கு ஏற்கனவே எழுத்து மூலம் தெரியப்படுத்தி உள்ளதாக கூறினார். எனினும் இவரே தமக்கான நியமனத்தை வழங்குவதில் பின்னடிப்பு செய்து வருவதாக தொண்டர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (இ-4)

## க.பொ.த. (சா/த) பெறுபேறுகள்-2015

யாழ். வட்டு இந்துக் கல்லூரி

ம.சரண்ஜா-7ஏபிசி, சி.யானுகா-7ஏபிசி, ம.கடம்பேஸ்வரன்- 5ஏ3பிஎஸ், பு.வானுஜா- 5ஏ2பி2சி, சூ.தக்சனா- 4ஏ2பி2சி, ப.லக்சனா- 3ஏ5பிஎஸ், தி.சுஜித்தா- 3ஏ4பி2சி, கு.சங்கீர்த்தனன்- 3ஏ2பி4சி, சி.மதிவாணி- 3ஏ2பி3சிஎஸ், ந. பிரயுஷா- 3ஏபி2சி3எஸ், ச.திலக்சன்- 3ஏ2பி2சிஎஸ், சி.தர்சிகன்- 3ஏ2பி2சி.

யாழ்/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி

ர.கிருத்திகா- 8ஏபி, த.சுபாசினி-6ஏ2பிசி, ந.சகிந்தா-6ஏ2பிசி, கு.பிரதீபன்-5ஏ2பி2எஸ், ஞா.டிலக் சனா-5ஏபிஎஸ், ம.சாளினி- 4ஏ3 பி2சி, க.கோபிசன்- 4ஏ2பிசி2எஸ், மு.பிரவீனா-4ஏ2பி3எஸ், ஜெ.ஜெனா ர்த்தனன்-4ஏபி2சிஎஸ், கி.டனுலக் சன்- 3ஏ5பிஎஸ், சி.லவன்- 3ஏ4 பிசி, ஈ.ஈஸ்மிதா- 3ஏ3பி2சி, அ.அது ஜன்- 3ஏ2பிசி3எஸ், புதுவாரகா- 3ஏபி4சிஎஸ்.



யா/நயினாதீவு மகா வித்தியாலயம்

ஜெ.லக்ஷனன்- 3ஏபி3சிஎஸ், ம.லாவண்யா-ஏ4பி2சிஎஸ், குதுஜீபா-ஏ3பி3சிஎஸ், ஜெ.தனுசியா- ஏ5சி2எஸ், கி.நிலக்ஷனா-ஏ2சி4எஸ்.

யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

யோ.நிஷாந்தன்-4ஏ4பிசி, ந.மஞ்சுதன்-4ஏ2சி2எஸ், செ.தனுசா-2ஏ2பி4சி, க.அனிஸ்ரலா-2ஏ2பிசி3எஸ், பி.லிபேக்கா-ஏ4பி2 சிஎஸ், ம.நிகழ்ஜன்-ஏ2பி4சி2எஸ், வி.ஜிந்துஜன்-ஏ2பி4சி2எஸ், ம.டிசானுகா-ஏபி5சி2எஸ், செ.டினேஸ்குமார்-ஏபி2சி3எஸ், க.கபில்ராஜ்-ஏ4சி 2எஸ், தி.சுவேகன்-ஏ6சிஎஸ், இ.தனுசிகன்-2பி4சி2எஸ், க.ரட்ணாங்கி-பி8சி, சா.சாளினி-பி5சி3எஸ், ஜெ.நிலக்ஷன்-2பி2சி4எஸ், தி.நிந்துஜா-4சி4எஸ். (இ)

## தேரில் வெள்ளை நாகம்

(சித்தங்கேணி)

சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திர சுவாமி சமேத பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று முன்தினம் 2 மணியளவில் இடம்பெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து சிறப்பித்தனர். இவ்வாலயத்தில் மஹோற்சவ காலத்தில் பல அற்புதங்கள் இடம்பெறுகின்றன.

இவ்வருடம் இவ் ஆலய இரதோற்சவத்தின் போது இரதத்தில் சுவாமி எழுந்தருளும் வேளையில் இரதத்திலே வெள்ளைநிற நாக சர்ப்பம் தோன்றி வீதி உலா வந்ததை ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்ணுற்று பரவசம் அடைந்தார்கள். (இ-17)

## புனரமைக்கப்பட்டு ஒரு சில நாட்களில் பழுதடைந்த வெற்றிலைக்கேணி வீதி




வடமராட்சி கிழக்கு பருத்தித்துறை வெற்றிலைக்கேணி வீதி புனரமைக்கப்பட்டு ஒருசில நாட்களில் பழுதடைந்துள்ளது. இதனால் அப்பாதையூடாக பயணிப்பது மிகமிக சிரமமாக உள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதனை உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

# வரி அதிகரித்தால் பேருந்துக்கட்டணம் உயரும் கெமுனு விஜேரத்ன அரசுக்கு கடும் எச்சரிக்கை

வற் வரியை உயர்த்தினால்பேருந்துக்கட்டணங்களை அதிகரிக்கப் போவதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன அரசாங்கத்தை எச்சரித்துள்ளார்.

இது தொடர்பாக சிங்கள ஊடகமொன்றுக்கு அவர் நேற்று கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது டொலர் ஒன்றின் பெறுமதி 147 ரூபாவுக்கும் அதிகமாக தாண்டியுள்ளது. இதன் காரணமாக பேருந்து உதிரிப்பாகங்களின் இறக்குமதி செலவு அதிகரித்துள்ளது.

இவ்வாறான நிலையில், அரசாங்கம் வற் வரியை 15 சதவீதமாக அதிகரிக்க முடிவு செய்துள்ளது. அவ்வாறு அதிகரித்தால்பேருந்து சேவையை நடத்திச் செல்வது மிகுந்த சிரமமான விடயமாகி விடும்.

எனவே வற் வரி அதிகரிக்கப்பட்டால் பேருந்துக் கட்டணங்களை உயர்த்துவது தவிர மாற்று வழி ஏதும் இல்லை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (இ-5)


# வைத்தியர்களுக்கு பெரும் பற்றாக்குறை

(கொழும்பு)

நாடெங்கிலுமுள்ள அரச வைத்தியசாலைகளில் வைத தியர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நாடெங்கிலுமுள்ள வைத்திய சாலைகளுக்கு 18 ஆயிரத்து 200 வைத தியர்கள் தேவைப்பட்ட போதிலும் தற் சமயம் 16 ஆயிரத்து 100 வைத்தியர்களே பணியில் இருப் தாகவும் 3 ஆயிரத்து 78 விசேட வைத்திய நிபுணர்கள் தேவை ப்படும் இடத்தில் ஆயி ரத்து 577 பேர் மட்டுமே உள ளதாகவும், மொத்தமாக ஆயிரத்து 600 பல் வைத்தியர்கள் பணி புரியும் போது பல் விசேட வைத்திய நிபுணர்கள் 60 பேர் மாத்திரமே சேவையில் இருப்பதாகவும் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வைத் தியர் களினதும்விசேட வைத்திய நிபுணர்களினதும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய சுகாதார அமைச்சர் ராஜித சேனா ரத்ன புதிய பொறிமுறையொ ன்றை அறிமுகப்படு த்த வுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்து ள்ளன. (இ-5)

# அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கொழும்புக் கம்பன் விழா-2016



கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபம்
25.03.2016 வெள்ளிக்கிழமை
இரண்டாம் நாள் (இன்றைய நிகழ்வுகள்)

**காலை 9.30 மணி**

**மங்கல விளக்கேற்றல்**
திரு.எஸ்.பாலசிங்கம் (லண்டன்)

**கடவுள் வாழ்த்து**
திருமதி ஹேமா கபிலதாஸ்
திருமதீ நீதிமதி யோகராஜா

**தலைமையுரை**
பேராசிரியர் சி.தில்லைநாதன்

**தொடக்கவுரை**
கலைஞர் கலைச்செல்வன்

**இலக்கியப் பேருரை**
புலவர் கோ.சாரங்கபாணி
(தமிழ்நாடு)
பொருள்:
**'பங்கமில் பரதன்'**

**கருத்தரங்கு**
தலைவர்: 'இலக்கியச்சுடர்' த.இராமலிங்கம் (தமிழ்நாடு)
பொருள்:
**'எட்டாத கம்பனின்....'**
வற்றாத நதி-பரா.ரதீஸ்
வாடாத மலர்-அ.வாசுதேவா
முற்றாத இளமை-த.கிருஷ்ணா
முடியாத காமம்-சி.கேசவன்
பற்றாத பகை-ச.லலீசன்
பதறாத தெளிவு-சோ.முரளி
சுற்றாத மனம்-கு.பாலசண்முகன்

**மாலை 5.30 மணி**

மங்கல விளக்கேற்றல்
தேசமான்ய
கே.துரைசாமி செட்டியார்
(அறங்காவலர்)

கடவுள் வாழ்த்து
திரு.பி.நித்தியானந்தன்

தலைமையுரை
கௌரவ எஸ்.சிறிதரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)

தொடக்கவுரை
கௌரவ அனுரகுமார திசாநாயக்க
(தலைவர்,மக்கள் விடுதலை முன்னணி)

**அஞ்சலி அரங்கு**
அமரர்களாகிவிட்ட கழக அன்பர்களுக்கான அஞ்சலி

**பட்டிமண்டபம்**
புலவர் கோ.சாரங்கபாணி
பொருள்:
'கற்றோர் மனதைக் கவர்வதில் முன்னிற்கும் அறம் சார்ந்த கோபம் யாருடையது?'
கைகேயியின் மீதான பரதனின் கோபமே!
இரா.செல்வவடிவேல், ஸ்ரீ.பிரசாந்தன்
இராமனின் மீதான வாலியின் கோபமே!
த.சிவகுமாரன், ந.விஜயசுந்தரம்
இராவணனின் மீதான சீதையின் கோபமே!
ஆறு.திருமுருகன், ஐ.கதிர்காமசேகரம்
நோக்கர் குழு:தி.வேல்நம்பி(தலைவர்), ஜி.இராஜகுலேந்திரா, ச.மார்க்கண்டு,திருமதி திலகவதி மகாநந்தன், திருமதி பத்மா சோமகாந்தன்,தி.ஞானசேகரன்,தம்புசிவா

இ

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை வேளாதோப்பு ஸ்ரீ மதுரை மகா முத்துமாரி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் 07 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து நாட்கள் மஹோற்சவம் நடைபெறும். (இ)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்.

## வெளிவாரிப் பரீட்சைகள்

1. வணிக முதற் தேர்வு -2013 (புதிய பாடத்திட்டம்)
2. வணிக இரண்டாம் தேர்வு -2013 (புதிய பாடத்திட்டம்)
3. வணிக மூன்றாம் தேர்வு -2013 (புதிய பாடத்திட்டம்)
4. வணிக நான்காம் தேர்வு-2013 (புதிய பாடத்திட்டம்)
5. வணிக முதற் தேர்வு- 2013 (பழைய பாடத்திட்டம்) (மீள் பரீட்சை)
6. வணிகமாணி- பகுதி-I-2013 (பழைய பாடத்திட்டம்) (மீள் பரீட்சை)
7. வணிகமாணி- பகுதி-II-2013 (பழைய பாடத்திட்டம்) (மீள் பரீட்சை)
8. வணிகமாணி- பகுதி-III-2013 (பழைய பாடத்திட்டம்) (மீள் பரீட்சை)

மேற்படி பரீட்சைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக விரைவில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் மக்கள் வங்கிக் கிளையில் ரூபா 300/- இனைச் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

தபால்மூலம் விண்ணப்பப்படிவத்தினைப் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயருக்கு எழுதப்பட்ட ரூபா 300/- க்கான காசுக் கட்டளை /தபாற்கட்டளையை, சுய முகவரியிடப்பட்ட ரூபா 70/- பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட 28X20 செ.மீ.அளவுடைய தபால் உறையுடன் இணைத்து, உதவிப் பதிவாளர், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

குறிப்பு: வணிகமாணி கற்கைநெறி தொடர்பாக, கல்வியாண்டு 2011/2012 இருந்து அரையாண்டு பருவ அடிப்படையிலான, கற்கைக்கால அளவுப் பெறுமதியிடப் பட்ட கற்கை அலகு முறைமை (Semester, based course unit system and Grade Point Average evaluation) அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால், ஏற்கனவே வணிகமாணிக் கற்கைநெறிக்கு பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பதிவுகளை மேற்கொண்டவர்கள், மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து விரைவில் தங்கள் கற்கை நெறிகளை பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

மேற்படி பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 25.04.2016 (திங்கட்கிழமை) ஆகும். பரீட்சைகள் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் பத்திரிகைகளில் விளப்பரப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்** (சி-4124)


# கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்:- விசாகம்<br>கி.பா:52 செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5689 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 26 செவ் இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்<br>தொ.இ: G/4774 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 43 செவ் 1 இல்<br>உயரம்: 173cm<br>தகைமை/தொழில்:BSc/அரசதொழில்<br>தொ.இ: B/5690 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 28<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்;HNDA, BSc/தாதி<br>தொ.இ: G/4783 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 62 செவ் 1 இல்<br>தகைமை/தொழில்:O/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/5691 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 58<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>தொ.இ: G/4778 |
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 46<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/5693 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 12 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 160cm<br>தகைமை/தொழில்:chartered/வங்கியாளர்<br>தொ.இ: G/4781 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible] )



கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார பொங்கல் உற்சவ நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.பகல் வேளையில் பக்தர்கள் காவடி, பாற்செம்பு நேர்த்திக்கடன்களை நிறைவேற்ற வருகை தந்தனர். அத்தோடு மாலை வேளையில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஆலயத்திற்கு வருகை தந்தனர்.இவர்களுக்கான விசேட பேருந்து போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:பனிக்கன்குளம் செய்தியாளர்)

# மாரடைப்பினால் குடும்பஸ்தர் மரணம்

மாரடைப்பு காரணமாக குடும்பஸ்தீர் ஒருவர் உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் இடம்பெற்றது.

இதில் முள்ளியவளை தண்ணீ




ரூற்றில் வசிக்கின்ற ஒரு குழந்தையின் தந்தையான ஆனந்தராஜ் ஜெனார்த் (வயது-27) என்ற குடும்பஸ்தரே மரணமடைந்தவராவார். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

பிரஸ்தாப இளைஞன் நேற்று முன்தினமிரவு வீட்டில் இருந்த வேளை 9 மணியளவில் திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது.

உறவினர்கள் மேற்படி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த வேளை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். (2-15)

# விபத்துக்களினால் நாளாந்தம் பலியாகும் கால்நடைகள் அப்புறப்படுத்தப்படுவதில்லை

## நாட்கள் சென்ற பின்னர் துர்நாற்றம் வீசுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளால் பல்வேறு விபத்து சம்பவங்கள் இடம்பெற்று வருவதுடன் சில வேளைகளில் வாகன விபத்துக்களால் அவை உயிரிழந்து வீதியோரமாக விடப்படுவதால் நாட் கள் சென்ற நிலையில் அதனுடைய உடற்பாகங்கள் அழுகி துர்நாற்றம் வீசுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சம்பவம் அண்மையில் ஏ-9 வீதியில் 226 ஆவது மைல்கல் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது வாழ்வாதாரத்திற்கான பெறுமதி வாய்ந்த ஒரு பசுவும் கன்றும் வாகன் விபத்தில் சிக்குண்டு இறந்து வீதியோரமாக விடப்பட்டிருந்தது.

இதேவேளை தமது கால் நடைகளுக்கான மேய்ச்சல் தரைகள் இல்லையென பலரிடம் முறையிட்டும் தமக்கு தீர்வு வழங்கப்படவில்லை. தாம் எங்கு கொண்டு சென்று கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவது என மக்கள் கேள்வியெழுப்பியு ள்ளனர்.

இவ்வாறிருக்க பொறுப்பற்று




செயற்படும் வாகன சாரதிகள் கால் நடை களை வாகனத்தினால் மோதி விட்டு செல்வதும் கால்நடைகள் விபத்துள்ளாகி மரணமடைவதும் காயப்படுவதுமான நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு வீதிகளில் வாகன சாரதிகளால் அடித்து இறக்கின்ற கால் நடைகள் இரண்டு மூன்று நாட்களாக அப்புறப்படுத்தாமல் விடப்பட்டு சுகாதார சீர்கேடுகளும் மக்கள் வீதிகளில் செல்ல முடியாத அளவிற்கு துர்நாற்றம் வீசுவதையும் அவதானிக்க முடிகிறது என தெரிவிக்கிப்படுகின்றது.எனவே யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வறுமை காரணமாக கால்நடைகளை வளர்த்து தமது வாழ்க்கையை கொண்டு செல்லும் மக்களை இந்நிலைமையிலிருந்து பாதுகாப்பது யார் என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். (2-281)

# நிர்வாக உறுப்பினர் தெரிவு

(சோலைநகர்)

கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் 2016 ஆம் ஆண் டுக்கான வருடாந்த பொதுக் கூட்டமும் பாடசாலை அபிவிருத்திச்சபையின் நிர்வாக உறுப்பினர்கள் தெரிவும் அண்மையில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த த.பேரின்பராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன் போது பாடசாலையின் 2016, 2017ஆம் ஆண்டுக்கான செயற்குழு தலைவராக திருமதி. மீனலோஜினி இதயசிவதாஸ், செயலாளராக மரியதாசன் அருள்யோன்சன், பொருளாளராக திருமதி மஞ்சுளா பவானந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கந்தசாமி சற்குணகுமார், தயாநிதி பிரபாகரன், ஜெகநாதன் கேமலதா, குமாரசாமி குகதீஸ்வரன், குலஞானசுந்தரம் விக்கினேஸ்வரி, புவனேந்திரன் மகேசன், செல்வச்சந்திரன் கிருஸ்ண நாதன், தியாகராசா நீதிராசா, பாலசிங்கம் கமல்ராஜ், சுதர்சனா குகானந்தன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவாகினர். (2-309)

## கடந்த இரண்டு வருடங்களாக

# முள்ளியவளை வர்த்தக சங்கத்தினரின் செயற்பாடுகள் அனைத்தும் மந்தகதியில்

## வர்த்தகர்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்டு மகஜர் சமர்ப்பிப்பு

இரண்டு வருடங்களுக்கு மேலாக நிர்வாகத் தெரிவுகள் இடம்பெறாது எவ்விதமான செயற்பாடுகளுமின்றி இயங்காமல் இருக்கின்ற முள்ளியவளை பிரதேச வர்த்தக சங்கத்தை மீளவும் இயங்க வைக்குமாறு கோரி சுமார் 150 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்ட மகஜர் ஒன்று வடக்கு மாகாண சபை அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு கையளிப்பதற்காக வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனிடம் கடந்த 23 ஆம் திகதி வழங்கப்பட்டது.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

மேற்படி பிரதேச வர்த்தக சங்கத்தின் செயற்பாடுகள் எதுவும் இல்லாத நிலைமை தொடர்பில் பல தடவைகள் உரியவர்களிடம் சுட்டிக் காட்டிய போதும் உரிய நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படாத நிலையில் மேற்படி மகஜர் கையளிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த வர்த்தக சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-310)

# இந்திய மீனவர்கள் 44 பேருக்கு— 4ம் திகதி வரை விளக்கமறியல் நீடிப்பு

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் பல சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 44 இந்திய மீனவர்களை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் பதில் நீதவான் இ.கயஸ்பெல்டானோ நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டார்.

தலைமன்னார் மற்றும் தாழ்வுப்பாடு ஆகிய கடற்பரப்பில் வைதது கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 44 இந்திய மீனவர்களும் நேற்று விசாரணைக்காக மன்னார் நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டனர். இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் பதில் நீதவான் குறித்த உத்தரவைப் பிறப்பித்ததோடு, அடையாளம் காணப்பட்ட சிறுவர் தொழிலாளர்களை சிறுவர் இல்லத்தில் அனுமதிக்குமாறும் உத்தரவிட்டார்.

தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 21 இந்திய மீனவர்கள் மற்றும் தாழ்வுப்பாடு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்கள் ஆகியோரே இவ்வாறு மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

# சேவைச் சந்தை கட்டடம் அமைக்க அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி சேவைச் சந்தையின் பழக்கடைகள், வெற்றிலைக்



கடைகள் ஆகிய கடைத்தொகுதிகளுக்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் சந்தை வளாகத்தில் கரைச்சி பிரதேச சபை செயலாளர் கஜேந்திரநாதன் தலைமையில் நடைபெற்றது.

இக் கட்டடத் தொகுதியானது உலக வங்கியின் 10 மில்லியன் ரூபா நிதியுதவியிலும் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் 10 மில்லியன் ரூபா நிதியிலும் அமைக்கப்படவுள்ளது.

இந்த அடிக்கல் நாட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் , வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, கிளிநொச்சி மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நா.பிரபாகரன், மதகுருமார்கள் ,சந்தை வர்த்தகர்கள் எனப் பல தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர். (2-277)

# காணாமற் போனோர் விசாரணை ஆணைக்குழு வன்னிக்கு விஜயம்

## இன்று தொடக்கம் 31ஆம் திகதி வரை அமர்வுகள் நடைபெறும்

(மல்லாவி)

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை வரை கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

இதற்கமைய இன்று தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வரை காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 5.30மணி வரை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் முல்லைத் தீவு மாவட்ட மக்களுக்கு நடைபெறும். சாட்சியம் அளிக்கவுள்ளவர்களுக்கான அழைப்புக்கடிதங்கள் மாவட்ட செயலகம் ஊடாக உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


முல்லைத்தீவு மாவட்டத்தில் மிக நீண்ட தூரத்தில் உள்ள துணுக்காய், மாந்தைகிழக்கு ஆகிய பிரதேச செயலகங்களுக்குட்பட்ட முறைப்பாட்டாளர்கள் வருகை தருவதற்கு விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் சாட்சியமளிப்பதற்கு எதிர்வரும் 28ஆம் திகதியும் வவுனியா மாவட்டத்திற்குட்பட்ட மக்கள் எதிர்வரும் 29ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரையிலும் அந்தந்த மாவட்ட செயலகங்களில் காலை 8.30மணி தொடக்கம் பிற்பகல் 5.30 மணிவரை ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்தது.இதன்பின்னர் மூன்று மாத கால பதவி நீடிப்பை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கியிருந்தார். (2-15)

# எமது சொந்த இடத்தில் குடியேற அனுமதியுங்கள்

## கேப்பாப்பிலவு மாதிரி கிராமமக்கள் உணவு தவிர்ப்பு போராட்டம்







(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாப்பிலவு மாதிரி கிராமமக்கள் தம்மை தமது சொந்த இடமான கேப்பாப்பலவில்மீளக்குடியமர்த்துமாறு கோரி உணவு தவிர்ப்புப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10மணியளவில் கேபபாப்பிலவு மாதிரிக் கிராம பிள்ளையார் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த உணவுத்தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவருக்கு ஆதரவு தெரிவித்து ஊர் மக்களும் இணைந்து மேற்கொண்டனர்.

குறித்த உணவுத் தவிர்ப்பினில் ஈடுபட்டவர் தனக்கு ஜனாதிபதியினுடைய எழுத்துமூல உறுதிமொழி கிடைக்கும் வரை (எனது காணியில்) மீளக்குடியமர்த்துவதாக) இந்தப் போராட்டம் தொடருமென தெரிவித்துள்ளார்.

இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும்வகையில் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஶ்ரீஸ்கந்தராசா கலந்து கொண்டார்.

இதன்போது மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

நாங்கள் கடந்த பல நுறு ஆண்டுகளாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த எமது பூர்வீக நிலம் தற்போது இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டு உள்ளது



இதற்கு மாற்றீடாக கேப்பாபிலவு மாதிரிக் கிராமமென 20 பேச் காணிகளை வழங்கி எம்மை சிறைக் கைதிகளாக வைத்துள்ளனர்

தற்போது நாட்டில் நிலவும் கடும் வறட்சி காரணமாக கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் குடிநீர் உள்ளிட்ட நீர்ப் பிரச்சினை காணப்படுவதாகவும் ஐந்து பத்து ஏக்கர் காணிகளில் சுதந்திரமாக விவசாயம்,கால் நடை வளர்பபு,மீன்பிடி என சொந்தத் தொழில் செய்த நாம் தறபோது தொழிலற்ற நிலையில் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகினறோம்.

எனவே எமக்கு எந்த வித காரணமும் சொல்லாது இந்த நல்லாட்சி அரசாங்கம் எமது காணிகளை உடனடியாக விடுவித்து எமது சொந்த நிலத்தில் குடியேற அனுமதிக்க வேண்டும்.இரா ணுவத்தினர் வேண்டுமா னால் காடுகளில் இருக்கட்டும். எமது 520 ஏக்கர் காணிகளை எமக்கு கையளிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா கருத்து தெரிவிக்கையில்,

இந்த கேப்பாபிலவு மக்கள் தமது பூர்வீக நிலத்தை விடுவிக்குமாறு கோரி ஒரு அமைதியான உண்ணா விரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். எமது மக்கள் இடம்பெற்ற யுத்தத்திலே பாரிய இழப்புக்களை சந்தித்து இடம்பெயர்ந்து மீள் குடியேறி கடந்த ஏழு வருடங்களாக இன்றும் ஆகாரமின்றி,நீரின்றி தமது உரிமைகளை, அடிப்படை வசதிகளை கோரி இவர்கள் போராடுவது மிகவும் வேதனைக்குரியது. நல்லாட்சி அரசு உருவாகி ஒருவருடம் கடந்தும் மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை மிகவும் வேதனைக்குரியது

இவர்களது பூர்வீக நிலங்களை கையகப்படுத்தி வைத்திருப்பது மட்டுமல்ல மக்களின இயல்பு வாழ்க்கைக்கு பங்கமேற்படுத்தும் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.இந்த வகையில் இம்மக்களுடைய காணிகளை இராணுவம் வைத்திருக்கிறது.முறிகண்டி குளத்தை 59 ஆவது படைப்பிரிவு கையகப்படுத்தி வைத்திருக்கிறது. கடல்வளத்தை தென்பகுதி மீனவர்கள் சுரண்டிச் செல்கின்றனர்.

இவ்வாறு எமது மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் பல்வேறு செயற்பாட்டை பல்வேறு தரப்பினருமமேற்கொண்டு வருகின்றனர்.காடழிப்பு இடம்பெறுகிறது. ஆகவே இந்த நல்லாட்சி அரசை நான் மிகவும் பணிவாக வேண்டுவது எமது மக்களது அடிப்படைத்தேவைகளை அடிப்படைப் பிரச்சினையை இனம்கண்டு அவர்களது சொந்த நிலங்களை அவர்களிடம் கைய ளித்து எமது மக்களின் இய ல்பு வாழ்க்கைக்கு வழிசமைத்து கொடுக்குமாறும் கோரிக்கை விடுத்தோடு இவ்வாறான சாத்வீகப் போராட்டங்கள் மீண்டும் ஆயுதப் போராட்டமாக வெடிக்காதிருக்க நல்லாட்சி முன் வர வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தார். (2-9-281)




## மத்திய வங்கி பாதையை அடையாளப்படுத்தும் பெயர்ப்பலகையில் தமிழ் சொற்பிழைகள்




கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் அமைந்துள்ள மத்திய வங்கிக்கு செல்லும் பாதையை அடையாளப்படுத்தும் பெயர்ப்பலகையில் பல்வேறு தமிழ் சொற்பிழைகள் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த பெயர்ப்பலகையில் தமிழ் மொழியில் குறிக்கப்பட்டுள்ள சொற்களில் பல தவறுகள் காணப்படுவதாக தெரிவிக்கும் மக்கள், தமிழ் மொழியை கொச்சைப்படுத்துவது போன்று செயற்பாடு அமைந்துள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இலங்கை மத்திய வங்கி பிரதேச அலுவலகம் கிளிநொச்சி என்ற பெயர்ப்பலகையில் கீழ்வருமாறு சொற்பிழைகள் விடப்பட்டுள்ளன.

பிர(நே)ச அலுவல(ச)ம் கிளி(தொக்)சி என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த அலுவலகத்திற்கு செல்லும் தூரம் ஒரு கிலோ மீற்றராக இருக்க, 10 கிலோ மீற்றர்எனவும் அடையாளமிடப்பட்டுள்ளது,

நாட்டில் தமிழ் மொழியும் தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும, அரச அலுவலகங்க ளில் தமிழ் மொழி எழுத்து பிழைகளுடன் காட்சிப்படுத் தப்பட்டுள்ளமை தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட கல்விய ளாளர கள், புத்திஜீவிகள் கவலை தெரிவிக்கின்றனர். (2-15)

## கழிவுகள் கலந்து அசுத்தமாக காணப்படும் முறிகண்டி பிள்ளையார் ஆலய கிணறு

### விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு பக்த அடியார்கள் கோரிக்கை



ஏ-9 வீதியில் அமைந்துள்ள முறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் கிணற்றில் பல்வேறு கழிவுகள் கலந்து அழுக்கு படிந்த நீராக காட்சியளிப்பதாக ஆலயத்திற்கு வருகை தருகின்ற பக்த அடியார்கள் கவலை தெரிவிக்கின்றனர்,

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஏ9 வீதி அமைந்துள்ள முறிகண்டி பிள்ளையார் ஆலயம் பிரபல்யம் மிக்க ஆலயங்களில் ஒன்றாகும். குறித்தவீதியின் ஊடாக பயணம் செய்யும் பிரயாணிகள் செல்லும் வழியில் ஆலயத்திற்கு சென்று திரும்புதல் வழமையாக காணப்படுகின்றது,இவ் ஆலயம் அமைநதுள்ள பகுதியில்உள்ளகிணறே இதுவாகும்.

குறித்த கிணறு அசுத்தமாக காணப்படுகின்றது. அக் கிணற்றிலிருந்து பெறப்படும் நீரை பயன்படு த்தி பல்வேறு உணவுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. கோவிலை அண்டிய பகுதியில் உள்ள தேநீர் கடைகளும், ஏனைய வர்த்தக நடவடிக்கைகளுக்கும் குறித்த கிணற்றிலிருந்து நீர் பெறப்பட்டு பயன்படுத்தப் படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு அசுத்தமாக காணப்படும் கிணறு தொடர்பில் ஆலய நிர்வாகமோ, புதுக்குடியிருப்பு பிரதேச சபையினரோ அக்கறை செலுத்தவில்லை என தெரிவிக்கும் மக்கள், அங்கு பெறப்படும் சிற்றுண்டி வகைகளின் சுகாதாரம் தொடர்பில் கேள்வி எழுவதாக தெரிவிக்கின்றனர்.

குறித்த கிணறு பல்வேறு கழிவுகள் கலந்து,அழுக்கு படிந்த நீராக தற்போது காட்சியளிக்கின்றது. (2-15)

# எம்.பிக்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பதில்லையென தீர்மானம்

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பதில்லையென கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிப்பது தொடர்பாக பல்வேறு விமர்சனங்களும் சர்ச்சைகளும் எழுந்துள்ள நிலையில் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இவ்விடயம் ஆராயப்பட்டது.

இதன்போதே மேற்படி கொடுப்பனவுகள் வழங்குவது தொடர்பான செயற்றிட்டங்கள் மீளப்பெற்றுக்கொள்ளும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரித்து வழங்குவதற்கான பிரேரணையை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு அனுப்பி வைப்பதென கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் இந்த பிரேரணையை நேற்று முன்தினம் மாலை நடைபெறவிருந்த அமைச்சரவைக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதாக தீர்மானிக்கப் பட்டபோதும் பின்னர் அத்தீர்மானம் மாற்றப்பட்டுள்ளது.

எனினும் மாதிவெல வீடமைப்புத் தொகுதியில் குடியிருக்காத பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டு வாடகைக் கொடுப்பனவாக தலா 50 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கான யோசனையை ஆராய்வது தொடர்பாக கட்சித் தலைவர்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளனர். (இ-5)

# விபத்தில் சிறுவன் பலி நான்கு பேர் படுகாயம்

மொஹாமட் ஆசிக் கண்டி, பூஜாப்பிட்டியவில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற ஆட்டோ விபத்தில் 13 வயது சிறுவன் உயிரிழந்துள்ளதுடன் மேலும் நான்கு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பூஜாபிட்டியவைச் சேர்ந்த திலின குமார என்ற சிறுவனே விபத்தில் உயிரிழந்துள்ளார். மேற்படி நால்வரும் நேற்றுமுன்தினம் மாலை ஆற்றில் நீராடிவிட்டு ஆட்டோவில் வீடு திரும்புகையிலே விபத்து சம்பவித்துள்ளது. ஆட்டோவை 16 வயது சிறுவன் செலுத்தியுள்ளதாகவும் ஆட்டோ கட்டுப்பாட்டை இழந்து பயணித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களில் இருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# முன்னாள், இந்நாள் எம்.பிக்கள் 19பேர் விசாரிக்கப்பட்டுள்ளனர்

கடந்த வருடம் ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரையில் முன்னாள் மற்றும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 19 பேர், நிதிக்குற்றப் புலனாய்வு பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

மாநாண சபை உறுப்பினர்கள் ஐவர், பிரதேச சபை உறுப்பினர்கள் இருவர் மற்றும் நகரசபை உறுப்பினர் கள் மூவரும் விசாரணை க்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது கேட்கப்பட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே சட்ட மற்றும் ஒழுங்கு கள அமைச்சர் சாஹல ரத்நாயக்க தெரிவித்தார். (இ-5)

# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்- இல.03

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

பகுதி-II விடைகள்

23.03.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை

| | |
|---|---|
| 011. சுத்தம் பற்றி அல்லது சுகாதாரம் பற்றி | 19. 4 |
| 2.I.சுந்தர மேனி உண்டாகும் | 20.4 |
| II.சோம்பலை தவிர்க்கும் | 21. 1 |
| 3.கந்தையானாலும் கசக்கிக் கட்டு | 22.4 |
| 4.சுத்தமான அல்லது சுகாதாரமான உடல் | 23.1 |
| உண்டாகும் | 24.2 |
| 5.அளித்தது | 25.2 |
| 6.அம்மா | 26.4 |
| 7.கேள்விக்குறி-?, முற்றுப்புள்ளி-. | 27.4 |
| ஆச்சரியக்குறி-!, காற்புள்ளி-; | 28.2 |
| 8.கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை | 29.4 |
| 02. 1.விடாப்பிடி -பிடிவாதம் | 30.1 |
| 2.அதிர்ஷ்டத்திற்கு மேல் அதிர்ஷ்டம் | 31.4 |
| 03. 1. பெரியோர்க்கு மரியாதை செய்வது | 32.1 |
| சிறுவர்களாகிய எமது கடமையாகும். | 33.22cm |
| 2.பொதுச்சொத்து என்பது நம் நாட்டில் | 34.1/3 அல்லது 2/6 |
| வாழும் அனைவரினதும் சொத்தாகும். | 35.1/4 அல்லது 4/16 |
| 04. 1.பரந்து 2.அறிவுரைகளை | 36.59900-ஐம்பத்தொன்பதாயிரத்து |
| 3.முயற்சித்தால் | தொள்ளாயிரம் |
| 05. 1.காட்டுத்தீ 2.சுரங்கம் | 37.0.2,0.3,0.8,1.1 |
| 3.மாலுமி | 38.315/= |
| 06. 1.பகலும் 2.கருத்தும் | 39.450 |
| 3.முற்றும் | 40.20 நிமிடம் |
| 07. 1.சிறிய குடிசை 2.அதிர்ஷ்டம் | 41.45 |
| 08. 1.Flowers 2.Butterfly | 42.2679 |
| 09. 1.உங்களுடைய புத்தகங்களைதிறவுங்கள் | 43.Open |
| 2. தயவு செய்து சத்தம் போடாதீர்கள் | 44.3cm |
| 10. 1.காகம் கறுப்பு நிறம் | 45.690,501 |
| 2.அம்மா சோறு சமைக்கிறார் | 46.292,310 |
| 11. 3 | 47.தியாகம் |
| 12.4 | 48.குன்று |
| 13.2 | 49.பாதாளம் |
| 14.3 | 50.இன்பம் |
| 15.3 | 51.அமைச்சர் |
| 16.4 | 52.--- |
| 17. 1 | 53.--- |
| 18.3 | 54.--- |

# புனித வெள்ளியும் துரோகமுத்தமும் அன்று ஆனால் இன்று நாம் அன்பால் முத்தமிடுவோம்



ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

பைபிளின் படி நோக்கும் போது நாம் யூதசங்கத்தில் தான் கல்வாரி கருபெற்றது என்று ஆணித்தரமாக கூறலாம். பின்னர் உருவம் பெற்று யூதாஸின் தலைமையில் கேத்சமனி தோட்டத்திற்கு வருகின்றது. யூதாஸின் முத்தத்தால் அனைத்தும் அரங்கேறுகின்றன. இயேசுவை சிலுவையில் உயிர் விடுவதற்கு முன்னமே யூதாஸின் முத்தம் அவனை கொன்று விடுகிறது. அன்பு கருணைகொண்ட இயேசுவோடு வாழ்ந்தது உண்மைதான். ஆனால் யூதவீரர்களுடன்இயேசுவுக்கு முடிவை கட்ட வந்தபொழுது தன் முடிவையும் தானேஎழுதிக்கொண்டான்.சீடர்களிற்கு மத்தியில் உள்ள அவரை நீதான் தொட்டு அடையாளம் காண்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டான் யூதாஸ். ஆனால் அவன் தொட்டு என்ன கட்டியணைத்து, கன்னத்தில் முத்தம் இட்டேஅடையாளம்காணபிக்கிறேன் என்றான். ஏனெனில் யூதாஸ்,தான் இயேசுவால் ஏமாற்றப்பட்டதாக உணர்ந்தார், அதற்காக அவரை மறுதலிக்கத் தீர்மானித்தார், யூதாஸ்உரோமை ஆதிக்கத்தை வெறுத்த ஒரு தீவிரவாத யூதன். உரோமையருக்கு எதிராகப் புரட்சியைத் தூண்டக் கூடிய வெற்றிகளைக்கொண்டு வரும் மெசியாவை அவன் விரும்பினான்.அவ்வாறு இயேசு இல்லாதது கண்டு யூதாஸ் தனது எதிர்பார்ப்புகளால் ஏமாற்றமடைந்தான்.

முத்தம் என்பது குறிப்பு - உருவகச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அக்கால கிரேக்க இலக்கியங்களில் குறிப்புச் சொற்களும் வர்ணனைகளும் மிகுதியாக பயன் படுத்தப்பட்டன. மறைபொருட்கள் கொண்டவார்த்தைகள் பண்பாக பிறர் மனதுக்கு புரியும்படி எடுத்துக்கூறும் செயலே "வாயில் முத்தமிடுதல்" என்று உருவகமாக குறிப்பிடப்படுகிறது. "பலமுறை வாயில் முத்தமிட்டார்" என்பதற்கு "பலமுறை மறை பொருட்களை கூறினார்" என்பதே பொருள்.

விசுவாசத்தின் இலட்சியம் முறிந்த இடம் இது. அவன் தந்த முத்தம்தான் இயேசுவை கொன்றமுதல் ஈட்டி. யூதாஸ் இயேசுவை காட்டிக் கொடுக்க முத்தத்தை தேர்ந்தெடுத்தான். தந்தை மகனின் முத்தம் அன்பின் வெளிப்பாடாகும். ஊதாரி மகன் திரும்பிவந்த பொழுது ஓடிப்போய் அவனது தந்தை கட்டியணைத்து முத்த மிட்டார். அப்படிப்பட்ட அன்பின் வெளிப்பாடான முத்தத்தை ஏன் அடையாளமாக யூதாஸ்தேர்ந்தெடுத்தான். யாரை நான் முத்தமிடுகிறேனோ அவரைப் பிடித்துகொள்ளுங்கள. அவர்களுக்கு அடையாளமாக சொல்லியிருக்கின்றான். வேறு எந்த அடையாளத்தையும் எடுக்காமல் முத்தத்தை ஏன் தேர்ந்தெடுத்தான்?

பைபிளில பல இடங்களில முத்தத்தை அன்பின் அடையாளமாக காட்டப்படுகிறது: லாபான் யாக் கோப்பைகட்டிக் கொண்டு முத்தம் செய்தது, யாக கோபுரா கோலைமுத்தம் செய்தது, யாக்கோபுதன் சகோர்தரர் எசாவை முத்தம் செய்தது. தாவீது யோனத்தனை முத்தமிட்டான்.

யோவாப் அமாசா என்பவனை பார்த்து அவனை முத்தஞ்செய்யும் படிசென்று தன் வலது கையில் உள்ள வாளால் வயிற்றிலே குத்த அமாசா இறந்து போனான் என்று பைபிளில் சாமுவேல் புத்தகத்தில் கூறப்படுகின்றது. இந்த சம்பவம் சொல்லும் செய்தி என்ன? நண்பன் என்ற முறையில் முத்தம் செய்து சாகடித்து விட்டான் என்பதாகும். எனவே அன்பை பரிமாறும் முத்தம் கொல்லவும் தயங்காது என்றும் சித்தரிக்கப்படுகின்றது.

யூதாஸ் இதைத்தான் செய்தான் அவனதுவாய் முத்தமட்டது. ஆனால்அது இயேசுவின் உள்ளத்தில் வாளாக ஊடுருவியது.தெளிவாக கூறுவான் நான் முத்தமிடுபவனை பிடித்து காவலோடு கொண்டு போங்கள். இயேசுவை இங்கு தான் சீடர்கள் கைவிடுகிறார்கள். யூதசங்கத்தார் முகத்தில் துப்புகிறார்கள் அடிக்கிறார்கள் - யார் அடித்தது? என்று தீர்க்கதரிசனம் கேட்கிறார்கள். மாசற்ற மனிதன் என்று தனது மனசுக்குள் தீர்ப்பு எழுதிவிட்டு, மதகுருக்களின் கோரப்பிடியிலிருந்து இயேசுவை விடுவிக்க நினைத்த அரசன் பிலாத்துவும் யூதர்களின் துரோக வெறிக்கு முன்னால் தோற்றுப் போனவனாய்க் கை கழுவி விட்டான். கொலைகாரனும் கள்வனு மானபார பாசுக்கு கருணை காட்டத் துணிந்த யூதர்கள் தங்கள் இரட்சகனுக்கு முள்முடி சூட்டி வேடிக்கை பார்த்தார்கள். பேதுரு மறுதலித்தார். மக்கள் சிலுவையில் அறையும் என்றனர். இருள் சூழ்ந்தது. இயேசுவும் கதறினார் - உயிரை விட்டார். ஏற உதவிய ஏணி, ஆணிகளுக்குள் அடைபடுகிறது. முத்தம் தந்து முடிவு எழுதினான் யூதாஸ்.யூதாஸ் தந்த முத்தம் இந்த சம்பவங்களுக்கு தொடக்கம். நெஞ்சை உருக்கும் இரத்த கறை படிந்த பக்கங்கள்.

இயேசுவை முத்தம் செய்த பொழுது - இயேசு யூதாஸிற்கு கூறியவார்த்தை:தோழா- நண்பா எனஅன்புஒழுகும் பாசமானவார்த்தை. இயேசு மனிதநேயத்தை காட்டும் மாண்பின் நேரம். நீங்கள் என் நண்பர்கள். ஊழியர் என்று சொல்லேன் என்று சீடர்களுக்கு கூறுகின்றார். அதன்படி முதன்முதலில் தோழா என்று தன்னை காட்டி கொடுக்கும் சமயத்தில் கூறுவதுசொல்லும் செயலும் ஒன்றி வாழ்பவர் இயேசு என்பதை தெளிவாகக் காட்டுகிறது. இந்த முத்த சத்தம் பைபிளில் மூன்று நற்செய்திகளிலும் எதிரொலித்தது. யூதாஸ் செய்த முத்தத்தால் அன்று முதல் இனறுவரை நட்பு என்ற போர்வையில நம்பிக்கை துரோகம் செய்கிறவர்க ளைக் குறிப்பிட அவனது பெயரே- யூதாஸ் பயன்ப டுத்தப்படுகிறது.

இயேசு தன் துயரத்தின் தூரமும்,வேதனையின் தாக்கமும்,உரோமை மரணத்தின் கொடுமையும் அறியதாவர் அல்லர். ஆனால் துரோகத்தின் வித்து யூதாசின் முத்தத்தில் புதைந்து கிடக்கிறது என்று அறிந்தபோதுதான் துடித்துப் போயிருப்பார். முப்பது வெள்ளிக் காசில் யூதாசும் யூதர்களும் தொடக்கிய ஒரு துரோக வரலாறு இயேசுவைக் காட்டிக்கொடுக்கும் அந்த ஒரு முத்தத்தோடு முடிந்து போகும் என்றுதான் வஞ்சக மதகுருக்கள் நினைத்தார்கள். புனிதத்தின் வரலாறு அங்கேதான் ஆரம்பமாயிற்று. ஆனால் பணப்பித்தால் பச்சைத் துரோகம் என்னும் பாவத்தைச் செய் தோமே என்னும் மனசின் உந்துதலால் மாசற்ற இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தேனே என்று சொல்லி யூதாசு தானேதன் மரணத்தைத் தழுவிக் கொணடான். இறைவனால் நியமிக்கப்பட்டவர்களுக்கு விரோதமாகத் துரோகம் செய்ததால் கேவலமான முடிவைச் சந்திக்கநேரிடும் என்பது தெளிவாகிறது. எனவே, பதவி ஆசையும் பேராசையும் நம் கண்களை மறைத்து விட நாம் ஒரு போதும் அனுமதிக்கக் கூடாது. நம்பிக்கை துரோகம் என்ற கொடிய குணத்தை அறவே வெறுக்க இந்த கசப்பான அனுபவங்களும் நமக்குப் பெரிதும் உதவும். யூதாசின் முத்தத்தின் கறையோடு வரலாறு சொல்லும் நற்செய்திப் பக்கங்களில் இரக்கத்திற்கும் கருணைக்கும் முத்தம் முதலுரை எழுதுவது புதையுண்டு இருக்கிறது. ஊதாரிமகன் திரும்பி வந்த பொழுதுஓடிப்போய் அவனது தந்தை கட்டியணைத்து முத்தமிட்டார்.நாம் அன்பால் முத்தமிடுவோம்.

# தாஜுடீன் கொலை தொடர்பான சாட்சியங்களை அழிக்க முயற்சி

(கொழும்பு)

**றக்பி வீரர் வசீம் தாஜுடீன் கொலை தொடர்பிலான சாட்சியங்களை அழிக்க முயற்சிக்கப்பட்டுள்ளதாக நீதிமன்றிற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என சிங்களப் பத்திரிகையொன்று இது பற்றிய தகவலை வெளியிட்டுள்ளது.**



தாஜுடீனின் தொலைபேசி அழைப்பு விபரங்களை, வேறு குற்றவாளி ஒருவரின் பீ அறிக்கையின் ஊடாக பெற்றுக்கொண்டு தாஜுடீன் கொலை குறித்த சாட்சியங்களை மூடிமறைக்கவும் அழிக்கவும் முயற்சிக்கப்பட்டுள்ளது.

கொலை இடம்பெற்ற காலத்தில் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவில் கடமையாற்றிய தரப்பினர் இவ்வாறு சாட்சியங்களை அழிக்க முயற்சித்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் சிலர் நீதிமன்றிற்கு கடிதமொன்றின் மூலம் இந்த முறைப்பாட்டை செய்துள்ளனர்.

அண்மையில் இந்த கடிதம் நீதிமன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தாஜுடீன். வழக்கின் ஆவணங்களில் ஒன்றாக இந்த கடிதத்தை கொழும்பு மேலதிக நீதவான் நிஸாந்த பீரிஸ் ஆவணப்படுத்தியுள்ளார்.

சாட்சியங்களை அழிப்பதற்கு அப்போது கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் முயற்சித்துள்ளார்கள் என குறிப்பிடப்பட்டுள்ள கடிதத்தின்பிரதிகள்ஜனாதிபதி, பிரதமர், பிரதம நீதியரசர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் நீதவானுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(இ-5)

## யோகேஸ்வரனுக்கு எதிராக நான் நடவடிக்கை எடுப்பேன் சிப்லி பாருக் எச்சரிக்கை

இஸ்லாமியர்கள் வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு உதவி செய்து மதம் மாற்றுவதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கூறிய கருத்தை இரு வாரங் களுக்குள் வாபஸ் பெறாவிட்டால், அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன் என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாருக தெரிவித்தார்.

நல்லாட்சியில் இன உறவினை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக பல்வேறு தரப்பினரும் செயற்பட்டு வரும போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருக்கும் சிலர் இவ்வாறான இனவாத கருத்துகளை தெரிவித்துவருவது இன ஐக்கியத்தினை பாதிக்கும் செயற்பாடு எனவும் அவர் தெரிவித்தார்.

சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் பேசும் மக்கள் தொடர்பில் துவேசங்களை கதைத்து வாக்குகளைப்பெறும் நடவடிக்கையினை மகிந்த தரப்பினர் மேற்கொண்டு வரும் நிலையில் மறுபக்கத்தில் தமிழ் மக்கள் மத்தியில் முஸ்லிம்கள் தொடர்பிலான துவேசங்களை கதைத்து வாக்கினை பெறும் நடவடிக்கையினை பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் போன்றவர்கள் மேற்கொண்டுவருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

கடந்த பாராளுமன்ற தேரதலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இவ்வாறான இனவாத போக்குடன் செயற்பட்ட இருவரை தமிழ் மக்கள் நிராகரித்தனர். அதேபோன்று எதிர்வரும் காலங்களில் வரும் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் போன்றவர்கள் நிராகரிக்கப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த 30 வருடகால யுத்த சூழ்நிலையினால் சீர்குலைந்துள்ள தமிழ்-முஸ்லிம் மக்களின் இன உறவினை கட்டியெழுப்பும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் இவ்வாறான செயற்பாடுகள் இனநல்லுறவினை பாதிக்கும் செயற்பாடுகள் எனவும் அவர் தெரிவித்தார்.


இஸ்லாமியர்கள் ஒரு போதும் உதவிகளை வழங்கும்போது பிரதி உபகாரத்தினை எதிர்பார்ப்பதில்லையெனவும் அவ்வாறான நிலையில் இவ்வாறான கருத்துகளை ஒரு மதகுரு நிலையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளதானது மிகவும் கண்டிக்கத்தக்கது எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்களை விட முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து வாழ வேண்டும் என்று செயற்பட்டு வரும் நிலையில் இவ்வாறான கருத்துகளை வெளியிடுவதை அரசியல்வாதிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (இ-5)

## எக்னெலிகொட சம்பவத்துடன் கோத்தபாயவுக்கு தொடர்புண்டு

### எனக் கூறுமாறு படையினருக்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறதாம்

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு தொடர்புண்டு என கூறுமாறு படைவீரர்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுவதாக படைவீரர்களை பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் பெங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார்.



நேற்று முனதினம் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சுனில் ரட்நாயக்க என்ற படைவீரர் இதனைத் தெரிவித்துள்ளார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கோத்தபாய ராஜபக்ஷ இந்த சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளதாக வாக்குமூலமொன்றை அளிக்குமாறு எனக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது என சுனில் ரட்நாயக்க கூறியிருந்தார்.

கடந்த 21ஆம் திகதி சுனில ரட்நாயக்கவின் பிறந்த நாளாகும். நான் உள்ளிட்ட 3 பௌத்த பிக்குகள் சென்று சுனில் ரட்நாயக்கவை பார்வையிட்டோம். மூன்று பௌதத பிக்குகளுக்கு மட்டுமே சுனில் ரட்நாயக்கவை சந்திக்க அனுமதிக்கப்பட்டது.நாம் சிறைக்குச சென்று பிரித்சொல்லி அவரது மனதைவலிமையாக்கினோம்.

கோத்தபாய இதனைச் செய்யச் சொன்னார் என கூறுமாறு அழுத்தம் கொடுக்கின்றார்கள் எனவும், அவ்வாறு செய்யாத விடயத்தை நாம் எவ்வாறு கூறுவது எனவும் சுனில் ரட்நாயக்க எம்மிடம் தெரிவித்தார்.

புலனாய்வுப் பிரிவு படையினரை கைது செய்து தடுத்து வைத்துள்ள நீதவான் கூட எக்னெலிகொட கொல்லப்பட்டமைக்கோ, கடத்தப்பட்டமைக்கோ சாட்சியங் கள் கிடையாது என கூறுகின்றார்.அவ்வாறான நிலையில் படைவீரர்களை சிறையில் தடுத்து வைத்திருக்க முடியாது.

சானி அபேசேகர என்ற பொலிஸார் ஒருவர் பிரதமர் ரணிலின் உத்தரவுகளை பின்பற்றுகின்றார். சானி உள்ளிட்ட சில பொலிஸார் அரசியல் நோக்கங்களின் அடிப்படையில்செயற்படுகின்றனர்.

சட்டத்தரணியான திலீப் பீரிஸ் என்பவர், சட்டத்தரணிசேவைக்கே அவமானம் ஏற்படும் வகையில் செயற்படுகின்றார்.

இங்கிலாந்தின் தேவைக்கு ஏற்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க படைவீரர்களை கைது செய்கின்றார் என பெங்கமுவே நாலக்க தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## தலவாக்கலையில் விபத்து நான்கு பேருக்கு படுகாயம்

அட்டன் நுவரெலியா பிரதான வீதியில் தலவாக்கலை சென்கிளயார் விகாரைக்கு அண்மித்த பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி விபத்து நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கார் ஒன்றும் ஆட்டோ ஒன்றும்நேருக்கு நேர்மோதியதினாலேயே மேற்படி விபத்து இடம்பெற்றுள்ளதுடன் காயமடைந்த நான்கு பேர் பலத்த காயங்களுடன் கொட்டகலை வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.லிந்துலை பாமஸ்டன் பகுதியிலிருந்து கொட்டகலை நோக்கி பயணித்த ஆட்டோ ஒன்றும் கொழும்பிலிருந்து நுவரெலியா பகுதியை நோக்கி பயணித்த கார் ஒன்றுமே இவ்வாறு மோதியுள்ளதாகவும் பொலிஸாரின் முதற்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

கார் சாரதியின் கவனயீனம் காரணமாகவே இவ் விபத்து நேர்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார மேற்கொண்டுள்ளனர்.(இ-5)

## அம்பலமானது மத்தள விமான நிலையத்தின் வியாபாரம்

(கொழும்பு)

மத்தள விமான நிலையம் ஊடாக வயது குறைந்தோரை வெளிநாடுகளுக்கு அனுப்பும் கும்பல் தொடர்பில் தகவல்கள் வெளிவந்துள்ளன.




இது ஒரு வர்த்தக நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளதால், இது தொடர்பான தகவல்களை வெளியிட வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் முன்வந்துள்ளது.

மேலும், 17,18,19 ஆகிய வயதுகளையுடையோருக்கு போலி கடவுச்சீட்டுக்களைத் தயாரித்து அவர்களை மத்தள விமான நிலையம் ஊடாக வெளிநாடுகளுக்கு அனுப்பும் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த மூவரை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

மேலும், குறித்த நபர்கள் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துகோரளவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய வேலைவாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் மற்றும் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது கொழும்பு மருதானை பிரதேசத்தில் வைத்து குறித்த மூவரையும் கைது செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட நபர்கள் அபுதாபி, சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு வயது குறைந்தோரை அனுப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்ததாகவும் இதற்கு மத்தள விமான நிலையத்தின் அதிகாரிகள் சிலரது ஒத்துழைப்பு கிடைத்ததாகவும் சந்தேகநபர்கள் தெரிவித்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)

# முதன் முறையாக கடலுக்கு அடியில் உயிரியல் பூங்கா



கடல்வாழ் உயிரினங்களை சுற்றுலா பயணிகள் நேரடியாக கண்டு ரசிப்பதற்காக மாமல்லபுரத்தில் கடலுக்கு அடியில் உயிரியல் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல நாடுகளில் கடல்வாழ் உயிரினங்களை கண்டுகளிப்பதற்காக பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதேபோன்று இந்தியாவல் முதன்முறையாக மாமல்லபுரத்தில் கடலுக்கு அடியே உயிரியல் பூங்கா அமைக்கப்படவுள்ளது.

இதுகுறித்து மீன்வளத்துறை அதகாரிகள் கூறுகையில்,

கடலுககு அடியில் உள்ள அற்புத உலகத்தையும், அங்கு வசிக்கும் உயிரினங்களையும் பார்த்து பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்ள மாமல்லபுரத்தில் கடலுக்கு அடியில் உலக தரத்தில் 'உயிரியல் பூங்கா' அமைக்கப்பட உள்ளது.

உயிரியல் பூங்காவில் கடலுக்கு அடியில் உயிரினங்களை நேரடியாக காண்பதற்காக 150 மீற்றர் நீளத்திற்கு சுரங்கப்பாதை அமைக்கப்படுகிறது.

அத்துடன் 6.54 ஏக்கர் நிலப்பரப்பில் நீர்வீழ்ச்சிகளுடன் கூடிய ஓய்வு எடுக்கும் பகுதி, 50 சிறிய தொட்டிகள், 60 சுவர் எழுப்பப்பட்ட தொட்டிகள், குள்ளமானவர்கள் முதல உயரமானவர்கள் வரை செல்லும் வகையில் 9 மீற்றர் சுற்றளவு கொண்ட 5 உருளை தொட்டிகள், 300 கடல் வாழ் உயிரினங்களை 20 ஆயிரம் பேர் காணும் வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. மேலும் அந்தமான் நிக்கோபா தீவுகளில் இருந்து கடல் மீன்கள் கொண்டு வந்து விட முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி பல்லூடக தரையரங்கு, சுறாக்களுடன் நீச்சல் அடிக்கும் வசதி, பயணிகள் தங்குவதற்கு சொகுசு அறைகள், 50 பென்குயின்கள் அடங்கிய பூங்கா, விளையாட்டு அரங்கம் உட்பட பல்வேறு சிறப்பான வசதிகள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (இ-5)

# நிர்வாகிகளோ, உதவியாளர்களோ இன்றி ஜெயலலிதாவே நேர்காணல் நடத்துகிறார்



சென்னை போயஸ் கார்டனில் உள்ள ஜெயலலிதாவின் இல்லத்தில் அ.தி.மு.க. வேட்பாளர் நேர்காணல் நேற்று 3 ஆவது நாளாக நடைபெற்றது. அ.தி.மு.க. பொதுச் செயலாளரும் முதல்வருமான ஜெயலலிதாவே நேரடியாக வேட்பாளர்களை வரவழைத்து நேர்காணல் நடத்தி வருகிறார்.

நேற்றைய நேர்காணலில் சிவகங்கை, விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றுள்ளனர். விருப்புமனு தாக்கல் செய்தவர்கள் மாவட்ட வாரியாக அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் வெயிலில் காத்திருக்க வைக்கப்படாமல் போயஸ் கார்டன் இல்லத்தில் உள்ள ஏ.சி. அறையில் 50 பேராக அமர வைக்கப்படுகிறார்கள்.


பின்னர் முதல்வர் ஜெயலலிதா ஒவ்வொருவரையும் தனித் தனியாக அழைத்து விசாரிக்கிறார். அவர்களது குடும்பப் பின்னணி, கட்சிப் பணியாற்றும் விதம், தொழில் உள்ளிட்டவை பற்றி விசாரிக்கிறார். மூத்த நிர்வாகிகளோ, உதவியாளர்களோ யாரும் இன்றி ஜெயலலிதாவே நேர்காணல் நடத்துகிறார். அவர்கள் அளிக்கும் பதில்களை தன் கைப்பட குறிப்பு எடுத்துக் கொள்கிறார். ஒவ்வொரு தொகுதிக்கும் எத்தனை பேர் விருப்புமனு கொடுத்துள்ளனர் என்பதை கையில் வைத்துக் கொண்டு அனைவரிடமும் விசாரித்து அவர்களில் இருந்து ஒரு வேட்பாளரை தேர்வு செய்கிறார்.

இதனால் நேர்காணலுக்கு சென்று திரும்பும் அ.தி.மு.கவினர் உற்சாகம் அடைந்துள்ளனர். நேர்காணலுக்கு சென்று வந்தவர்கள் தமக்கு வாய்ப்புக் கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர். அம்மாவே எங்களை அழைத்து விசாரித்தது மகிழ்ச்சியாக இருக்கிறது. கட்சிப் பணி, தேர்தல் பணி பற்றி எங்களிடம் பரிவுடன் பேசி விசாரித்தார்.

எங்களால் நன்றாக பேச முடிந்தது. எங்கள் கருத்துக்களை கவனமாக கேட்டுக் கொண்டார். அம்மா யாரை வேட்பாளராக அறிவித்தாலும வெற்றிக்கு பாடுபடுவோம் என்று உறுதியளித்துவிட்டு வந் தோம் என்று தெரிவித்துள்ளனர். (இ-5)

# விரைவில் ஏலத்திற்கு வருகின்றது மல்லையாவின் சொகுசு விமானம்

## நிலுவை தொகையை வசூலிக்க சேவை வரித்துறை நடவடிக்கை



(மும்பை)

விஜய் மல்லையாவின் சொகுசு விமானத்தை ஏலம் விட சேவை வரித்துறை முடிவு செய்துள்ளது. 9,000 கோடி ரூபாய் வங்கிக் கடனை திருப்பி செலுத்தாமல் தொழிலதிபர் விஜய் மல்லையா நாட்டை விட்டு வெளியேறி லண்டனில் தஞ்சமடைந்துள்ளார். அவரது சொத்துகளை ஏலம் விட வங்கிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. அந்த வரிசையில் மல்லையா பயன்படுத்தி வந்த சொகுசு விமானத்தை ஏலம் விடப் போவதாக சேவை வரித்துறை அறிவித்துள்ளது.

25 இருக்கைகளுடன் கூடிய இந்த சொகுசு விமானம் மல்லையாவிற்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டது. இந்த ஜெட் விமானம் மே மாதம் 12,13 ஆகிய திகதிகளில் மின்னணு முறையில் ஏலம் விடப்பட உள்ளது. மும்பை விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் விமானத்தை ஏலம் எடுக்க விரும்புவோர், மே 10ஆம் திகதி வரை பார்வையிட்டு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மல்லையாவின் 5 தனி விமானங்களை 2013 ஆம் ஆண்டு சேவை வரித்துறை பறிமுதல் செய்தது. கிங்பிஷர் விமானங்களில் பயணித்தவர்களிடம் பெறப்பட்ட சுமார் 600 கோடி ரூபாய் சேவை வரியை செலுத்தாததே இதற்கு காரணம் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சுரங்க விபத்தில் 19பேர் உயிரிழப்பு

சீனாவில் சுரங்க விபத்தில் சிக்கிய 19 பேர் பலியாகியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. சீனாவில் வடக்கு மாகாணமான ஷான்சியில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் நேற்று முன்தினம் புதனன்று இரவு 10.10 மணியளவில் 129 பேர் பணியாற்றினர். அப்போது எதிர்பாரத விதமாக நடந்த சுரங்க விபத்தில் 19 பேர் பலியாகியுள்ளனர். இந்த விபத்தில் சிக்கிய 110 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்ற முதல் கட்ட தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில் விபத்து குறித்து அந்நாட்டு பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (இ-5)

## பிரஸல்ஸ் தாக்குதல் எதிரொலி

# தீவிரவாதிகளுக்கு எதிராக போர் அறிவிப்பை வெளியிட்ட ஹக்கர்ஸ்

பெல்ஜியம் தலைநகரில் நிகழ்ந்த தாக்குதலையடுத்து ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக இணைய ஹக்கர் குழு போர் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸ் பகுதியில் உள்ள விமான நிலையம் மற்றும் ரயில் நிலையங்களில் தீவிரவாதிகள் தற்கொலை தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 34 பேர் பலியாகினர் மற்றும் நூற்றுக் கணக்கானவர்கள் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலை தாங்கள் தான் நடத்தியதாக ஐ.எஸ். அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் தாக்குதல் நடத்திய ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக இணைய போர் நடத்தப்போவதாக அனானிமஸ் (Anonymous) என்ற இணைய ஹக்கர்ஸ் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அனானிமஸ் வெளியிட்டுள்ள வீடியோவில், ஐ.எஸ்.அமைப்புக்கு எதிரான இணைய பேரணியை தொடர வுள்ளோம்.

ஐ.எஸ். அமைப்பை சேர்ந்த பலரின் டுவிட்டர் கணக்குகளை முடக்கியுள்ளோம். மேலும் அவர்களது தனிப்பட்ட விபரங்களை திருடி அவர்களுக்கு சொந்தமான பணங்களை திருடியுள்ளோம்.

தீவிரவாதிகள் தங்களின் தாக்குதலை நடத்தி வரும்வரை நாங்கள் ஓயப்போவதில்லை. அவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்துவோம.

சகிப்புத்தன்மை மற்றும் சுதந்திரத்திற்கான உரிமைகளை பாதுகாப்போம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக பாரீஸ் தாக்குதல் சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தும் அனானிமஸ் இவ்வாறு மிரட்டலை விடுத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஐரோப்பாவில் தாக்குதல் நடத்த 400 தீவிரவாதிகளுக்கு பயிற்சி

## ஐ.எஸ்.அமைப்பு வழங்கியது

(லண்டன்)

**உலக நாடுகளை அச்சுறுத்திவரும் ஐ.எஸ்.ஐ.எஸ்.தீவிரவாதிகள் அமைப்பு ஐரோப் பாவில் தாக்குதல் நடத்த 400 தீவிரவாதிகளுக்கு பயிற்சியளித்துள்ளதாகவும் இதில் 90 பேர் ஐரோப்பிய நாடுகளுக்குள் ஏற்கனவே நுழைந்துவிட்டதாகவும் அதிர்சசித் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். அவர்களை ஒழிக்க அமெரிக்கா மற்றும் பிரான்ஸ், இங்கிலாந்து உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளன.

இதனால் ஆத்திரம் அடைந்த தீவிரவாதிகள் பழிக்குபழி வாங்க ஐரோப்பிய நாடுகளில் வெடிகுண்டு தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். கடந்த நவம்பர் 13ஆம் தகதி பிரான்ஸ் தலைநகர் பாரீசில் தொடர் வெடிகுண்டு தாக்குதல் நடத்தி 130 பேரை கொன்றனர்.

இத்தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் அண்டை நாடான பெல்ஜியத்துக்கு தப்பிச் சென்றனர். தலைநகர் பிரஸல்ஸில் பதுங்கியிருந்த அவர்களை பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் பொலிஸார் அதிரடி வேட்டை நடத்தி சிலரை சுட்டுக் கொன்றனர்.

மேலும் பலரை கைது செய்தனர். முக்கிய குற்றவாளியான சாலே அப்தெஸ்லாம் என்பவனை கடந்த 5 நாட்களுக்கு முன்பு கைது செய்தனர். இதனால் ஆத்திரம் அடைந்த ஐ.எஸ். தீவிரவாதிகள் பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் விமான நிலையம் மற்றும் மெட்ரோ ரயில் நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தற்கொலை தாக்குதல் நடத்தினர். அதில் 32 பேர் பலியாகினர். 270 பேர் காயம் அடைந்தனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் இந்த அதிரடி தாக்குதல்களால் ஐரோப்பிய நாடுகள் அச்சம் அடைந்துள்ளன. எனவே, அங்கு வழக்கத்தை விட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஐரோப்பிய நாடுகளில் தாக்குதல்கள் நடத்த 400 பேருக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பயிற்சி அளித்து இருப்பதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. தாக்குதலுக்கு அவர்கள் தயாராக இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

இத்தாக்குதலை ஐரோப்பிய உளவுத்துறை மற்றும் ஈராக் உளவுத்துறையும் வெளியிட்டுள்ளன. பாரீசில் நடந்த தாக்குதலின் போதே 90 ஐ.எஸ். தீவிரவாதிகள் ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைந்து விட்டனர் என்ற அதிர்ச்சி தகவலும் வெளியாகியுள்ளது. (இ-5)

## இருண்ட நாள் உதயமாகும் சகல நாடுகளையும் தாக்குவோம்-ஐ.எஸ்



(டமாஸ்கஸ்)

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான சகல நாடுகள் மீதும் எதிர்வரும் காலங்களில் தாக்குதல்கள் முன்னெடுக்கப்படும் என அவ்வமைப்பு அறிவித்துள்ளது.

நேற்று முன்தினம் அரபு மற்றும் பிரான்சு ஆகிய மொழிகளில் பயங்கரவாத ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு வெளியிட்டுள்ள விசேட அறிவித்தல் ஒன்றில் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

தமக்கு எதிராக செயற்படும் நாடுகளில், எதிர்காலத்தில் இருண்ட நாள் ஒன்று உதயமாகும் எனவும் பயங்கரமான முடிவுகளுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும்எனவும்ஐ.எஸ்ஐ.எஸ் அமைப்பு அறிவித்துள்ளது. (இ-5)

## பிரஸல்ஸ் வெடிகுண்டுத் தாக்குதலை இனிப்பு வழங்கி கொண்டாடிய ஐ.எஸ்

பெல்ஜியம் தலைநகரில் நிகழ்த்திய தாக்குதல் சம்பவத்தை ஐ.எஸ். தீவிரவாதிகள் இனிப்பு வழங்கி கொணடாடியது தொடர்பான புகைப் படங்கள்வெளியாகியுளளன.

பெல்ஜியம் தலைநகர் பிரஸல்ஸில் கடந்த செவ்வாய்க்கிழமை நிகழ்த்திய வெடிகுண்டு தாக்குதலில் பலர் மரணமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலில் ஈடுபட்ட முக்கிய தீவிரவாதியை பொலிஸார் தேடி வருகின்றனர்

இந்நிலையில் இந்த தாக்குதலை கொண்டாடும் விதமாக சிரியாவில் உள்ள மக்களுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் இனிப்பு வழங்கிய புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

சிரியாவின் கிழக்கு பகுதியில் உள்ள டயர் எஸ்ஸோர் (Dier Ezzor) மாகாணத்தில் உள்ள சிறுவர்களுக்கும் ஆண்களுக்கும் விதவிதமான இனிப்புகள் வழங்கும் புகைப்படங்களை தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.

மேலும் பிரஸல்ஸ் நகரில் நடந்த தாக்குதலை ஐ. எஸ். அமைப்பு எவ்வாறு இனிப்புகளை வழங்கி கொணடாடி வருகிறது என்பதை தெரிந்துகொள்ளுங்கள் எனவும் அந்த புகைப்படத்தில் எழுதப்பட்டுள்ளன.

இந்த புகைப்படங்கள் எதிலும் பெண்கள் இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 7 தீவிரவாதிகள் இந்தியாவிற்குள் ஊடுருவல்; பாதுகாப்பு அதிகரிப்பு

(டில்லி)

இந்தியாவில் மீண்டும் பெரிய தாக்குதல் நடத்தும் திட்டத்துடன் 7 தீவிரவாதிகள் ஊடுருவியுள்ளனர். பாகிஸ்தான் முன்னாள் இராணுவ வீரர் முகம்மது குர்ஷித் ஆலம் என்ற ஜகாங்கீர் என்பவன் தலைமையில் இந்த 7 பேரும் வந்துள்ளனர்.

இந்த நிலையில் 7 தீவிரவாதிகளும் டில்லிக்குள் ஊடுருவி இருப்பது தெரிய வந்தது. இதை உறுதி செய்த உளவுத் துறையினர், 7 தீவிரவாதிகளும் ஹோலி பண்டிகை கொண்டாட்டத்தை சீர்குலைக்கும் வகையில் தாக்குதல் நடத்த முயற்சி செய்யக்கூடும் என்று எச்சரித்துள்ளனர்.

டெல்லியில் உள்ள நட்சத்திர ஹோட்டல்கள், ரயில் நிலையங்கள், வைத்தியசாலைகளை குறிவைத்து 6 தீவிரவாதிகள் தாக்குதல்கள் நடத்தக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து டில்லி முழு வதும் பலத்த பாதுகாப்பு ஏறபாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-5)

## 239 பேருடன் மாயமான மலேசிய விமானத்தின் இயந்திரம் தென்னாபிரிக்க கடலில் கண்டுபிடிப்பு




239 பேருடன் மாயமான மலேசிய விமானத்தின் இயந்திரம் தென்னாபிரிக்க கடலில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் 8ஆம் திகதி மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து சீன தலைநகர் பீஜிங்கிற்கு பயணிகள் விமானம் புறப்பட்டு சென்றது. மலேசிய ஏர்லைன்சுக்கு சொந்தமான இந்த விமானத்தில் 239 பேர் பயணம் செய்தனர்.

இந்திய பெருங்கடல் மீது பறந்த போது அந்த விமானம் திடீரென மாயமானது. எனவே அந்த விமானம் கடலில் விழுந்து நொறுங்கியிருக்கக் கூடும் என அறிவிக்கப்பட்டது. அதன் பாகங்களை தேடும் பணி நடந்தது. ஆனால் எதுவும் கிடைக்காததால் அதில் பயணம் செய்த 239 பேரும் விபத்தில் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

இந்தநிலையில் கடந்த ஜுலை மாத இறுதியில் பிரான்சின் ரீயூனியன் தீவில் விமானத்தின் இறக்கைகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றை அவுஸ்திரேலியாவின் நீர்மூழ்கி வீரர்கள் தென் இந்திய பெருங்கடலில் மீட்டனர்.

இதற்கிடையே தற்போது தென்னாபிரிக்காவின் தெற்கு கடற்கரை பகுதியில் கேப்டவுன் அருகே மொசல்பே நகர கடலில் ஒரு விமானத்தின் இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளது.

இத்தகவலை மலேசிய போக்குவரத்து அமைச்சர் லியோவ் தியாங்லை தெரிவித்துள்ளார்.

அண்மையில் மொசாம்பிக் கடலில் விமானத்தின் உடைந்த 2 பாகங்களைஅவுஸ்திரேலியா மீட்பு குழு கண்டுபிடித்தது. அதுவும் மாயமான மலேசிய விமானத்தின் பாகமாக இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார் (இ-5)

## கருணாநிதியுடன் அழகிரி சந்திப்பு; உடல்நலம் குறித்து விசாரித்தார்



(சென்னை)

தி.மு.க. தலைமையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மு.க.அழகிரி கட்சியில் இருந்து நீக்கப்பட்டார்.அதன் பிறகு தி.மு.க. பற்றியும், மு.க.ஸ்டாலின் பற்றியும் விமர்சனம் செய்து வந்தார். அவரை மீண்டும் கட்சியில் சேர்க்க முயற்சி நடந்தது. ஆனால் தி.மு.க. தலைவர் கருணாநிதி அவரை சந்திக்க மறுத்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று முற்பகல் 11 மணிக்கு மு.க. அழகிரி கோபால புரத்தில் கருணாநிதியை சந்தித்துபேசினார்.பின்னர் வெளியே வந்த அவரிடம் கேட்டபோது, தலைவர் உடல் நிலைபற்றி விசாரித்தேன் என்று கூறினார்.

மு.க.அழகிரி மீண்டும் தி.மு.கவில் சேருவார் என்று கூறப்பட்டு வரும் சூழலில் அவர் கருணாநிதியை சந்தித்து பேசியது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# இலஞ்சம் வாங்கிய பொலிஸாரை காட்டிக்கொடுத்த கூகுள் வீதி பார்வை



கூகுள் அறிமுகப்படுத்தியுள்ள வீதி பார்வை (Street View) இணைப் பயன்படுத்தி இலஞ்சம் வாங்கிய பொலிஸாரை பொது மக்கள் கண்டுபிடித்துள்ள சுவார சியமொன்று நடைபெற்றுள்ளது.

குருநாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேசத்தில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

இலங்கையில் கூகுள் அறிமுகப்படுத்தியுள்ள Street View வசதியைப்பயன படுத்தி பன்னல பிரதேச பொதுமக்கள் தங்கள் பிரதேசத்தைப பார்வையிட்டுள்ளனர்.

இதன் போது மோட்டார் சைக்கிள் சாரதி ஒருவரிடம் பொலிஸார் இலஞ்சம் பெற்றுக் கொள்வது 360 பாகை சுற்றுப் பார்வை ஊடாக தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. இது தொடர்பான புகைப்படங் கள் தற்போது சமூக வலைத்தளங் களில் வேகமாக பரவி வருகின்றது. (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-24.03.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 143.91 | 147.87 |
| பவுண்ட் | பிரிட்டன் | 202.06 | 209.26 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 159.79 | 166.12 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 146.41 | 152.59 |
| டொலர் | கனடா | 108.03 | 112.55 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 106.97 | 112.00 |
| டொலர் | சிங்கப்பூர் | 104.69 | 108.70 |
| ரூபா | இந்தியா | 2.1513 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 381.6866 |
| குவைத் | டினார் | 476.8174 |
| ஓமான் | ரியால் | 373.7705 |
| கட்டார் | ரியால் | 39.5171 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3712 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.1798 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 70 | 100 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 60 | .70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 | 120 | 120 | 100 |
| தக்காளி | 40 | 40 | 20 | 30 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 45 | 40 | 80 | 40 |
| கோவா | 60 | 40 | 40 | 60 | 80 | 40 |
| கரட் | 100 | 120 | 80 | 80-200 | 120 | 80 |
| பூசணி | 40 | 30 | 20 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 50 | 30 | 60 | 60 | 40 |
| வாழைக்காய் | 50 | 30 | 40 | 40 | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 80 | 80 | 50 | 60 | 80 | 50 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 60 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 160 | 80 | 120 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 120 | 80 | 70 | 80 | 100 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | — | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 120 | 80 | 40 | 100 | 80 | 80 |
| லீக்ஸ் | 100 | 140 | 90 | 120 | 160 | 100 |
| பீற்றூட் | 60 | 100 | 70 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 140 | 100 | 90 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 300 | 300-600 | 400 | 600 |
| போஞ்சி | 100 | 160 | 90 | 120 | 160 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 50 | 60 | 80 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 15 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 160 | 140 | 130 | 120 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-50 | 25-40 | 50 | 35-45 | 40 |
| இராசவள்ளி | 150 | 200 | 110 | 140 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 120 | — | — | 160 | — | 80 |
| முள்ளங்கி | 40 | — | 30 | 40 | 50 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 15 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 40 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 40 | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## யாழ்ப்பாணப் பொதுக்கூட்டத்தில் பிரபாகரன் பேச்சு 138

எமது மக்களின் பாதுகாப்புப் பிரச்சினை பற்றியும் அதற்கான உத்தரவாதங்கள் பற்றியும் அவரிடம் பேசினேன். பாரதப் பிரதமர் எமக்கு சில வாக்குறுதிகளை அளித்தார்.

எமது மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளித்தார்.

பாரதப் பிரதமரின் நேர்மையில் எமக்கு நம்பிக்கை இருக்கிறது. சிங்கள இனவாத அரசு மீண்டும் தமிரின அழிப்பு நடவடிக்கையில் இறங்க இந்தியா அனுமதிக்காது என நாம் நம்புகிறோம். இந்த நம்பிக்கையில்தான் நாம் இந்திய சமாதானப் படையிடம் ஆயுதங்களை ஒப்படைக்க முடிவு செய்தோம்.

ஆயுதங்களை ஒப்படைக்கிறோம்

நாங்கள் எங்களது மக்களின் பாதுகாப்பிற்கான எத்தனை அளப்பெரிய தியாகங்களைப் புரிந்தோம் என்பதை நான் இங்கு விளக்கிக்கூறத் தேவையில்லை. எமது இலட்சியப் பற்றும் தியாக உணர்வும் எத்தன்மை வாய்ந்தது என்பதை எமது மக்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள். உங்களது பாதுகாப்பிற்காக, உங்கள் விடுதலைக்காக உங்களது விமோசனத்திற்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம்.

நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்தில் இருந்து எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கின்றோம். ஈழத் தமிழரின் ஒரே பாதுகாப்பு சாதனமாக இருந்து வந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடம் பெற்றுக் கொள்வதிலிருந்து எமது மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதம் ஒப்படைப்பு என்பது பொறுப்பு மாற்றத்தைத் தான் குறிக்கிறது.

### பாதுகாப்பு

இந்தியாவை நாம் நேசிக்கிறோம். இந்திய வீரர்களுக்கு எதிராக நாம் ஆயுதங்களை நீட்டத் தயாராக இல்லை.

எமது எதிரியிடமிருந்த எம்மைப் பாதுகாக்கும் பொறுப்பை இந்திய இராணுவ வீரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். நாம் ஆயுதங்களை அவர்களிடம் ஒப்படைப்பதில் இருந்து ஈழத் தமிழன் ஒவ்வொருவனது உயிருக்கும் பாதுகாப்பிற்கும் இந்திய அரசுதான் பொறுப்பாக இருக்க வேண்டும் என்பதை நான் இங்கு கூற விரும்புகிறேன்.

### தமிழீழம்

இந்தியாவின் இந்த முயற்சிக்கு நாம் ஒத்துழைப்பதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இந்த சந்தர்ப்பத்தை நாம் அவர்களுக்கு வழங்குவோம். ஆனால் இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும் என நான் நினைக்கவில்லை. சிங்கள இனவாத பூதம் இந்த ஒப்பந்தத்தை விழுங்கிவிடும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

தமிழீழத் தனி அரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு. தமிழீழ இலட்சியத்துக்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் நான் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கு கூற விரும்புகிறேன்.

போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை.

### தேர்தலில் போட்டி இல்லை

தமிழீழ மக்களின் நலன் கருதி இடைக்கால அரசில் பங்குபெற அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம்.

ஆனால் நான் எந்தக் கால கட்டத்திலும் தேர்தலில் பங்கு பெறப்போவதில்லை. முதல மைச்சர் பதவியையும் ஏற்கப் போவதில்லை. இதை நான் மிகவும் உறுதியாக சொல்ல விரும்புகிறேன்.

இவ்வாறு பிரபாகரன் கூறினார்.

### கிட்டு

இந்தக் கூட்டத்தில் விடுதலைப்புலி இயக்கத் தளபதி கிட்டு பேசிய போது கூறியதாவது,

எங்கள் போராட்டம் இரு இனங்களுக்கான போராட்டம் என்ற நிலையை விட்டு சர்வதேச நிலையான போராட்டமாக உட்படுத்தப்பட்டது. சர்வதேச நிலைகளைக் கருத்தில் கொண்டு போராட்டப் பாதைகளில் சில போக்குகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அந்த சூழ்நிலையில் நாங்கள் எடுத்திருக்கும் முடிவு எமது இலட்சியப்பாதைக்கு பாதகமாகாது. எந்த முடிவெடுத்தாலும் நமது இறுதி இலட்சியம் தமிழீழம்தான்.

தமிழீழத்துக்கான பாதை அல்லது படிக்கட்டுத்தான் இந்த முடிவு. இதுவரையில் எங்களை நம்பி வளர்த்து விட்ட மக்களைக்கேட்கிறேன்.

எங்களை நம்புங்கள். இறுதிவரையில் எங்கள் பாதையிலிருந்து தவறமாட்டோம்.

மேற்கண்டவாறு கிட்டு பேசினார்.

மற்றும் யோகி, திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் புலியேந்திரன், யாழ்ப்பாண வட்டார தளபதி குமரன், மன்னார் மாவட்ட பொறுப்பாளர் ஷாஜஹான், மட்டக்களப்பு மாவட்ட பொறுப்பாளர் கருணா, அரசியல் பிரமுகர் மூர்த்தி மற்றும் பலர் பேசினார்கள்.



ஆயுதங்களை ஒப்படைப்பதாக, யாழ்ப்பாணம் பொதுக் கூட்டத்தில் பிரபாகரன் அறிவித்தபோது எடுத்த படம். அருகே அமர்ந்திருப்பவர் கிட்டு.

(தொடரும்)

# தேசிய பாதுகாப்பு 100 வீதம் உறுதி!

## கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவிப்பு

இலங்கையின் தேசிய பாதுகாப்பு தொடர்பில் எவரும் அச்சம் கொள்ளத் தேவை இல்லை. தேசிய பாதுகாப்பு 100 வீதம் உறுதியாகவுள்ளது என பாதுகாப்புச் செயலாளர் க்ருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன், எந்தவொரு அச்சுறுத்தல்களுக்கும் சவால்களுக்கும் முகம்கொடுக்கும் வகையில் பாதுகாப்புப்படையினர் தயார் நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சின்கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்ற ஊடக வியலாளர்சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்நிலையில், கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பாதுகாப்பும் போதிய அளவு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் தாம் முழுமையான உத்தரவாதம் வழங்குவதாகவும் அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, பெல்ஜியத்தில் மேற்கொள்ளப்பட்ட இரு வேறு தற்கொலைக் குண்டுத்தாக்குதல் தொடர்பில் இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் சார்பில் தாம் வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச பயங்கரவாத குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய கடந்த டிசெம்பர் மாதம் முதல் விமான நிலையத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்த அரசாங்கம் இழைத்த கொடுமை

## ஒவ்வொரு இலங்கையனும் ரூ. 5, 1/4 இலட்சம் கடனாளி

(கொழும்பு)

**நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் தனா 5 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா கடன் சுமை இருப்பதாக ஜே.வி.பியின் தலைவரும், எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான அநுரகுமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். பிறந்த குழந்தை முதல் சுகவீனமுற்றிருக்கும் முதியோருக்கும் இந்தக் கடன்சுமை இருப்பதாக அவர் சுட்டிக்காட்டினார்.**

பாராளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆற்றியிருந்த பொருளாதாரம் குறித்த விசேட உரை தொடர்பான சபை ஒத்தி வைப்பு விவாதத்தை ஆரம்பித்து வைத்து நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டுக்கு 9500 பில்லியன் ரூபா கடன் சுமை இருப்பதாகவும், இந்த எண்ணிக்கை 10500 பில்லியன் ரூபாய்களாக அதிகரிக்கலாம் என்றும் பிரதமர் கூறியிருந்தார்.



கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் கூடுதலான கடன்களைப் பெற்றுவிட்டது. பல கடன்கள் தற்பொழுதே தெரிய வருகிறது என அரசாங்கம் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது.

இந்தக் கடன்களை எவ்வாறு செலுத்துவது என்று அரசு தீர்மானிக்க வேண்டும். அதற்கான வழியை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

கடன் சுமையில் 40 வீதத்தை நாட்டு மக்கள் செலுத்த முடியாது. ஏனெனில், கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பெற்ற கடன்களுக்கான "கொமிஷன்", மோசடி, திருட்டு, இலஞ்சம் என 40 வீதம் பெறப்பட்டுள்ளது.

அதாவது சுமார் 4000 பில்லியன் ரூபா இவ்வாறு மோசடியாகப் பெறப்பட்ட பணம்.

இந்தப் பணத்தை நாட்டு மக்களிடமிருந்து அறவிட முடியாது. கடந்த அரசாங்கத்தில் இருந்தவர்களிடமிருந்தே இப்பணத்தைப் பெறுக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அதேநேரம், 2016 ஆம் ஆண்டு 5.3 பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாக அரசாங்கம் எதிர்வு கூறியுள்ளது. (இ-5)

# பாரத லக்ஸ்மன் கொலை வழக்கின் சாட்சியங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் நிறைவு

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர உள்ளிட்ட நால்வர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கான சாட்சியங்களை பெற்றுக் கொள்ளும்நடவடிக்கை நேற்றுடன் நிறைவடைந்துள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்ற வேளையிலேயே சாட்சியங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைகளுக்காக 48 பேரிடம் சாட்சியங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

அரச பகுப்பாய்வு உள்ளிட்ட 126 ஆவணங்களும், துப்பாக்கிகள் உள்ளிட்ட 86 பொருட்களும் இந்த முறைப்பாடு தொடர்பில் நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து பிரதிவாதிகளிடம் சாட்சி பதிவுகள் மாத்திரமே பதிவு செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 26, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் இடம்பெறும் என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த வழக்கு விசாரணைகளுக்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உள்ளிட்ட 13 பேர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இன்று ஒரு தகவல்

### காலத்தை வீணாக்கலாமா?

ஆரோக்கியத்தை இழந்தால் மருத்துவர் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். பொருளை இழந்தால் மீட்டுவிட முடியும். ஆனால் காலத்தை இழந்து விட்டால் திரும்பப் பெற முடியாது.

காலமறிந்து நடப்பவனுக்கு வறுமை என்பது இல்லை.வாழ்வில் உயர்வு உண்டு. காலத்தை இழந்தவனே வறுமையை அணைத்துக் கொள்கிறான்.வாழ்வில் தவிக்கிறான். உண்மையைப் புரிந்து கொள்ளாமல் காலம்வரட்டும் எனக் காத்துக் கொண்டு இருக்கிறான்.

குறிப்பிட்ட நேரத்தில் புறப்படும் ஓர் ரயிலைப் பிடிக்க இயலாமல் போனவர், ரயில் போய் விட்டது என்று குற்றம் சாட்டுவாரே தவிர நான் நேரத்தின் அருமையை உணராமல் போனேனே என எண்ணிப் பார்ப்பதில்லை.

வாழ்வு என்பது எரிந்து கொண்டிருக்கும் மெழுகுவர்த்தி. அது எரியும் அளவும் வெளிச்சத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமே தவிர அதை வீணே எரிய விட்டுக் கண்ணை மூடிக் கொண்டிருக்கக் கூடாது.அத்தகைய முயற்சி தினம் தினம் சிறிது சிறிதாக விஷத்தை உட்கொள்வது போலாகும்.

பக்குவம் அற்றவர்கள் காலத்தைப் போக்குவதற்கு என்ன வழி என ஆராய்கிறார்கள்.அறிவுள்ளவர்கள் நேரம் போதவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள்.

விதைக்க வேண்டிய காலத்தில் விதைத்தால் தான் அறுக்க வேண்டிய காலத்தில் காரியம் ஆகும் என்னும் உண்மையை உணர்ந்து வைத்திருக்கிறார்கள் விவசாயிகள்.அதனால்தான் அவர்கள் பயன் பெறுகிறார்கள்.காலம் ஒரு பூவைப் போன்றது.

பூசாரியிடம் உள்ள பூ பூஜைப் பொருளாகிறது.

மண மக்களுக்கும் மாண்டவர்களுக்கும் அது மாலையாகிறது.

சிலருக்கு அது மருந்தாகிறது.

ஆக

காலம் ஒன்று தான்.அது கணித முறைப்படி நடக்கிறது. சிலர் தாம் அதைக் கெட்ட காலம், பொல்லாத காலம், போதாத காலம், காலத்தின் கோலம், கால வினை என்றெல்லாம் தங்கள் இழுக்கும் இழுவைக்கு ஏற்றாற் போல மாற்றிக் கொள்கின்றனர்.

மனப் பக்குவம் உள்ளவர்களே அதைத் தங்களுக்கு எந்நேரமும் சாதகமாய் இருக்கும் படி பார்த்துக் கொள்கின்றனர்.இந்த உண்மைகளை உணர்ந்து செயற்பட்டால் எக்காலமும் பொற்காலம் தான்!

லேனா தமிழ்வாணன்



# சிறுவர் அரங்கம்

1392

## எடை என்ன தெரியுமா?

இங்கிலாந்து நாட்டை அரசி எலிசபெத் அரசாண்டு கொண்டிருந்த காலம். அப்போது அவருடைய அவையிலே கவிஞர்களும், போர்ப்படைத் தலைவர்களும், கப்பற்படைத் தலைவர்களும் கூடியிருந்தனர்.

சர் வால்டர் ராலி என்பவர் கப்பற்படைத் தலைவர்களில் ஒருவர். அவர் அமெரிக்காவிலிருநது புகையிலையைக் கொண்டு வந்தார். அவர் புகைப்பிடிக்கும் பழக்கத்தையும் கற்றுக்கொண்டு இருந்தார்.

ஒரு தடவை அவர் அரசியோடு கலந்துரையாடிக் கொண்டிருந்தார். அப்போது புகையிலையின் பெருமைகளைப் பற்றிப் பேசினார். மேலும், புகையிலைப் பற்றித் தாம் கேள்விப்பட்டதையெல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்.

புகையிலையை நெருப்பில் பற்ற வைத்து அதிலிருந்து வெளிவரும் புகையைக் குடித்தால் மனம் அமைதி அடையும் என்பதுடன், தம்முடைய புகையிலையைக் குழாயிலிருந்து கிளம்பும் புகையினுடைய எடை எவ்வளவு என்று நிச்சயமாய்ச் சொல்ல முடியும் என்றும் சொன்னார்.

அதைக்கேட்ட அரசி ஆச்சரியம் அடைந்ததுடன், “அது எப்படி முடியும்? இது வெறும் புரளி,” என்று கூறினாள்.

அதற்கு ராலி, “நான் நிச்சயமாகத் தான் சொல்லுகிறேன். பத்து நிமிடம் புகையிலைக் குழாயில் புகையிலைத் தூளைப போட்டுப் புகைபிடித்தால் புகையின் எடையைத் துல்லியமாக நான் சொல்லுவேன்,” என்றார்.

“உம்மால் முடியவே முடியாது. பந்தயம் கட்டுகிறேன்,” என்று அரசி உறுதியாகக் கூறினாள்.

“அப்படியானால் சம்மதம்!” என்றார் ராலி.

அவர் உடனே தம்முடைய ஆளைக் கூப்பிட்டுப் புதிய புகையிலைக் குழாய் ஒன்றை கொணடு வரச் சொன்னார்.

புகையிலை டப்பியையும், தராசுப் படிக் கல்லையும் கொண்டு வரச் செய்து டப்பியிலிருந்து கொஞ்சம் புகையிலையை எடுத்துத் தராசில் போட்டு நிறுத்து. பின் புகையிலைக் குழாயில் வைத்தார்.



பிறகு அரசியைப் பார்த்து, “இந்தப் புகையிலையின் எடையைக் குறித்துக் கொள்ளுங்கள். நான் இதைப் பற்றவைத்துக் குடிக்கப் போகிறேன். பத்து நிமிடம ஆனதும் சொல்ல வேண்டும்,” என்று கூறினார்.

“சரி!” என்றாள் அரசி.

ராலி அந்தக் குழாயிலிருந்த புகையிலையைப் பற்ற வைத்துப் புகைபிடித்துக் கொண்டிருந்தார். பற்ற வைத்த புகையிலையிலிருந்து உண்டான புகை ராலியின் வாய்க்குள் கொஞ்சமும், காற்றில் கொஞ்சமும் போய்க் கொண்டிருந்தது.

பத்து நிமிடம் ஆனதும் அரசியார், “நிறுத்து நிறுத்து!” என்றாள்.

உடனே, ராலி குழாயிலிருந்து புகையிலையின் நெருப்பை அணைத்து விட்டார்.

அரசியார் அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே, “வாய்க்குள்ளும் காற்றிலும் போன புகையை எப்படிப் பிடித்துக் கொண்டு வந்து நிறுத்தப் போகிறீர்?” என்று கிண்டல் செய்தார்.

“அரசியாரே சற்றே பொறுத்தருள வேண்டும்,” என்று கூறினார் ராலி.

“ஆகா, நீங்கள் காற்றிலும் வாயிலும் கலந்து போன புகையைப் பிடித்துக் கொண்டு வருகிற வரைக்கும் நான் காத்திருக்க வேண்டுமா? நல்ல பேச்சு!” என்று கூறி சிரித்தாள் அரசி.

ராலி பதிலொன்றும் பேசாமல் புகையிலைக் குழாயில் மீந்திருந்த புகையிலையை மிகவும் ஜாக்கிரதையாகத் தராசுத் தட்டில் கொட்டி அதை எடை போட்டார். பற்ற வைப்பதற்கு முன்னால் இருந்த எடையிலிருந்து இந்த எடையைக் கழித்தார். பிறகு அரசியைப் பார்த்துப் புகையிலைப் புகையின் எடை இவ்வளவு என்று, முன்னும் பின்னுமுள்ள எடை வித்தியாசத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்.

அதைக் கேட்ட அரசி ஆச்சரியம் அடைந்து அவர் சொன்னதை ஒப்புக் கொண்டு, அவருடைய அறிவுத் திறனைப் புகழ்ந்தாள். தான் பந்தயமாக வைத்த நூறு பொன்னை அவருக்குக் கொடுத்தாள்.

“நாட்டில் எத்தனையோ பேர பொன்னையும் பொருளையும் கரியாக்கிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், நீங்களோ கரியையே பொன்னாக்கி விட்டீர்கள்” என்று ராலியைப் புகழ்ந்து கொண்டாடினாள் அரசியார்.

03.2016
25

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1584 - வேர்ஜீனியா மாநிலத்தை பயன்படுத்த அல்லது சுரண்ட சேர் வால்ட்டர் ரேலி காப்புரிமம் பெற்றார்.
- 1634 - மேரிலாந்துக்கு முதலாவது குடியேறிகள் வந்தனர்.
- 1655 - டைட்டான் என்ற சனிக் கோளின் மிகப் பெரிய சந்திரனை கிறிஸ்டியான் ஹைஜன்ஸ் கண்டுபிடித்தார்.
- 1807 - அடிமைகளை வர்த்தகம் செய்வது ஐக்கிய இராச்சியத்தில் சட்டம் மூலம் தடை செய்யப்பட்டது.
- 1821 - ஓட்டோமான் பேரரசுக்கு எதிராக கிரேக்கர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். கிரேக்க விடுதலைப் போர் ஆரம்பமானது.
- 1857 - பிரெஞ்சுக்காரரான லியோன் ஸ்கொட் ஒலியை பதிவு செய்யும் கருவிக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1911 - நியூயோர்க் நகரில் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற தீயில் சிக்கி 146 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1918 - பெலாரஸ் மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: அச்சு அணி நாடுகள் அமைப்பில் யூகொஸ்லாவியா இணைந்தது.
- 1949 - எஸ்தோனியா, லாத்வியா மற்றும் லித்துவேனியா ஆகியவற்றைச் சேர்ந்த 92,000 பேர் சோவியத் அதிகாரிகளினால் சோவியத் ஒன்றியத்தின் பல ஒதுக்கமான இடங்களுக்கு கட்டாய வேலைக்காக அனுப்பப்பட்டனர்.
- 1953 - ஆந்திர மாநில அமைப்பு பற்றிய அதிகாரப் பூர்வமான பிரகடனத்தை ஜவகர்லால் நேரு நாடாளுமன்றத்தில் வெளியிட்டார். ஆந்திரத் தலைநகர் ஆந்திர எல்லைக்குள்ளேயே அமையும் என அறிவித்தார்.
- 1954 - முதலாவது வர்ணத் தொலைக்காட்சிப் பெட்டியை RCA நிறுவனம் வெளியிட்டது. (12 திரையளவு, விலை: $1,000).
- 1957 - மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இத்தாலி, பெல்ஜியம், நெதர்லாந்து, மற்றும் லக்சம்பேர்க் ஆகியன இணைந்த ஐரோப்பிய பொருளாதார சமூகம் உருவாக்கப்பட்டது.
- 1965 - மனித உரிமைவாதி மார்ட்டின் லூதர் கிங் தனது 4- நாள் 50- மைல் எதிப்புப் பயணத்தை முடித்துக் கொண்டார்.
- 1971 - வங்காளதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவம் கிழக்கு பாகிஸ்தானுக்கு எதிரான தேடுதலொளி நடவடிக்கையை ஆரம்பித்தனர்.
- 1975 - சவுதி மன்னர் ஃபைசால் தனது மருமகனால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1992 - சோவியத் விண்வெளிவீரர் செர்கே கிரிக்கா லொவ்மீர் விண்வெளி நிலையத்தில் 10-மாதங்கள் தரித்திருந்துவிட்டு பூமி திரும்பினார்.

**பிறப்புக்கள்**

- **1914 - நார்மன் போர்லாக், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர், (இ. 2009)**

**இறப்புக்கள்**

- 1914 - பிரெடெரிக் மிஸ்ட்ரால், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சுக் கவிஞர் (பி. 1830)

### நார்மன் போர்லாக்



நார்மன் எர்னஸ்ட் போர்லாக் 1914 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி பிறந்தார்.

இவர் ஓர் அமெரிக்க வேளாண்மை அறிவியலாளர், மனிதத்துவவாதி, நோபல் அமைதிப் பரிசு பெற்றவர்.

பசுமைப் புரட்சியின் தந்தை என அறியப்படுகிறார் போர்லாக் அமைதிக்கான நோபல் பரிசு, விடுதலைக்கான அமெரிக்க தலைவர் பதக்கம் மற்றும் அமெரிக்க காங்கிரசின் தங்கப் பதக்கம் மூன்றையும் வென்ற ஐவரில் ஒருவர்.

இந்தியாவின் இரண்டாவது உயரிய விருதான பத்ம விபூசண விருது பெற்றவர்.

அவரது கண்டுபிடிப்புகள் மூலம் 245 மில்லியன் மக்கள் பசியின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டிருப்பதாக மதிப்பிடப்படுகிறது.

# சரத் பொன்சேகா சபையில் காட்டம்

## யுத்த வெற்றியை தனதாக்க கோத்தபாய முயன்றதால்



(கொழும்பு)

ஆனையிறவு புலிகளிடம் வீழ்ந்த போது யாழ்ப்பாணத்திற்கு செல்ல பலர் பின்வாங்கினர். அப்போது எனது உயிரையும் பொருட்படுத்தாது இரண்டு மணித்தியாலத்திற்குள் பலாலிக்குச் சென்றேன்.

குருதி சிந்தி அர்ப்பணிப்புடன் போராடிய இராணுவ வீரர்களுக்கு உரிய மதிப்பளிக்காது அவர்களின் அர்ப்பணிப்பை தமது சுயநலத்துக்காக பயன்படுத்தவே அப்போதைய ஆட்சியாளர்கள் முனைந்தனர். இன்று இராணுவத்தினருக்காக கூச்சலிடுபவர்கள் அன்று யுத்தத்தினை முன்னெடுத்த தளபதியான என்னை திட்டமிட்டு பழிவாங்கி சிறையிலடைத்த போது எங்கு சென்றீர்கள் என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா பாராளுமன்றில் காட்டமாக கேள்வி எழுப்பினார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்திற்கு எவ்வித மான பங்களிப்பையும் வழங்காது யுத்த வெற்றியை தனதாக்குவதற்கு பாதுகாப்பு செயலாளராகவிருந்த கோத்தபாய ராஜபக்ஷ முனைந்தார்.

யாழ்ப்பாணம் இராணுவத்திடம் வீழ்ந்தபோது அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் சந்திரானந்த சில்வா அதனை தனது வெற்றியாக கொள்ளவில்லை.

ஆனால் எதனையுமே செய்யாத கோத்தபாய யுத்த வெற்றியை தனதாக்க முயன்றார். அது மிகவும் வெட்கமான விடயம்.

நான் என்ன பங்களிப்புச் செய்தேன் எனக் கேள்வியெழுப்புகின்றீர்கள்.

யுத்தத்தை திட்டமிட்டேன். இராணுவத்தை அதிகரித்தேன். முறையான பொறிமுறைகளை முன்னெடுத்தேன். இதற்கு அப்பால் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தருணத்தில் உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு தனியொருவனாக எதிர்த்தேன்.

மேலும் ஆனையிறவு புலிகளிடம் வீழ்ந்த போது யாழ்ப்பாணத்திற்கு செல்வதற்கு பலர் பின்வாங்கிய தருணத்தில் இரண்டு மணி நேரத்திற்குள் பலாலிக்குச் சென்றேன்.

அங்கு முறையாக திட்டமிட்டோம். அங்கு இன்றும் பதுங்கு குழியுள்ளது. அதன் தொடர்ச்சியாகவே மாவிலாறில் நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

அவ்வறிக்கையில் குருதி சிந்தி அர்ப்பணிப்புடன் போராடிய இராணுவ வீரர்களுக்கு உரிய மதிப்பளிக்காது அவர்களின் அர்ப்பணிப்பை தமது சுயநலத்துக்கு பயன்படுத்தவே முனைந்தார்கள்.

இன்று கூச்சலிடும் நீங்கள் அன்று யுத்தத்தினை முன்னெடுத்த தளபதி திட்டமிட்டு பழிவாங்கப்படும் போது எங்கு சென்றீர்கள்.

நாட்டை மீண்டும் அதள பாதாளத்துக்குள் கொண்டு செல்வதற்கு முயலாதீர்கள். அதன் அபாயத்தை புரிந்து கொள்ளுங்கள்.

நாட்டில் உரிய பொருளாதார அடித்தளம் இல்லை. மனித உரிமை மீறல்கள், ஜனநாயக மீறல்கள் போன்றவற்றால் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகையையும் நாம் இழந்து நிற்கின்றோம். ஆகவே மீண்டும் குடும்பமொன்றின் நலனுக்காக நாட்டை வீழ்ச்சிப் பாதைக்கு கொண்டு செல்லாதீர்கள் என மேலும் காட்டமாக தெரிவித்தார். (இ-5)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 672

Search for people, places and things Nagendram Home


ஷாரா




அபி





ரதி





சந்திரு




சேந்தன்




சிவராசா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 14.03.2016~13.04.2016

## எவரிடமும் பகை கொள்ளாமல் இருக்க வேண்டிய நேரம்!



**மற்றவர்களுடைய மனதைப் புரிந்து கொண்டு செயற்படும் கும்ப இராசி நேயர்களே! எவரிடமும் பகை கொள்ளாமல் இருக்க வேண்டிய நேரம்!**

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கிற பொழுது, ஜென்ம கேதுவும், சப்தம ராகுவும், சர்ப்ப தோஷத்தை உருவாக்குகிறார்கள். வாங்கல் - கொடுக்கல்களில் ஏற்ற இறக்க நிலை இருக்கும். பின் விளைவை சிந்திக்காமல் பேசிவிட்டு, பிறகு ஏன் பேசினோம் என்று வருத்தப்படுவீர்கள். சுக்ர பலம் நன்றாக இருப்பதால், முன்னோர் சொத்துக்களில் முறையான பங்கீடுகள் கிடைக்கும்.

முக்கிய நபர்கள் மூலம் ஒரு சில காரியங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். ஜென்மத்தில் கேது இருப்பதால், எவ்வளவு தான் பணம் வந்தாலும், மன நிம்மதி இருக்காது. பழைய வாகனங்களுக்காக பல ஆயிரம் செலவழித்து பழுது பார்த்துக் கொண்டிருக்கிறோமே, புதிய வாகனம் வாங்கினால் என்ன? என்ற சிந்தனை மேலோங்கும்.

குறிப்பாக சுக்ர பலம் நன்றாக இருக்கும் பொழுது பயணங்கள் அதிகரிக்கும். காலையில் ஒரு நாட்டிலும், மதியம் ஒரு மாநிலத்திலும் இரவு இல்லத்திலும் இருக்கும் அமைப்பு ஒரு சிலருக்கு அமையும். ஆன்மிக பயணங்கள் அதிகரிக்கும். யாருகேனும் வாக்கு கொடுத்தால், வாக்கு கொடுக்கும் முன்பு ஒரு கணம் யோசிப்பது நல்லது.

இரண்டாமிடத்தில் சூரியனும புதனும் சஞ்சரிக்கிறார்கள். இந்த புத ஆதித்ய யோகம் மாதத் தின் முதல் 15 நாட்கள் நற்பலன்களைக் கொடுக்கும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த மனக்கசப்புகள் மாறும். கல்விககாக எடுத்த முயற்சி கைகூடும். கடல் தாண்டி வரும் செய்தி காதினிக்கச் செய்யும். சில்லரை தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள்.

செவ்வாய், சனி சேர்க்கைக்கு பரிகாரங்களை செய்துகொளவது நல்லது. குறிப்பாக அங்காரக ஸ்தலங்களுக்கும், சனிக்குரிய ஸ்தலங்களுக்கும் சென்று கவசம பாடி வழிபாடு செய்தால், காரிய வெற்றி கிடைக்கும். 10 இல் சனி வருவதால் பெற்றோர்களின் உடல நலத்துக்காக ஒரு தொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகும். வீடு மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். பங்குனி உத்திரத்தன்று முருகப பெருமானை வழிபடுவதன் மூலம் மங்கள வாழ்வமையும்.

**மேஷ புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 30 ஆம தகதி மேஷ ராசியில் புதன் சஞ்சரக்கப் போகிறார். இதன் விளைவாக பூர்வ புண்ணியத்தால் உங்களுக்குக் கிடைக்க வேண்டிய யோகம் அனைத்தும் வந்து சேரும். பஞ்சமாதிபதி சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, அதிர்ஷ்ட வாய்ப்புகள் அலை மோதும். அன்றாட வாழ்கைகை நன்றாக அமையும். பொது நலத்திலிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்துசேரும். அதிக செலவு செய்து முடிக்க வேண்டிய காரியம் ஆரம்பத்திலேயே முடிவடைந்துவிடும்.

**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

ஏப்ரல் 2 ஆம தகதி சுக்ரன் உச்சம் பெறப்போகிறார். இக்காலம் ஒரு பொற்காலம் ஆகும். வெற்றிக்கனியை எட்டிப் பிடிக்க செய்த முயற்சிகள் அனுகூலமாகும். வீடு வாங்கும் யோகம் உண்டு. ஒரு சிலருக்கு புதிய தொழில் தொடங்கும் வாய்ப்புகளும், புகழ் மிக்கவர்களின் சந்திப்பும் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவீர்கள்.




அரசு அனுகூலம், அரசு வழி சலுகைகளை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு கைகூடும். பெண் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். இம் மாதம் வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

செவ்வாய், சனி சேர்க்கைகு பரிகாரமாக அங்காரகனையும், சனியையும் ஆலயம் சென்று வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

வாழ்க்கை தேவைகள் பூர்த்தியாகும் மாதமாகும். வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி மாறி வரும். புகழ்மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து சில காரியங்களை முடித்துக் கொடுபபர். பொன், பொருள் சேர்க்கை ஏற்படும்.

புதியவர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும். பிள்ளைகளின் கல்யாண காரியங்கள நல்ல விதமாக முடிவடையும.

நேசமிக்கவர்கள் உங்களுக்கு நிழலாக இருந்து உதவி செய்வர். தாய்வழி ஆதரவோடு தனவரவும் ஏற்படும் நேரமிது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

## செலவுக்கேற்ற வரவும் வந்து சேரும் நேரம்!



**எதிர்ப்புகள் மறைய எதிரிகளின் பலத்தை அறிந்து செயற்படும் மீன இராசி நேயர்களே! செலவிற்கேற்ற வரவும் வந்து சேரும் நேரம்!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 2, 10, 12 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே, குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் அகலும். உறவினர்கள் உதவிக் கரம் நீட்டுவர். தொழிலில் ஏற்பட்ட போட்டிகள் அகலும். தொகை வரவு திருப்திகரமாக இருக்கும். வில்லங்கங்களில் இருந்தும், வீண் பழிகளில் இருந்தும் விடுபடுவீர்கள்.

சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்டும் விதத்தில் புதிய பாதை புலப்படும். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு வித்திடுவர்.

தொழில் ஸ்தானத்தை குரு பார்ப்பதால் தொழில் வளர்ச்சி மேலோங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு விருப்ப ஓய்வில் சுயதொழில் தொடங்க முன்வருவர். புதிய கூட்டாளிகள் வந்திணைந்து, நாங்களும் தொழிலுக்கு மூலதனம் போடுகிறோம் என்று சொல்வர். எதிரிகள் விலகுவர்.

இம்மாதம் முரண்பாடான இரண்டு கிரகங்களின் சேர்க்கை ஏற்படுகின்றது. அவற்றில் ஒன்று செவ்வாய். மற்றொன்று சனி. இரண்டு அல்லது ஒன்பது ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். லாப ஸ்தானம், விரய ஸ்தானம் ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. எனவே இந்த கிரக சேர்க்கையின் விளைவாக வரவு திருப்திகரமாக இருந்தாலும், செலவு உடனுக்குடன் வந்துவிடும். ஆனால் எந்த ஒரு காரியத்தையும் பணத்தை வைத்துக் கொண்டு செய்யலாம் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். காரியத்தை தொடங்கிவிட்டால் பணப் புழக்கம் தானாகவே வந்து சேரும்.

இடம், பூமி விற்பனையில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதலாக லாபம் கிடைக்கலாம். வெளிநாட்டிலிருந்து வரும் அலைபேசித் தகவல் அயல்நாடு செல்வதற்கான வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கும். என்ன இருந்தாலும் விரயச் சனி தனாதிபதியோடு இணைவதால் வீண் விரயங்களிலிருந்து விடுபட அங்காரகனையும், சனிபகவானையும் வழிபடுவது நல்லது. உடன்பிறப்புகளோடு மோதல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஆரோக்கியம் சீராக இருக்கவும் விழிப்புணர்ச்சி தேவை.

**மேஷ புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசியில நீச்சம் பெற்று வந்த புதன் மார்ச 30 ஆம தகதி மேஷ ராசிக்கு செல்கின்றார். இதன் விளைவாக தாய்வழி ஆதரவு பெருகும். தனித்து வாழவேண்டுமென்று பரியப்பட்டவர்களுக்கு இட மாற்றம், ஊர் மாற்றம் வந்துசேரும். கல்யாணக் கனவுகள் நனவாகும். 4, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் 2 இல் சஞ்சரிக்கும் பொழுது குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைக்கும். அதன் மூலம் வருமானமும் வந்து சேரலாம். மாமன், மைத்துனர் வழி ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்.




**உச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**


ஏப்ரல் 2 ஆம தகதி சுக்ரன் உச்சம் பெறப்போகின்றார். உங்கள் ராசிநாதன் குருவிற்கு சுக்ரன் பகை கிரகமாக விளங்குபவர். எனவே அவர் உச்சம் பெற்றிருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஒருசில வகையில் இழப்புகளை சந்திக்க நேரிடும். பெண் குழந்தை வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு மறையும். திடீர் ஊர் மாற்றம், இடமாற்றம் ஏற்படலாம். வரும் மாற்றங்கள் மனதிற்குப் பிடித்ததாக அமையுமா? என்பது சந்தேகம் தான். உத்தியோகத்தில் வேலைபளு அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமிது. இம்மாதம் வியாழக்கிழமை தோறும்குருவை வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

உடனிருப்பவர்களை யும், உடன் பணிபுரிபவர்களையும் அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமாகும்.

செவ் வாய், சனி சேர்க்கை பெறுவதால் விரயங்கள் அதிகமாகத்தான் இருக்கும். வீடு கட்டும் முயற்சி அலலது வாங்கும் யோகம் ஏற்படலாம்.

ஆயினும் மனக் கலக்கம் ஏற்படும் விதத்தில் ஒரு சம்பவம் நடைபெறலாம். எல்லாவற்றிற்கும் பரிகாரமாக செவ்வாய்க்கிழமை தோறும் முருகப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். (முற்றும்)




மானிப்பாய் மேற்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலயத் தேர்த்திருவிழா கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற போது...



வடமராட்சி திக்கம் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு விழா அண்மையில் சுறோம்படி வைரவர் ஆலய முன்றலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த. குரு குலராஜா கலந்து கொண்டிருந்தார்.





இலங்கை புகைப்படக் கழகம் மற்றும் நல்லூர் சங்குத் தொண்டர் சபை மற்றும் சமூகத்தவர்கள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டு அரசடி பிள்ளையார் ஆலய சூழலில் சிரமதானப் பணியில் அண்மையில் ஈடுபட்ட போது...





யாழ். கொடிகாமம் வீரசிங்கம் மத்திய கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.






யாழ்.அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. அதிபர் ச.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் கலந்து கொண்டிருந்தார்




யாழ். மாவட்டத்தின் முதலாவது சாரணர் அணியின் இலட்சினை வெளியீடு அண்மையில் யாழ்.மத்திய கல்லூரியின் றொமைன் குக் மண்டபத்தில் நடைபெற்றது. அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்.மாவட்டத்தின் முதலாவது சாரணர் அணியினரின் 100 ஆவது ஆண்டின் பூர்த்தியை முன்னிட்டு அவர்களுக்குரிய இலட்சினை உத்தியோகபூர்வமாக வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் சம்பத் வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ். சுரேஸ்குமார் கலந்து கொண்டிருந்தார்.



# போர்க்குற்றங்களை அம்பலப்படுத்துவாரா சரத் பொன்சேகா?

பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எதற்காக பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்டாரோ அதற்கான பணிகளை அவர் செவ்வனே செய்யத் தொடங்கியிருக்கிறார்.

கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அவர் நிகழ்த்திய உரை அரசியல் அரங்கில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி விட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகளுடனான இறுதிப்போர் தொடர்பாக சரத் பொன்சேகா வெளியிட்ட தகவல்கள் பல பேருக்கு அதிர்ச்சியாக அமைந்திருக்கிறது.

ஒரு பக்கத்தில் இதனை ஒரு போர்க்குற்ற சாட்சியமாக எடுத்துக் கொண்டு விசாரணைகளை நடத்த வேண்டும் என்ற குரல் ஒலிக்கிறது. இன்னொரு பக்கத்தில் தம்மை போர்க்குற்றவாளிகளாகச் சிக்க வைப்பதற்கே இந்த முயற்சி என்றும் குற்றச்சாட்டு சுமத்தப்படுகிறது.

ஆனால் இரண்டுமே சரியான பார்வைகளா? என்பதுதான் முக்கியமான கேள்வியாக இருக்கிறது. சரத் பொன்சேகாவின் உரையில் பழிவாங்கும் உணர்வே அதீதமாகத் தென்பட்டா லும், போர்க் குற்றச்சாட்டி லருந்து இராணுவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற ஓர்மத்தைத் தான் அதிகம் வெளிப்படுத்தியிருக்கிறது.

இலங்கை இராணுவம் போர்க்குற்றங்களை மேற்கொள்ளவில்லை என்றும் தனிப்பட்ட சில சம்பவங்கள் நடந்திருந்தால் அதுபற்றி சர்வதேச உதவியுடன் விசாரிக்க வேண்டும் என்பதும் தான் அவரது கோரிக்கையாக இருக்கிறது.

சர்வதேச விசாரணையை அவர் முன்னிறுத்துவதற்கு முக்கிய காரணம், ராஜபக்ஷ குடும்பத்தினரை கூண்டில் ஏற்றுவதல்ல. போர்க்குற்றச்சாட்டிலிருந்து இராணுவத்தைப் பாதுகாப்பதுதான் அவரது முதல் தெரிவாக இருக்கிறது.

தான் தலைமையேற்ற இராணுவம் போர்க்குற்றங்களை இழைக்கவில்லை என்று நிரூபிக்கவே அவர் முனைகிறார். அத்தகைய நிறுவல் நம்பகமானதாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தான் சரத் பொன்சேகா சர்வதேச பங்களிப்புடனான விசாரணையை வலியுறுத்தியிருக்கிறார்.

இந்த இடத்தில் மகிந்த ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோருக்கும் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் இருக்கின்ற வேறுபாடு இதுதான்.

மகிந்த தரப்பு போர்க் குற்றங்கள் எதுவுமே நடக்கவில்லை என்று ஒட்டுமொத்த அரசியல் இராணுவத் தலைமைத்துவங்களைப் பாதுகாக்க முனைகிறது. சரத் பொன்சேகாவோ தனது தலைமையில் இராணுவம் போர்க்குற்றங்களை இழைக்கவில்லை என்று பாதுகாத்துக் கொள்ள முனைகிறார்.

தமிழர் தரப்பைப் பொறுத்தவரையில், இந்த இரண்டு தரப்புகளின் நிலைப்பாடுகளுக்குமிடையில் பெரிய வேறுபாடுகளைக் காணமுடியாது. ஏனென்றால் போர்க் குற்றங்களில் இலங்கை இராணுவத்தினர் ஈடுபட்டனர் என்ற தனது குற்றச்சாட்டுக்களை தமிழர் தரப்பு இராணுவத் தலைமைக்கு எதிரானது, அரசியல் தலைமைக்கு எதிரானது என்று பிரித்துப் பார்க்கத் தயாராக இல்லை.

அதாவது சரத் பொன்சேகா போரை நெறிமுறைகளுக்கு அமைய நடத்தினார் என்று கூறுவதற்கோ, குறிப்பிட்ட சில அதிகாரிகளை வைத்துக் கொண்டு அப்போதைய அரசியல் தலைமைதான் போர்க் குற்றங்களில் ஈடுபட்டது என்று கூறுவதற்கோ தமிழர் தரப்பு தயாராக இல்லை.

தமிழர்களுக்கு எதிராக அப்போது தொடரப்பட்ட போரில் அரசியல் இராணுவத் தலைமைகள் ஒன்றுபட்டு நின்றுதான் வழி நடத்தியிருந்தன. இப்போது ஆளாளுக்கு முரண்பட்டுக் கொண்டாலும், போரை நடத்திய போது இவர்கள் ஒன்றுபட்டே நின்றனர்.

போரில் வெற்றி பெற்றவுடன் அலரி மாளிகையில் கேக் வெட்டிக் கொண்டாடப்பட்டது. அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷவோ, பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்த பாய ராஜபக்ஷவோ அந்தக் கேக்கை வெட்ட வில்லை. போருக்குத் தலைமையேற்ற சரத் பொன்சேகா தான் வெட்டினார்.

எனவே போர்க்குற்ற விவகாரங்களைப் பொறுத்தவரையில், இறுதிப்போருக்கு தலைமை தாங்கியவர்களில் கூடுதல் பொறுப்புடையவர்கள், குறைந்த பொற்றுப்புடையவர்கள் என்று யாரையும் சுட்டிக்காட்ட முடியாது.

ஆனால் இப்போது நடக்கின்ற இழுபறி ஒருவர் மீது மற்றவர் பழியைப் போட்டு தப்பித்துக் கொள்ளும் முயற்சிதான் நடக்கின்றது. போரில், சரத் பொன்சேகாவுக்கு இருந்த பங்களிப்பை கோத்தபாய ராஜபக்ஷவோ, மகிந்த ராஜபக்ஷவோ இப்போது குறைத்துக் கூறுகின்றனர். அவர் இல்லாவிட்டாலும் போரில் வெற்றி கிடைத்திருக்கும் என்கின்றனர்.

ஆனால் சரத் பொன்சேகாவை நம்பித்தான் மகிந்த ராஜபக்ஷ போரைத் தொடங்கினாரே தவிர, கோத்தபாய ராஜபக்ஷவை நம்பியல்ல.

கோத்தபாய ராஜபக்ஷ இராணுவத்தில் முன்னர் ஒரு அதிகாரியாக பணியாற்றியிருந்த போதிலும், அவர் நட்சத்திர அந்தஸ்து பெற்றவராக இருக்கவில்லை.

கோத்தபாய ராஜபக்ஷவை நம்பி போர் தொடங்கப்பட்டிருந்தால் அதன் திசை மாறியிருக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

சரத் பொன்சேகா இல்லாவிட்டாலும் வேறு ஒரு அதிகாரியை வைத்து தாங்கள் போரில் வெற்றியீட்டியிருப்போம் என்று கோத்தபாய ராஜபக்ஷ முன்னர் கூறியிருந்தார்.

அவ்வாறாயின் ஓய்வுபெற்றுச் செல்லும் நிலையில் இருந்த சரத் பொன்சேகாவை அவர்கள் ஏன் சேவை நீடிப்பு வழங்கி இராணுவத் தளபதியாக நியமித்திருக்க வேண்டும்? இராணுவத்தில் இருந்த அதிகாரிகளில் எவரையேனும் அந்தப் பதவிக்கு நியமித்திருக்கலாமே.

அதேவேளை போரை வைத்து ராஜபக்ஷவினர் பிழைப்பு நடத்தியுள்ளதாக சரத் பொன்சேகா இன்று குற்றஞ்சாட்டுகின்ற போதிலும், ராஜபக்ஷவின் அரசியல் தலைமைத்துவத்தினால் தான் போரில் வெற்றியீட்ட முடிந்தது என்று அவர் முன்னர் கூறியதையும மறந்துவிட முடியாது.

இறுதிப்போர் என்பது இந்த மூன்று பேரையும் சுற்றியதாகவே இருந்தது. மூவரும்தான் தலைமை தாங்கியிருந்தனர். எனவே போர்க்குற்றங்களுக்குப் பதிலளிக்கும் கடப்பாடும் மூவருக்கும் தான் இருக்கிறது.

போரில் சரத் பொன்சேகாவையும் மீறி பல சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்றும் தெரிகிறது. சரத் பொன்சேகா இராணுவத்துக்குத் தலைமை தாங்கிய ஒரு அதிகாரி மட்டுமே தவிர, அவருக்கே தெரியாத பல இரகசியங்கள் இருக்கின்றன என்று இப்போது மகிந்த ராஜபக்ஷவே கூறியிருப்பது முக்கியமானதொரு விடயம்.

இதனைத்தான் சரத் பொன்சேகா தனது குற்றச்சாட்டாக முன் வைத்திருக்கிறார்.

தம்மை போர்க்குற்றவாளியாக கூண்டில் நிறுத்த முயற்சிகள் நடப்பதாக கூறும் மகிந்த ராஜபக்ஷ, தனது வாயினால் தான் சரத் பொன்சேகாவுக்கும் தெரியாத இரகசியங்கள் இருந்தன என்று கூறியிருக்கிறார்.

போருக்குத் தலைமை தாங்கிய இராணுவத் தளபதிக்குத் தெரியாமல் இருந்த இரகசியங்கள் என்ன? அவ்வாறான இரகசியம் எதற்கு பேணப்பட்டது? இவையெல்லாம் இறுதிப்போர் குறித்த சந்தேகங்களை வலுப்படுத்தியிருக்கின்றன.

வெள்ளைக்கொடி விவகாரம் உள்ளிட்ட சில சம்பவங்கள் தனக்குத் தெரியாமல் நடந்திருப்பதாகவும் அது குறித்து விசாரிக்க வேண்டும் என்றும் சரத் பொன்சேகா கூறியிருந்தார். அதனை நிரூபிக்கும் வகையில்தான் மகிந்த ராஜபக்ஷ இரகசியங்கள் பலவும் இருந்ததாகக் கூறியிருக்கிறார். அவ்வாறாயின் போரில் ஒரு மறைமுக நிகழ்ச்சி நிரல் இருந்திருக்கிறது.

போரின் போது இராணுவத் தளபதிக்குக் கட்டுப்படாத அவரது கட்டளைக்கு அப்பால் செயற்படும் அணிகள் அல்லது நபர்கள் இருந்திருக்கின்றனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டது பற்றிய தகவலை இராணுவத் தளபதி அறிய முன்னரே தமக்கு ஆதாரத்துடன் தகவல் கிடைத்துவிட்டதாகவும், அதனால் தான் பாராளுமன்றத்தில் அறிவித்ததாகவும் மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

உண்மையில் போர் முடிந்துவிட்டதாக மகிந்த ராஜபக்ஷ 2009 மே 19 ஆம் திகதி காலை 10.30 மணியளவில் நாடாளுமன்றத்தில் அறிவித்த பின்னர் தான் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டதாகவும் அவரது சடலம் மீட்கப்பட்டுள்ளதாகவும் சரத் பொன்சேகாவுக்கு 53 வது டிவிஷன் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன மூலம் தகவல் கிடைத்தது.

அதன் பின்னரே இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா அந்த தகவலை மகிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

பிரபாகரன் கொல்லப்பட்ட தகவல் தமக்கு முன்கூட்டியே கிடைத்துவிட்டதாக மகிந்த ராஜபக்ஷ இப்போது கூறுகிறார். அப்படியானால் பாராளுமன்றத்தில் அதனை அவர் ஏன் அறிவிக்கவில்லை? என்ற கேள்வியும் இருக்கிறது.

சரத் பொன்சேகா வாயைத் திறந்ததால் பல கோணங்களில் கேள்விகளும் சர்ச்சைகளும் எழுந்திருக்கின்றன. இந்தச் சர்ச்சைகள் அனைத்திலும் பழி வாங்கும் உணர்வுகள் பிரதிபலிப்பது தெரிகிறது.

சரத் பொன்சேகாவை தாம் ஆட்சியில் இருந்த போது பழி வாங்கியதை பசில் ராஜபக்ஷவே ஒப்புக்கொண்டிருக்கிறார். இப்போது சரத் பொன்சேகாவின் முறை வந்திருக்கிறது. அவர் அதனை செய்யத் தொடங்கியிருக்கிறார்.

இதில் இறுதிப்போர் பற்றிய பல தகவல்கள் வெளி வருகின்றன. சான்றுகள் கிடைக்கின்றன.

ஆனால் அதே வேளை, சரத் பொன்சேகாவோ, மகிந்த ராஜபக்ஷவோ வெளியிடுகின்ற தகவல்கள் அனைத்தும் உண்மையானவை, சரியானவை என்று எடுத்துக்கொள்ள முடியாது.

இறுதிப்போர் மர்ம முடிச்சுகள் பலவற்றைக் கொண்டது. அவற்றில் சிலவற்றைத்தான் அவர்கள் அவிழ்க்கப் பார்க்கிறார்கள்.

என்றாலும் போர்க்குற்றங்கள் குறித்த முழுமையான இரகசியங்களை இரண்டு தரப்புமே வெளியிடப் போவதில்லை. ஏனென்றால் இது ஒருவர், இருவர் சம்பந்தப்பட்ட விவகாரம் அல்ல.

அனைவரும் பொறுப்புக் கூற வேண்டிய நிலையில் உள்ளவர்கள் என்பதால், தமது தலைக்குப் பாதிப்பு வராத வகையில்தான் முடிச்சுகளை அவிழ்ப்பார்களே தவிர, ஒரு கட்டத்துக்கு மேல் அவர்களால் செல்ல முடியாது.

இப்படியான நிலையில் மகிந்த ராஜபக்ஷ - சரத் பொன்சேகா மோதல் இரகசியங்கள் எல்லாவற்றையும் வெளிக் கொண்டு வரும் என்று தமிழர் தரப்பு எதிர் பார்த்தால், இலவு காத்த கிளியின் நிலைதான் ஏற்படும்.

சுபத்ரா

உழைப்புக்குத் தேவையான வலிமையான கரங்களைவிட உங்கள் இலட்சியங்களில் வலிமை அதிகமாக இருக்க வேண்டும்.-கிரிஷ்பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## மனித நேயப் பண்பாளர் டாக்டர் தெய்வேந்திரன்

வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அவர்கள் காலமானார் என்ற செய்தி இதயத்தை நெருட வைப்பதாகும். அவரின் இழுப்பின் துயர் அவரை அறிந்த பலரை வாட்டவே செய்யும். அந்தளவுக்கு அவரின் மனித நேயப் பண்பும் சேவையுள்ளமும் மக்கள் மனங்களில் ஆழப் பதிந்துள்ளன.

யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி என்ற பதவியை அலங்கரித்த டாக்டர் தெய்வேந்திரன் அவர்கள் மக்கள் இன்னல்பட்ட வேளை மக்களோடு மக்களாக இருந்து ஆற்றிய பணியை ஒரு போதும் மறந்துவிட முடியாது.

யுத்த சூழல், போக்குவரத்து இன்மை, பொருளாதாரத்தடை என்ற நெருக்கடியான சூழலில் யாழ்.குடாநாட்டில் மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்ட போது, சர்வதேச சுகாதார நிறுவனங்களுடன் டாக்டர் தெய்வேந்திரன் அவர்கள் தொடர்பு கொண்டு நிலைமைகளை தெளிவுபடுத்தினார்.

சர்வதேச தொண்டு நிறுவனங்களுடன் அவருக்கு இருந்த தொடர்பும் அவர் மீதான மரியாதையும் தேவையான மருந்துப் பொருட்களை கொண்டு வந்து சேர்ப்பதில் பேருதவி புரிந்தது.

இருட்டைக் குறை சொல்லாதீர்கள் வெளிச்சத்தை ஏற்றுங்கள் என்ற வாசகத்தை அடிக்கடி உச்சரிக்கும் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அவர்களிடம் இருந்த மனிதநேயம், இரக்கம், உதவி செய்யும் உயர்ந்த பண்பு, பரோபகாரம் என்பன மக்கள் சமூகத்தில் அவருக்கென தனியானதோர் உயர் மதிப்பைக் கொடுத்திருந்தது.

சுகாதாரக் கல்வி மூலமே எங்கள் நாட்டின் சுகநல மேம்பாட்டை உயர்த்த முடியும் என்பதில் உறுதியாக இருந்த டாக்டர் தெய்வேந்திரன் அவர்கள் அதற்காகத் தன்னை அர்ப்பணித்து சேவை செய்தார்.

தொண்டர்கள், சமூகத் தலைவர்கள், தாய்மார்கள் என்ற வகுதியினருக்கு சுகாதாரக் கல்வியை வழங்குவதில் அவரின் பணி வெற்றி கண்டது.

எந்தப்பணியையும் நாளை பார்க்கலாம் என்றில்லாமல் இன்றே செய்தல் என்ற உறுதிப்பாடும் அவரிடமிருந்த தீர்க்க தரிசனமும் திட்டமிடலும் வருமுன் காத்தல் என்ற இலக்கும் அவரின் பணியை பலருக்கும் முன் உதாரணப்படுத்தியது.

எங்கள் மண்ணில் யுத்தம் நடந்த போது, இந்த நேரத்தில் தான் எங்கள் மக்களுக்கு உதவ வேண்டும். மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்ற சிந்தனையை தன்னோடு கடமை புரிந்த அனைவரிடமும் ஏற்படுத்தி அன்பு, அறிவுரை, கடமையுணர்வு என்பவற்றின் புரிதலினூடாக உத்தியோகத்தர்களிடம் இருந்து வினைத்திறன் மிக்க பணியை பெற்றவர். இதனால் அவர் மிகச் சிறந்த நிர்வாகி என்று அனைவராலும் புகழப்பட்டார்.

யாழ்ப்பாணத்தில் இயங்கிய அத்தனை சர்வதேச தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளும் வைத்திய கலாநிதி தெய்வேந்திரனை தேடி வருவார்கள். தங்களின் உதவிகள் எப்படி அமைய வேண்டும் என்று அவரிடம் ஆலோசனை கேட்பார்கள். அவர் வழங்கிய ஆலோசனைகள் தான் யுத்த காலத்தில் குடாநாட்டு மக்களின் சுகநலத்தை பாதுகாக்கப் பேருதவியாயிற்று.

ஏழை மக்களின் நலனில் அக்கறை கொண்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், வட மாகாண புற்றுநோய் தடுப்புச் சங்கம் என்பவற்றை இயக்கி எங்கள் மக்களுக்கு சேவையாற்றிய டாக்டர் தெய்வேந்திரன் யாழ்ப்பாண மாநகர சபையின் சைவசமய விவகாரக்குழுவை ஆரம்பித்து சமயப் பணி செய்யவும் வித்திட்டவர்.

புகழை விரும்பாத ஒரு உத்தமர்; மாறி வரும் உலகிற்கேற்ப அறிவாற்றலை இற்றைப்படுத்திய ஒரு பேராசான்; மனிதநேயப் பண்பாளர்; ஒட்டு மொத்தத்தில் எங்கள் மண்ணில் நடமாடிய ஒரு பல்கலைக்கழகம். அந்தப் பல்கலைக்கழகத்தில் படித்த பயன் அவரின் இழப்பை ஜீரணிக்க மறுக்கிறது.

இதயத்தை இறுக்கிக் கொள்ளும் இந்த நேரத்தில் ஒரு மருத்துவராக மட்டு மன்றி மக்களை நேசித்து உற்ற நேரத்தில் பேருதவி புரிந்த ஒரு உத்தமனுக்காய் தமிழன்னை தன் அஞ்சலியைச் செலுத்துகின்றாள்.

## விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கைதடி தென்கிழக்கு உவரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், சர்வதேச மகளிர் தினத்தைத் முன்னிட்டு நடத்தும் விளையாட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

உவரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி திருமதி குகனேஸ்வரி முத்துராமலிங்கம் தலைமை தாங்கவுள்ளார். வடக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளருமான கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச செயலகத்தின கிராம அபிவிருத்தி அலுவலர் பா.சதீஸவரனும், தென்மராட்சி தமிழரசுக் கட்சி அமைப்பாளர் கந்தையா அருந்தவபாலனும் யாழ். கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் உப அதிபர் திருமதி கிருஷ்ணமூர்த்தி சிவலோஜினியும் சிறப்பு விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (இ-5)

⅄ ⅄ ⅄ ⅄ ⅄

பிரதேச விளையாட்டு விழா யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு நடைபெறும்.

கரவெட்டி பிரதேச செயலாளர் ச.சிவஸ்ரீ தலைவராகவும் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா.செந்தில் நந்தனன் பிரதம விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தேசிய பாடசாலையாகிய யாழ். நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் க.கிருஷ்ணகுமார் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வார். (இ

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### உளப்பூர்வமாக தர்மம் செய்யுங்கள்

இறைவன் கூறுகின்றான்:

★ இறைநம்பிக்கை கொண்டோரே! இறைவன் மீதும், மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொள்ளாமல் மனிதர்களுக்குக் காண்பிப்பதற்காகவே தனது பொருளை செலவு செய்பவனைப் போல நீங்களும் கொடுத்ததைச் சொல்லிக் காண்பித்தும், (மனம்) புண்படச் செய்தும் உங்களுடைய தான தர்மங்களைப் பாழாக்கிவிடாதீர்கள். அவன்(செய்யும் செலவுக்கு) உவமை, மண் மூடிய ஒரு வழுக்குப் பாறையைப் போன்றதாகும். அதன் மீது பெருமழை பெய்து, (அதைமூடியிருந்த மண்ணை அடித்துக் கொண்டுபோய்) அதை வெறும் பாறையாக்கிவிட்டது. இத்தகையவர்கள் செய்யும் தான தர்மங்களால் எதையும் (எந்த நன்மையையும்) ஈட்ட முடியாது. மேலும், நன்றி கொல்லும் மக்களுக்கு நேர்வழி காண்பிப்பது இறைவனின் நியதி அல்ல!

★ (இதற்கு மாறாக) யார் இறைவனுடைய திருப்தியை நாடி உளப்பூர்வமாக தங்கள் பொருடகளைச் செலவு செய்கின்றார்களோ அவர்களு(டைய தர்மத்து)க்கு உவமை, உயரமான பூமியிலுள்ள ஒரு தோட்டம் போன்றதாகும். அதில் பெருமழை பெய்யும் பொழுது தன்னுடைய கனிகளை அது இரு மடங்காகத் தருகிறது. அப்படி பெருமழை அதில் பெய்யவில்லை என்றாலும், இலேசான தூறல் கூட அதற்குப் போதுமானதாகும். நீங்கள் செய்பவற்றையெல்லாம் இறைவன் நன்கு பார்ப்பவனாக இருக்கின்றான்.

(வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து)

## பொருத்தமான வாக்களிப்பு முறை பற்றிய முழுநாள் கருத்தரங்கு

சிந்தனைக்கூடம்-யாழ்ப்பாணம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இலங்கையின் அனைத்து மக்களையும் அதிகபட்சம் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு உகந்த புதிய, பொருத்தமான வாக்களிப்பு முறையை முன்வைத்தல் எனும் தலைப்பில் முழு நாள் கருத்தரங்கு ஒன்று நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப10மணி முதல் பி.ப4மணிவரை 121,இரண்டாம் குறுக்குத்தெருவில் அமைந்துள்ள சிந்தனைக்கூடத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சிந்தனைக்கூடப்பணிப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரனின் வழிகாட்டுதலில் இடம்பெறவுள்ள இக்கருத்தரங்கில் வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ.வரதராஜப்பெருமாள், மாற்றுக் கொள்கைக்கான நிலையத்தின் பணிப்பாளர் கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து , யாழ். பல்கலைக்கழக சட்டவிரிவுரையாளர் ஜனகன்,சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் பொ. சிவானந்தன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்படி கருத்தரங்கிற்கு ஆர்வமுள்ளோர் வருகை தந்து கலந்து தங்கள் பங்களிப்புக்களை வழங்க வேண்டுமென சிந்தனைக்கூட செயலாளர் இ. கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார்.(இ-5)

## ஆணைக்குழு முன் புஷ்பகுமார ஆஜர்

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஊவா மாகாண விசேட திட்டப் பணிப்பாளரான முன்னாள் அமைச்சர் ஜகத் புஷ்பகுமார நேற்று முற்பகல் பாரிய ஊழல் மற்றும் மோசடிகள் குறித்து விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகியுள்ளார்.

ஜகத் புஷ்பகுமாரவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள 4 குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வாக்குமூலம் பெறவே அவர ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகியுள்ளார்.

தெங்கு அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது, சிலாபம் மற்றும் குருநாகல் பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு சொந்தமான 32 இலட்சத்து 7 ஆயிரத்து 500 ரூபாய் பணத்தை முறைகே டாக பயன்படுத்தியமை மற்றும் மே தின ஊர்வலத்திற்காக ரி-சேர்ட்கள் அச்சிட்டதாக ஜகத் புஷ்பகுமாரவுக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (செ-12

## பொங்கல் விழா

சுன்னாகம் தாழையம்பதி ஹரிகர புத்திர ஐயனார் தேவஸ்தானத்தில் நடைபெற்ற வருடாந்த மஹோற்சவத்தை தொடர்ந்து நடைபெறும் பொங்கல் விழாவானது நாளை மறுதினம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5மணிக்கு ஆரம்பமாகும். (இ

## பெரிய வெள்ளி ஆராதனை

குருநகர் புனித யாகப்பர் ஆலய தவக்கால பெரியவெள்ளி ஆராதனை இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

பெரியவெள்ளி ஆராதனையுடன் திருப்பலி முடிவுற்றதும் பாரம்பரியமாக நடந்துவரும் உடக்குப் பாசின் ஒரு பகுதியான இயேசு சிலுவையில் மரணிக்கும் நிகழ்வு இயங்கு நிலையில் காண்பிக்கப்படவுள்ளது.

அன்றையதினம் பல இடங்களில் இருந்து கிறிஸ்தவர்கள் வருகை தந்து ஆராதனையில் பங்குபெறுவது வழக்கம். (இ-5)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** மயிலங்காடு, குப்பிளான், உடுப்பிட்டி V.C, நாச்சிமார் கோவிலடி, கொற்றாவத்தை, பொலிகண்டி, ஆலடி, நெடியகாடு, வெள்ள றோட், உடுப்பிட்டி சந்தி, உடுபபிட்டி நாவலடி, வன்னிச்சி அம்மன் கோவிலடி, பாரதி சனசமூக நிலையத்தடி, பழைய பொலிஸ் நிலையத்தடி, வல்வெட்டித்துறை சந்தி, உடுப்பிட்டி வாசிகசாலை சந்தி, பொக்கணைச் சந்தி, கெருடாவில், தொண்டைமானாறு, மயிலியதனை, சிதம்பராக்கல்லூரி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** தெனனியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், கோவிந்தன்கடை சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுபபிக்குளம், உடச்சகண்டி, மாயவனூர், இராமநாதபுரம், சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, இரணைமடு விமானப்படை I மற்றும II, வட்டக்கச்சி பாம், 651 ஆவது படைப்பிரிவு முகாம், பிள்ளையார் அரிசி ஆலை கிருஸ்ணபுரம், அம்பாள்குளம், விநாயகபுரம், விவேகானந்தநகர், பாரதிபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, இரணையிலுப்பைக்குளம், சாஸ்திரி கூழாங் குளம், ஈச்சங்குளம், கிடாச்சூரி, காக்கையன்குளம், பூம்புகார், நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழில்நுட்பக்கல்லூரி ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஆன்மா

ஆன்மா, மனம்- உடல் இவற்றின் கூட்டுச் சேர்க்கை அல்ல. இது தவறான கருத்து. ஆன்மா என்பது உடலும் அல்ல, மனமும் அல்ல.

எல்லா யோகாசனங்களையும் உடலுக்காக நீங்கள் செய்கிறீர்கள். தியானமெல்லாம் மனத்திற்காக நீங்கள் செய்கிறீர்கள்.

இம்மானிட உடலைப் பெற்றிருப்பதன் நோக்கமே நீங்கள் எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள் என்பதை உணர வைக்கவும் நீங்கள் உயர்வாகப் போற்றும் எல்லாப் பண்பு நெறிகளோடும் உங்களை வாழ வைக்கவும் உங்களைச் சுற்றிலும் ஒரு தெய்வீக உலகை உருவாக்கவும்தான்.

அமைதியோ குழப்பமோ மனம் மனமாகத்தான் இருக்கும்.
நோயோ நலமோ உடல் உடலாகத் தான் இருக்கும்.
அனைத்தையும் உள்ளடக்கியதே ஆன்மா
எந்த ஒரு நோக்கமும் இல்லாச் சேவை
காரணம் தேடாத அன்பு
சிற்றறிவு இல்லா ஞானம்
காலத்தையும் நிகழ்வுகளையும் கடந்த வாழ்க்கை
இவையாக நீங்கள் இருக்கிறீர்கள்

# கே.சி.சி.சி.வெற்றிக்கிண்ணம் 2 ஆவது சுற்றில் சிறிகாமாட்சி




கே.சி.சி.சி.வெற்றிக் கிண்ணத்திற்காக கொக்குவில் மத்தியசனசமூகநிலையவிளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 3 ஆவது போட்டி 20.03.2016 பிற்பகல் 1.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் சிறிகாமாட்சி அணி றெயின்போ அணியை 35 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிகாமாட்சி அணி 30 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. தீபன்-62, சுதர்ஸன்-41, கஜீபராஜ்-35, அபிசான்-30 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் றெயின்போ அணியை சார்ந்த செந்தூரன்-2, விஜயன், குகன், யதுஸன் தலா ஒரு இலக்கினை கைப்பற்றினர். பதிலுக்கு துடுப்பெ டுத்தாடிய றெயின்போ அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. றஜீவன்-38, குகன்-59, யதுஸன்-28, குணசீலன்-22 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் சிறிகாமாட்சி அணியைச் சார்ந்த மோகன்ராஜ்-3, சனந்தன், சுதர்ஸன் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து 7 வருடங்களாக நடத்தி வரும் தர வரிசைப் பட்டியலுக்கு சிறிகாமாட்சி அணி 6.62 புள்ளிகளையும், றெயின்போ அணி 2.62 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (க)

# சென்.யூட் வெற்றி

நாமகள் வி.கழகம் நடத்தும் காற்பந்தாட்டத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். யூட் அணி வெற்றி பெற்றுள்ளது.

தெல்லிப்பழை நாமகள் சன சமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் காற்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 4.45மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். யூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நீர்வேலி வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் இளவாலை சென். யூட் விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (க)

# இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியான உதைபந்தாட்ட போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மனோகரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கழுகுகள் விளையாட்டுக்கழகமும் மாலை 4.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் நாமகள் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# கரவெட்டி கிருஸ்ரார் விளையாட்டுக்கழக யாழ்.மாவட்ட ரீதியிலான துடுப்பாட்டம்

## இளந்தளிர் வீனஸ் சம்பியன்





தொண்டைமானாறு நவிண்டில் இணைந்த அணியை வெற்றி கொண்டது இளந்தளிர்வீனஸ் இணைந்த அணி.

கரவெட்டி கிருஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட அணிகளுக்கிடையே நடத்திய துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை கொலின்ஸ் மைதானத்தில் இடம் பெற்றது. இதில் இளந்தளிர், வீனஸ் இணைந்த அணியை எதிர்த்து தொண்டைமானாறு, நவிண்டில் இணைந்த அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இளந்தளிர் வீனஸ் அணி முதலில் துடுப்பாடி அவ் அணி 10 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 85 ஓட்டங்கள் பெற்றது. துடுப்பாட்டத்தில்,

✦ மல்லி 20 ஓட்டங்களையும்

✦ பிரதாபன் 18 ஓட்டங்களையும்

✦ திருபரன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நவிண்டில் அணி 10 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 65 ஓட்டங்களைப் பெற்றது.

✦ பிரசாந்த் 3 விக்கெட்டுக்களையும்

✦ அமீர் 2 விக்கெட்டுக்களையும்

✦ நிரோ(சோனி) 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனான பிரசாந் தெரிவு செய்யப்பட்டார். (க)

# நெடுங்கேணி பி.செயலக காற்பந்தாட்ட தொடர்

## நெய்தல் விளையாட்டுக்கழகம் சம்பியன்

(யாழ்ப்பாணம்)

நெடுங்கேணி பிரதேச செயலக கழகங்களுக்கு இடையிலான காற்பந்தாட்டத்தில் மருதோடை நெய்தல் விளையாட்டுக்கழக அணி சம்பியனாகியுள்ளது.

நெடுங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் மருதோடை நெய்தல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாமடுவின் விளையாட்டுக்கழக அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பமானது முதல் நெய்தலின் ஆதிக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. 16 ஆவது நிமிடத்தில் நெய்தல் அணி முதல் கோலைப் பதிவு செய்ய அந்தக் கோலே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது.

இரண்டாம் பாதியின் 8 ஆவது நிமிடத்தில் நெய்தலின் சார்பாக மேலும் ஓர் கோல் பதிவாக 2:0 என்ற கோல் கணக்கில் நெய்தல் அணி சம்பியனானது. (க)



பருத்தித்துறை பிரதேச செயலக 2016 ஆம் ஆண்டுக்கான விளையாட்டுப் போட்டிகளில் ஆண்களுக்கான கபடி போட்டி சித்தி விநாயகர் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் அந்தோனிஸ் விளையாட்டுக்கழகம் 2 ஆம் இடத்தை பெற்றுக் கொண்டது. அவ் அணியினரை படத்தில் காணலாம்.

# வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான காற்பந்து தொடர்

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான காற்பந்தாடத் தொடரில் 17 வயதுப் பிரிவில் கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை அணியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் இறுதியாட்டத்தில் மோதத் தகுதி பெற்றுள்ளன.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் அணமையில் குறித்த அரையிறுதி ஆட்டங்கள் நடைபெற்றன. முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையும் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையும் பலப்பரீட்சை நடத்தின.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் ஏக ஆதிக்கம் செலுத்திய கொற்றாவத்தை அணி முதற்பாதியில் றொபின்சன் மற்றும் அபிராம் ஆகியோரின் உதவியுடன் 2 கோல்களைப் பதிவு செய்தது. வேறெந்த கோல்களும் பதிவாகாத நிலையில், கொற்றாவத்தையின் ஆதிக்கத்துடன் முதல் பாதி நிறைவடைந்தது.

முதல் பாதியில் காட்டிய ஆதிக்கத்தை இரண்டாம் பாதியில் தொடர முடியாது தடுமாறியது கொற்றாவத்தை. ஆனாலும் 14 ஆவது நிமிடத்தில் கிடைத்த சந்தர்ப்பத்தை வர்மன் கோலாக்க இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றது அந்த அணி.

தொடர்ந்து இடம்பெற்ற மற்றொரு அரையிறுதியாட்டதில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி அணியும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன. எந்தவொரு அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடியாத நிலையில் ஆட்டம் நகர்ந்து கொண்டிருந்தது.

கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. அதே நிலைமைதான் இரண்டாம் பாதியிலும். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் இறுதியாட்டத்துக்கு செல்லும் அணி தீர்மானிக்கும் நிலைமை.

3:1 என்ற கோல் கணக்கில் வென்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி. (க)

## வினாப்பத்...

சமய பாடத்தில் தற்போதைய அரசியல் தலைவரை சேர்த்துள்ளமை பௌத்த மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

அவ்வாறு சேர்க்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய வினா வருமாறு,

தன்னால் மேற்கொள்ளப்படும் சகல நற்காரியங்களும் நல்லபதி வேட்டில் பதிந்து, மரண வேளையில் அதனை வாசிக்கக் கொடுத்து தன்னால் நிர்மாணிக்கப்பட்ட விகாரையின் பக்கம் பார்த்து கடைசி மூச்சை விட்டவரும் இந்த தாய் நாட்டை எதிரிகளிடமிருந்து மீட்டவருமான ஆட்சியாளர் யார்?

வழங்கப்பட்டுள்ள தெரிவு விடைகள்,

1. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 2. முதல் நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன, 3. துட்டகைமுனு அரசன், 4. மகா பராக்கிரமபாகு அரசன்.

மேற்படி கேள்விக்குரிய சரியான விடை துட்டகைமுனு அரசன் என்பதாகும். (செ-12)

## யாழ்ப்பாண...

விதிக்கப்பட்ட சம்பவமான மத்திய வங்கி மீதான குணடு தாக்குதலின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் கைவிரல் அடையாளங்கள் என்பனவும் இந்தக் கண்காட்சியில் உள்ளடங்க வுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-4)


## ஆணைக்குழு...

சர்ச்சைக்குரிய ரக்னா லங்கா நிறுவனக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வாக்கு மூலம் அளிக்கும் நோக்கில் அவ்வாறு ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகியுள்ளார்.

ரக்னா லங்கா நிறுவனக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஏற்கெனவே பல தடவைகள் கோதபாய ராஜபக்ஷ, ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# மகிந்த அதிகாரமின்றி இருப்பதால்தான் நாம் அச்சமின்றி செயல்படுகிறோம்

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண சுட்டிக்காட்டு



(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்கு குண்டு துளைக்காத வாகனம் கொடுத்தால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படும். அவர் அதிகாரம் இல்லாமல் இருப்பதால் தான நாங்கள் அச்சமின்றி செயல்படுகின்றோம் என நவ சமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார.

கொழும்பில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தமிழ் மக்களை சந்தித்து உயிரிழந்த அவர்களின் உறவினர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் சிங்கள மக்களையும்சந்தித்து உயிரிழந்த இராணுவ வீரர்கள் தொடர்பாக கவலை தெரிவித்தேன்.

சிறையில் அடைக்கப்பட்ட சரத் பொன்சேகா குறித்தும் அவர்களுடன் கதைத்தேன். அதன் பிறகு நான் இங்கிலாந்தில் இருந்து வரும் வழியில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வெளியாகும் போது என்னை கொலை செயவதற்கு திட்டமிட்டனர். ஆனால் நான் தப்பி வந்தேன்.

அந்த காலப்பகுதியில் நாங்கள் மிகவும் அச்சத்துடனேயே இருந்தோம். எங்களது உயிருக்கு எந்த உத்தரவாதமும் இருக்கவில்லை. தற்போது மகிந்த ராஜபஷ்வுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

அதனால் நாங்கள் அச்சமின்றி செயற்படுகின்றோம்.

இவ்வாறான நிலையில் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவித்து தனக்கு குண்டு துளைக்காத வாகனம் வழங்கப் பட வேண்டும் என அவர் கூறுகின்றார்.

மகிந்தவுக்கு குண்டு துளைக்காத வாகனம் வழங்குவதானது எனது உயிருக்கே அச்சுறுத்தலாகும். ஏனென்றால் அவர் அதிகாரம் இன்றி இருப்பதால்தான் நாங்கள் அச்சமின்றி வெளிப்படையாக கதைக்கின்றோம்.

அவருக்கு குண்டு துளைக்காத வாகனம் வழங்குவதென்றால் எனகும் வழங்க வேண்டும். அப்போது தான் அவரிடம் இருந்து என்னை பாதுகாத்துக்கொள்ள முடியும் என்றார் கலாநிதி விக்கிரமபாகு கருணரட்ண. (செ-12)

## 14 கிலோ கேரள கஞ்சாவுடன்...

வவுனியாவில் 14 கிலோ 560 கிராம் கேரளா கஞ்சா பொதிகளுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் இருந்து ஹயஸ்ரக வாகனம் ஒன்றில் 14 கிலோ 560 கிராம் கேரளா கஞ்சாவுடன் வந்த இளைஞனே வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வைத்து நேற்றுக் காலை 9.00 மணியளவில் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த நபரின் வாகனத்தை மறித்து சோதனை செய்த போது அதில் இருந்து பெறுமதி வாய்ந்த கேரளா கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட இளைஞனை வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

மேலும் வவுனியா மாவட்டத்தில் இது வரையில் பிடிக்கப்பட்ட அதிகூடிய கேரளா கஞ்சா இதுவெனவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர். (செ-2, 250)

## பண்பாடுள்ள சந்ததி உருவாக...

கேகாலை புனித ஜோசப் மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் நேற்று முற்பகல் கலந்து கொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன இதனைத் தெரிவித்தார்.

பிள்ளைகளதும் தாய்மார்களினதும் உயிர்களுக்கு விலைபேசும் ஒரு காலகட்டத்தில், அப்பாவி மிருகங்களின் தோல்களை கொடூரமாக உயிருடன் அகற்றும் மிருகத்தனமான மனிதர்கள் வாழும் ஒரு சமூகத்தில் பண்பாடுள்ள எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்கு பாடசாலைகள் முன்னின்று செயற்பட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

பௌதிக வளங்களில் நாடு எவ்வளவுதான் அபிவிருத்தி அடைந்த போதும் அங்கு வாழும் மனிதரகள் பண்பாடற்றவர்களாக இருக்குமிடத்து இவ் அபிவிருத்திகளின் பயனை அடைய முடியாதென ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டின் இலவசக் கல்வியை பலப்படுத்துவதற்கு அரசு நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத் திட்டத்தின் கீழ் இன்று மாணவர்கள் பரீட்சைகளில் அதி சிறந்த பெறுபேறுகளை பெறுகின்றனர் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி தொழிற கல்வி மற்றும் மூன்றாம் நிலை கல்வி ஆகிய துறைகளின் அபிவிருத்திக்காக தேசிய மட்டத்தில் பல கல்வி நிறுவனங்கள் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்படுமெனத் தெரிவித்தார்.

இன்று எமது தேசிய பொருளாதாரத்திற்கு அதிகபட்ச பங்களிப்பினையும் ஆகக்கூடிய அந்நிய செலாவணியையும் எமது நாட்டு பெண்களே ஈட்டித் தருவதாகவும் பொருளாதாரத்திற்காக மனித வளத்தினை அபிவிருத்தி செய்து நாட்டின் தொழிற்படையை பயிற்றப்பட்ட தொழிற்படையாக மாற்றியமைப்பது அரசின் நோக்கமாக வுள்ளதெனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

திறமை காட்டிய மாணவிகளுக்குரிய பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை இதன்போது ஜனாதிபதி வழங்கிவைத்தார்.

அவ்வாறே கல்லூரிக்கு சிறந்த சேவையாற்றிய ஆசிரியர்களை பாராட்டி அவர்களுக்கான நினைவுச் சின்னங்களையும் ஜனாதிபதி வழங்கிவைத்தார்.

ஜனாதிபதியின் விஜயத்தை நினைவுகூர்ந்து பாடசாலையின் அதிபர் திருமதி பி.ஆர்.மல்லிகாவினால் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னம் வழங்கிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அமைச்சர்களான கபீர் ஹசிம், ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, இரா ஜாங்க அமைச்சர் சம்பிக்க பிரேம தாச, சப்பிரகமுவ மாகாண முதலமைச்சர் மஹிபால ஹேரத் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர் குழாம், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-12)

## பிரகீத் கடத்தப்பட்டமை தொடர்...

வைத்ததாக கூறப்படும் கிரித்தலே முகாமை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் சோதனையிட்ட போது, இராணுவ அதிகாரி ஒருவர் கொலை செய்யப்பட்டு முச்சக்கர வண்டியுடன் புதைக்கப்பட்டிருந்த சம்பவம் குறித்த தகவலும் வெளியாகியது.

2010-ம் ஆண்டு முதல் 2015-ம் ஆண்டு வரையான மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் பிரகீத்தை புலி எனக் கூறவில்லை. அவர் தலைமறைவாகி உள்ளதாக மாத்திரமே கூறினர்.

மகிந்த ராஜபக்ஷ காலத்தில் பிள்ளையான், கருணா போன்றவர்கள் அரசாங்கத்தில் பதவிகளை வகித்தனர். பிரகீத்தை புலி என கூறும் நபர்கள் இதனை மறந்து விட்டனர்.

பிரகீத்தை கடத்திச் சென்று காணாமல் போக செய்து அல்லது கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதால், அவர்களுக்கு ஆதரவாக கோஷமிடும் ராஜபக்ஷ கோஷ்டியினர், பிரகீத்தை புலி எனக் கூறி குற்றம் சுமத்தி வருகின்றனர்.

இவ்வாறு குற்றச்சாட்டை சுமத்தி, விசாரணைகளை குழப்பி, சந்தேக நபர்களை விடுவித்து கொள்ள இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

பிரகீத் காணாமல் போன சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்பட விருப்பதாக ஊடகம் ஒன்றில் செய்தி வெளியாகியுள்ளது.

இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டால், எனது உயிருக்கு மாத்திரமல்லாது, வழக்கில் ஆஜராகும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இதனால், விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன். அத்துடன் எனது உயிருக்கு ஆபத்து நேர்ந்தால், அதற்கான பொறுப்பை ஏற்குமாறும் கோரிக்கை விடுக்கின்றேன்.

எனது கணவர் காணாமல் போன சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியே உத்தரவிட்டார் என்ற காரணத்தினாலேயே நான் ஜனாதிபதியிடம் இந்த கோரிக்கையை விடுக்கின்றேன்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் பயன்படுத்திய வாகனங்கள் பற்றிய தகவல்களை இராணுவத்திடம் கோரியுள்ள போதிலும் அந்த தகவல்கள் இன்னும் நீதிமன்றத்திற்கு வழங்கப்படவில்லை.

எனது கணவர் கடத்திச் செல்லப்பட்டு அல்லது கொலை செய்யப்பட்டு இன்றுடன் 2 ஆயிரத்து 265 நாட்கள் கடந்துள்ளது எனவும் சந்தியா எக்னெலிகொட குறிப்பிட்டுள்ளார். (செ-12)

## படை வீரர் கிராமத்திற்கு...

லிணக்கம் மற்றும் சக வாழ்வை அடிப்படையாக கொணடதென பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியா ராய்ச்சி முன்னதாக தெரிவித்திருந்தார்.

இதன்படி நல்லிணக்க படை வீரர்கிராமம் நாற்பது பேர்ச் வீதம் எணபது காணித்துண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஐம்பத்தியொரு வீடுகளை கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டு, இராணுவத்தில் இணைந்த தமிழ் பெண்களுக்கும், தமிழ் பெண்களை திருமணம் முடித்த இராணுவத்திற்கும்முன்னுரிமை வழங்கப்பட உள்ளதாகவும் பாதுகாப்பு செயலர் அறிவித்துள்ளார்.

முற்று முழுதாக இராணுவ நோக்குடன் கட்டப்படும் இந்த வீட்டு திட்டத்தில் வீடு ஒன்று இரண்டு மில்லியன் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றது.

இது தவிர இங்கு மைதானம் மற்றும் பூங்கா ஆகிய அமைப்பதற்கான நடவடிக்கைகளும் இடம் பெற்றுவரும் நிலையில், இதனை எதிர்வரும் மூன்றாம் திகதி ஜனாதிபதி மைத்திரி திறந்து வைக்க வுள்ளதாகவும் பாதுகாப்பு செயலர் அறிவித்துள்ளார்.

இந்நிலையிலேயே குறித்த வீட்டு திட்டம் தொடர்பில் நேற்றைய வடக்கு மாகாண சபை அமர்வில் கேள்வி எழுப்பிய உறுப்பினர் சர்வேஸ்வரன், இந்த வீட்டுதிட்டத்திற்கு அனைத்து உறுப்பினர் களையும் எதிர்ப்பு தெரிவிக்குமாறு கோரினார்.

இதனை அடுத்து மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த எதிர்ப்பில் தாம் பங்கு கொள்ளவில்லை என கூறி எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இதிலிருந்து விலகினர். எனினும் சபையில் பிரசன்னமாகியிருந்த ஆளுங் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் சர்வேஸ்வரனால் கொண்டுவரப் பட்ட விடயத்திற்கு ஆதரவு தெரிவித்து எழுந்து நின்றனர்.

குறித்த இராணுவத்தின் வீட்டு திட்டத்தை இராணுவத்திற்கு வழங்காது போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டது.

இதன் போது உறுப்பினர் சிவாஜிலிங்கம் நல்லாட்சி அரசை கடுமையாக சாடியிருந்தார். (செ-4)

## 'அரசைக் கவிழ்க்க...

குறிப்பிட்டார்,

அரசாங்கத்தை எவ்வாறு கவிழ்ப்பது என்பதனை அறிந்து கொள்ள வேண்டுமாக இருந்தால் மகிந்த ராஜபக்ஷவிடம் என்னை சந்திக்குமாறு கூறுகின்றேன்.

அரசியலில் ஸ்திரத்தன்மை இல்லை என்பதனை எடுத்துக்காட்டும் நோக்கிலேயே அவரது திருட்டுக் குழுவினர் ஒவ்வொரு இடங்களுக்கும் சென்று தேங்காய் உடைக்கின்றனர் என மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (செ-12)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## பொருத்து வீட்டு...

நாற்பத்தி எட்டாவது அமர்வு நேற்றையதினம் நடைபெற்றது.

நேற்றைய அமர்வின் போது உறுப்பினர் ரவிகரன், மீள்குடியேற்ற அமைச்சினால் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள 65 ஆயிரம் வீட்டுத்திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு தேவையான 14 ஆயிரம் வீடுகளையும் முழுமையாக அமைத்துத்தருவதற்கு ஜனாதிபதியிடம் வலியுறுத்த வேண்டும்.

மீள்குடியேற்ற அமைச்சினால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு விசேடமாக வீட்டுத் திட்டம் வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தினை வரவேற்கும் அதேவேளை, 65 ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 7 ஆயிரம் வீடுகள் கிடைகக வுள்ளன.

ஆனால், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 14 ஆயிரம் வீடுகள் தேவையாக இருக்கின்ற போது, அமைக்கப்படும் பொருத்து வீட்டுத் திட்டத்தின் பெறுமதிக்கு அனைத்து வீடுகளையும் ஸ்திர தன்மைகளுடன் அமைத்துக் கொடுக்கமுடியும்.

எனவே இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனிடம் வலியுறுத்தி தீர்வினைப் பெற்றுத்தருமாறு கோரி தனது பிரேரணையை முன்மொழிந்தார்.

இந்நிலையில் குறித்த வீட்டு திட்டம் வடக்கு மாகாண சபையின் ஒப்புதல் இன்றி நடைபெறுகின்றது. குறிப்பாக கடந்த அரசாங்கம் போல் முகவர் அரசியலை இந்த அரசும் செய்கின்றது.

தாங்களே குத்தகை எடுத்து மக்கள் பிரதிநிதிகளை புறக்கணிக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இது தமக்கான இலாபங்களை பெறும் முயற்சியாகவே நாம் பார்க்கின்றோம். இப்பொழுது இதனை அரசியல் ஆக்கியுள்ளார்கள். இவ்வாறான அரசியல் செய்து, எமது மக்களை திசை திருப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு கொண்டுள்ளார்கள்.

இவ்வாறான நடவடிக்கைகள் எமக்கு பெரும் பின்னடைவுகளை ஏற்படுத்தும். ஒரு பொருத்து வீட்டினை திருத்தம் செய்ய வேண்டுமென்றால் யாரிடம் போவது? என பல பிரச்சினைகள் உள்ளன.

எமது சமூகத்தில் பல விதமான பிரச்சினைகளை ஏற்படுத்த பார்க்கின்றார்கள். எமது மக்களினை பிரித்தாளும் சூழ்ச்சியே இது என உறுப்பினர்களும் முதலமைச்சரும கடுமையாக சாடினார்கள்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர் தவராசா எம்மால் ஒரு வீட்டு திட்டத்தினை கொண்டுவர முடியாத நிலையில், மற்றவர்களால் கொண்டுவரப்படும் வீட்டு திட்டத்தினையும் எதிர்ப்பதா? அந்த வீட்டு திட்டத்தில் உள்ள குறைபாடுகளை சுட்டிகாட்டி பெற்றுகொள்ளுங்கள். அவசரப்பட்டுமுற்றாக நிராகரிக்க வேண்டாம் என தெரிவித்தார்.

இதற்கு வீட்டுத்திட்டத்தில் கொள்கை ரீதியான பிரச்சினை உள்ளது. மத்திய அரசு இங்கு ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது எம்மிடம் பேச வேண்டும். ஆனால் அதனை செய்யவில்லை. இது பெரும் பிழையாகும். குறித்த விடயம் அரசியல் ஆக்கப்படுவதனால் தான் இதனை அவசரமாக நிறை வேற்ற தீர்மானித்துள்ளோம். பெற்றோல் நிரப்பு நிலையத்தில் வீட்டு திட்டத்திற்கான படிவத்தை வழங்க வேண்டிய அவசியம இல்லை என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பதிலளித்தார்.

குத்தகை வழங்கப்பட்ட நிறுவனம் எங்கிருந்து திடீரென வந்தது? இதனை நாங்கள் முழுமையாக நிராகரிக்க வேண்டும்என உறுப்பினர் அஸ்மின் மற்றும் கஜதீபன் ஆகியோர் தெரிவித்தனர்.

எனவே இதனை தொடர்ந்து வீட்டு திட்டத்தின் மேலதிக நடவடிக்கைகளை உடன்நிறுத்த வேண்டும என கோரும்பிரேரணை சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. (செ-4)


BEACON
யாழ்.நகர்
A/L 2018
Commerce
English Medium
ECO: K.Pratheepan
ACC: R.Suhirthan
Bus.sc: S.Mugunthan
Commence On 27.03.2016 9 AM
(C-4129)

NEC
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி மணிக்கூட்டு வீதி, யாழ்நகர்.
A/L 2018
கலை வர்த்தகம் தொழில்நுட்பம்
புதிய பிரிவுகள் ஆரம்பம் 26.03.2016 சனி - 9.00 மணி
T.P : 0774696695
(C-4100)

Jaffna's No 1 for Gr 6 to O/L
எடிசன் அக்கடமி
Intent + Effort + Grace = Success
யாழ்ப்பாணம், கலட்டி, நல்லூர், கொக்குவில், சுன்னாகம்
2015 O/L வாழ்த்துக்கள்
24 பேர் 9A

| | | |
|---|---|---|
| 01.S.கதசபா | 09.A.அனபுசெலவன் | 17.N.கிஷாநதிகா |
| 02.S.செந்தூர | 10.S.புகழோன் | 18.V.விமலினி |
| 03.N.சுஜீவன் | 11.K.வித்தகன் | 19.T.பிரியங்கா |
| 04.N.நிரஞ்சன் | 12.S.கோபிநாத் | 20.P.கோபிசாளினி |
| 05.R.அட்சயன் | 13.K.வைஸ்ணவி | 21.K.வர்த்தினி |
| 06.T.நீலலோகன் | 14.K.அபிராமி | 22.T.தமிழினி |
| 07.L.கிஷாந் | 15.K.சங்கவி | 23.A.கேசவி |
| 08.E.ஜோய்விதுஷன் | 16.S.சங்கவி | 24.S.அபினயா |

(C-4123)

A/L பொருளியல்
MCQ BOOK-1
ரூபா 90/-
ஐந்தாம் பதிப்பு
புதிய வினாத்தாள் அமைப்பில் மேலதிக மீட்டல் 224 வினாக்களுடன்
2015 A/L பரீட்சையில் 99 புள்ளிகள் பெறுவதற்கு வழிவகுத்த மற்றும் பொருளியல் நூல்கள்
ஆசிரியர் வே. கருணாகரன்
பூபாலசிங்கம் புத்தகசாலை
அன்னை புத்தகசாலை
(4001)

நடமாடும் மிருக வைத்திய சேவை
தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய தேவைகளுக்கு
தொடர்பு : Dr.k. கிருபாகரன்
0779738802 / 0212242502
446, நாவலர் றோட், நல்லூர்
4 - 6 PM
(3998)

யாழில் புதிய பிரிவு
கையடக்க தொலைப்பேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
March 26 (சனிக்கிழமை)
காலை 9.00 மணி முதல் 26, 27, 28, 29 ஆகிய நான்கு தினங்களில்
Smart Phone கள் உற்பட அனைத்து Phone களும் பயிற்சியளிக்கப்படும்
10 மாணவர்களுக்கான அனுமதி மட்டுமே உள்ளதால். ஆசன முன்பதிவு செய்யவும்.
2000 மாணவர்களுக்கு மேல் பயிற்சியழித்த முதல்தர ஆசிரியர்
Ganesh Sir
பெறுமதியான Certificate வழங்கப்படும்
ஆரம்பம் முதல் சரளமாக கற்பிக்கப்படும்.
சகல கேள்விகளுக்கும் தெளிவான விளக்கம்.
தனிப்பட்ட கவனிப்பு.
சுயமாக வேலை செய்யும் அளவுக்கு பயிற்சியளிக்கப்படும்.
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
இலவசமாக இரகசியங்கள் அடங்கிய CD கையேடு வழங்கப்படும்.
ஆண் பெண் இருபாலாருக்கும் வயதெல்லை இல்லை ஆரம்ப அறிவு ஆங்கிலம் தேவையற்றது
ஆசன முன் பதிவுக் கட்டணம் 1000/-
பாடநெறி கட்டணம் 11,500/-
குறைந்த முதலீட்டில் உடனடியாக தொழில் தொடங்குவதற்கும் தேவையான அனைத்து தகவல்களும்.
iCS Study Overseas
77, Clock Tower Road, Jaffna
பதிவுகளுக்கு 077-6131358
(C-4075)

தேவை!
மாணவர்களுக்கான கல்வி வெளியீடுகள் தேசியரீதியில் வெளியிடும் நிறுவனத்துக்கு
தமிழ் மொழியில் தரம் 1 முதல் 11 வரை
(அனைத்து பாடங்களும்)
தவணைப் பரீட்சைமாதிரி வினாத்தாள்கள், ஆரம்பகல்வி மாணவர்களுக்கு கணிதம், தமிழ், சுற்றாடல் ஆகிய பாடங்கள் செயல்நூல்களாகவும், மற்றும் பாடப்புத்தகங்கள் பாடத்திட்டத்திற்கு அமைவாக தயாரித்து வழங்ககூடிய அனுபவம் உள்ள பாடசாலை ஆசிரியர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 0777 934663 / 078 3361818
(C-4125)

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0767070069
M.Suren
(3999)

DCM சுன்னாகம்
வடக்கின் முன்னணி ஆசிரியர் தற்போது சுன்னாகத்திலும்
A/L தமிழ்
A/L 2018
புதிய பிரிவு
ஆரம்பம் : நாளை மாலை 3.00 PM
S. கருணா
பிரபல ஆசிரியர்
(C-4132)

ECONOMICS HALL
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2018
கலை வர்த்தகம்
காலை 9.00 மணி
ஆரம்பம் : 02.04.2016
வர்த்தகப்பிரிவு நேரசூசியுடன்
பொருளியல் - உதயன் 10-11 (சனி, ஞாயிறு)
கணக்கீடு - AP.பகீரதன் 11-12 (சனி, ஞாயிறு)
வணிகக்கல்வி - யசோதரன் 9-10 (சனி, ஞாயிறு)
- பெற்றோரே நல்நாளிலே உங்கள் பிள்ளைகளின் உயர் கல்வியை எம்முடனே ஆரம்பியுங்கள்.
- வர்த்தகப்பிரிவு 2018 மாணவருக்கு 9.00 மணிக்கு தொடங்கும் வகுப்புக்கள் 12.00 மணிக்கு நிறைவு பெறும். இந்நேரம் தவிர பிள்ளைகள் உங்களது அரவணைப்பில் உள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- எம்முடன் இணைந்து உங்கள் பிள்ளைகளின் உயர்தர உயர்ந்த பெறுபேற்றை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- தொடர்புக்கு: 0778002376 சிரேஷ்ட ஆசான் உதயன் நிர்வாக இயக்குனர்
(4006)

புத்திசாதுரியமான மாணவச் செல்வங்களின் மதிநுட்பமான தெரிவு
ஞானோதய அக்கடமி சங்கத்தானை, சாவகச்சேரி
A/L 2018
கலை | வர்த்தகம் | தொழில்நுட்பம் | கணிதம் | உயிரியல்
ஆரம்பம் : 26-03-2016 - சனி - 8.00 மணி
யாழ் மாவட்ட பிரபல ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை
இம்முறை தொழில்நுட்பப் பிரிவில் செயன்முறை வழிகாட்டல்களுடன் துறைசார் நிபுணத்துவம் மிக்க ஆசிரியர்கள் குழாம்
A/L Day Class வகுப்புக்களும் சிறப்பாக நடைபெறுகின்றது
- நிர்வாகம்
(3995)


BEACON
யாழ்.நகர்
(வெலிங்டன் சந்தி - லிங்கன் கூல்பார் அருகில்)
A/L 2018
கலை, வர்த்தக, தொழில்நுட்ப பிரிவுகள்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
26.03.2016 காலை 8 மணி
அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(C-4129)

DCM யாழ் நகர்
A/L 2018 - புதிய பிரிவு
பொருளியல் S.ஜெயக்குமார்
கணக்கீடு P.பகிரதன்
வணிகம் V.முரளி
ஆரம்பம் பிரிவு I நாளை 9.00 A.M
பொருளியல் S.ஜெயக்குமார்
கணக்கீடு S.தவா
வணிகம் V.முரளி
ஆரம்பம் பிரிவு II நாளை 1.00 P.M
(C-4131)

BEACON யாழ்.நகர்
(வெலிங்டன் சந்தி-லிங்கன் கூல்பார் அருகில்)
A/L 2018
வர்த்தகப் பரிவு
இம்முறை இரு பிரிவுகளாக
பிரிவு I வாராந்த மாலை நேர வகுப்புக்கள்
பிரிவு II வார இறுதிநாள் (Weekend Class)
ஆரம்பம்: 26.03.2016 காலை 8 மணி
பொருளியல்: K.பிரதீபன்
கணக்கீடு: R.சுகிர்தன்
வணிகக்கல்வி: S.முகுந்தன்
(C-4129)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

30)




தாயக் கட்டை ஒன்றின் விரிப்பு கீழே தரப்பட்டுள்ளது. இதனை அவதானித்து விடை தருக.
இலக்கம் 5ற்கு எதிர்ப்பக்கத்தில் இருக்கும் இலக்கம்

1. 3 2. 4 3. 2

3) கஜமுகன் தன்னிடமுள்ள பணத்திலை கொடுத்து கடைக்காரரிடம் 275/- பெறுமதியான ஒரு பால்மா பெட்டியையும் 1kg 108/- படி 500g சீனியையும் வாங்கிய பின் 500/- இனை கடைக்காரனிடம் கொடுத்தால் அவனுக்குக் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு?

1) 171/- 2) 117/- 3) 329/-

➢ அன்பு கடையில் பென்சில் வாங்கினான். அதற்கு முன் கொப்பி வாங்கினான். அதன் பின் பேனா வாங்கினான். பென்சில் வாங்கப்பட்ட பின் நிறப் பெட்டி வாங்கப்பட்டது எனின்


32) முதலில் வாங்கப்பட்ட பொருள் எது?


1.பென்சில் 2.கொப்பி 3.பேனா


33)கடைசியாக வாங்கப்பட்டது எது?


1.பென்சில் 2.நிறப்பெட்டி 3.பேனா

34)இந்த உருவினைப் பூரணப்படுத்துவதற்கு கீழே தரப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து பயன் படுத்தக் கூடிய பகுதியைத் தெரிவு செய்க



1. 

2. 

3. 

➢ பின்வரும் கூற்றினை விளக்குக.

35) அமாவாசையன்று நிலவொளியில் காலாற நடப்பது இன்பமானது. இவ் வாக்கியத்தின் கருத்து தவறானது எது?

1. இரவு நேரத்தில் காலாற நடப்பது மிகவும் ஆபத்தானது.
2. அமாவாசையன்று நிலவு இருப்பதில்லை.
3. நிலாவொளியில் தனியே நடக்க முடியாது.

36) சதுர வடிவக் காணியொன்றினை சுற்றி தூண்கள் நடப்பட்டுள்ளன. அதில் ஒரு பக்கத்தில் பார்க்கும் போது தோன்றும் விதம் கீழே தரப்பட்டுள்ளது. அதன்படி அங்கு நடப்பட்டுள்ள மொத்த தூண்களின் எண்ணிக்கை?



1) 23 2) 24 3) 18

37) வெற்றிடத்தில் வர வேண்டிய உருவினைத் தெரிவு செய்க

| | | | | |
|---|---|---|---|---|
| C | B | A | D | E |
| E | A | B | C | D |
| A | C | | E | B |
| B | | | A | C |
| D | E | C | B | A |

1. A / D B

2. E / A B

3. D / D E

38.நிர்மல் நிதர்ஷனை விட கணிதபாடத்தில் திறமை மிக்கவர். கணித பரீட்சைகளின் போது கயல் நிதர்ஷனை விட கூடுதல் புள்ளிகள் பெறுவான். மாதங்கி எப்போதும் நிர்மலை விட கூடுதல் புள்ளி பெற்று வருபவள். இதன்படி கணிதபாடத்தில் முதலிடம் பெறுபவரில் தொடங்கி ஒழுங்கு முறையில் அமைந்துள்ள பெயர் வரிசை.


1.நிர்மல், மாதங்கி, கயல், நிதர்ஷன் 2.மாதங்கி, நிர்மல், கயல், நிதர்ஷன் 3.மாதங்கி, நிர்மல், நிதர்ஷன், கயல்

39. B, A, C, Z, A, L, B, M, A, B, C, D, A, A, P, B, A, C, C, M, A, A, B, B

இங்குள்ள B, A யின் எண்ணிக்கை முறையே?

1) 5,8 2) 6,8 3) 6,7

40.



இவ்வுருவில் காணப்படும் சதுரங்களின் எண்ணிக்கை?

1) 4 2) 8 3) 7

♦ ♦ ♦



★ வலம்புரி கல்விப்பிரிவு ★


# தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல-04


பகுதி-I தமிழ்க் கல்விக் கழகம் நேரம்:- 45 நிமிடங்கள்


இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. ஒன்று தொடக்கம் நாற்பது வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து கோடிடுக. ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன.அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

➢ 01 ஆம் 02 ஆம் வினாக்களில் பொருத்தமான உருவின் கீழ் கோடிடுக

01) மிகச் சுவையாம்
கொடியில் படருமாம்
குலையாய் காய்க்குமாம்
தின்ன தின்ன ஆசையாம்


1. 

2. 

3. 

02) வீட்டில் வளருமாம்
நன்றியுள்ளதாம்
வீட்டைக் காக்குமாம்
வாலை வாலை ஆட்டுமாம்


2. 


3. 

4. 


➢ 03 ஆம் 04ஆம் வினாக்களுக்கு கீழ்வரும் உருக்களை அவதானித்து விடையைத் தெரிவு செய்க.

A 

B 

C 

D 

E 

F 

G 

03) உணவு முறைக்கு ஏற்ப சோடியாக்கப்பட்ட சரியான தொகுதி

1. AB CD EF 2. AE BG DF 3. AE BF DG

04) பொருளாதார நன்மை கொண்ட மிருகம்,பறவை

1.Bயும் Aயும் 2.Aயும் Bயும் 3.Bயும் Gயும்

05) ➢ தரப்பட்டுள்ள தகவல்களை ஓர் ஒழுங்கில் வரிசையாக ஒழுங்குபடுத்தலாம் அவ்வாறு சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

A-பொருட்களுக்கான பணத்தைக் கொடுத்தான்
B-வீட்டுக்குச் சென்றான்
C- கண்ணன் கடைக்குச் சென்றான்
D-மீதிப் பணத்தைப் பெற்றுக்கொண்டான்
E- தேவையான பொருட்களை வாங்கினான்

1.CEADB 2.CADEB 3.BEACD

06) A-மலர்களின் மீது மெதுவாக அமர்ந்தன
B-தோட்டத்தில் மலர்கள் மலர்ந்திருந்தன
C-மகிழ்வுடன் பறந்து சென்றன
D-வண்ணத்துப்பூச்சிகள் அம்மலர்களை வட்டமிட்டன
E-தேனினை உறிஞ்சிக் குடித்தன

1.BEADC 2.EABCD 3.BDAEC

➢ சரியான விடையைத் தெரிவு செய்க.

07)" மின்னுவதெல்லாம் பொன்னல்ல" எனும் பழமொழியின் கருத்து?

1.பொன் எல்லாம் மின்னும் 2.போலியைக் கண்டு ஏமாறாதே 3.பொன் பெண்களுக்கு விருப்பம்

08)" ஒருவருக்கு மேலும் கோபமூட்டச் செய்தல்" என்பதற்குப் பொருத்தமான உவமானம்

1.எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றினாற் போல
2.விழுந்தவனை மாடேறி மிதித்தாற் போல்
3.ஆகாயத்தில் கோட்டை கட்டுவது போல

➢ பொருத்தமான விடையைத் தெரிவு செய்க

N,O,P,Q,R எனும் ஐவருக்கிடையேயான உறவுமுறை N என்பவர் O,P,R இன் தந்தையாவார் O என்பவர் Q வின் தந்தையாவார் இதன்படி

09) தந்தையாகவும் மகனாகவும் இருப்பவர் யார்?

1.P 2.R 3.O

10) N இற்கும் Q விற்கும் உள்ள உறவுமுறையாக அமைவது?

1.மகன் 2.பேரன் 3.மருமகன்

➢ தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து வினாக்களுக்கு விடை தருக

நீலத் துகிலுடுத்த மங்கை
பொய்கையில் நீராடிச் செல்கையில்
காதணி கழன்று பொய்கையில் வீழ்ந்தது
ஐயோ! எனக் கத்தினாள்


11) இங்கு கவிதையில் குறிப்பிடப்படுவது

1.மங்கையின் அழகு 2.நீராடச் சென்ற மங்கையின் அவலம் 3.துகிலின் அழகு


12) பொய்கை எனக் குறிப்பிடப்படுவது

1.நீர் 2.குளம் 3.ஆறு

➢ எண்களின் கோலத்திற்கேற்ப வெற்றிடத்துக்கு பொருத்தமான எண்களைத் தெரிவு செய்க.

13) 


1) 02 2) 24 3) 17

14) 


1) 2 2) 4 3) 3

➢ ஒவ்வொரு வினாவிற்குமுரிய விடையைத் தெரிவு செய்க.

15) உழவன் கலப்பை எனின் எழுத்தாளன்..........

1.புத்தகம் 2.கடதாசி 3.பேனா

16) நோய்க்கு-மருந்து எனின் பசிக்கு......

1.வைத்தியம் 2. உணவு 3. ஓய்வு

17) இரகசியக் குறியீட்டு முறைக்கேற்ப 213 என்பது DBF எனவும் 542 என்பது JHD எனவும் எழுதப்படும். இதற்கேற்ப 671 என்பது எவ்வாறு எழுதப்படும்?


1.LKB 2.CBE 3.LNB

18) எண் கோலம் ஒன்றை உருவாக்குவதற்காக நீக்கப்பட வேண்டிய எண்களாவன

8,17,20,35,71,80,143

1) 17,20 2) 20,80 3) 8,35

19) உணவு,மரக்கறி,பழங்கள் என்வற்றுக்கிடையிலான தொடர்பைக் காட்டப் பின்வரும் உரு வரையப்பட்டுள்ளது.அதன் படி இவ்வுருவில் மாம்பழங்கள் எந்த எழுத்தினால் காட்டப்பட்டுள்ளன?





1. B யினால்
2.C யினால்
3.D யினால்


20) E, N, M, Z, W............ ஒரே அளவான ஈர்க்குத் துண்டுகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்டுள்ள கோலத்தில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?

1.K 2.T 3.X


21) தரப்பட்டுள்ள உருக்களை ஒன்றன் மீது ஒன்றை வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.









22) 


➢ வெற்றிடங்களுக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

23) 



24) 


கீழே காணப்படும் ஒவ்வொரு வினாவிற்குமான விடையினைத் தெரிவு செய்க.

தரப்பட்டுள்ள உருவில் வெள்ளைப் பந்து கறுப்புப் பந்து அம்புக்குறி காட்டிய வழியே ஒரே பாதையில் நகருகின்றன.வெள்ளைப் பந்து ஒவ்வொரு எழுத்தாக நகரும் கறுப்புப் பந்தானது ஒன்றுவிட்ட ஒரு எழுத்தாக நகரும் எனின்


25) இரண்டும் ஒரு இடத்தில் சந்திக்க எத்தனை தரம் நகர வேண்டும்




1.மூன்று தடவை
2.இரண்டு தடவை
3.நான்கு தடவை

26) எந்த இடத்தில் அவை இரண்டும் சந்திக்கும்


1.A 2.E 3.F

27) 


A,B,C,D என்ற செவ்வகத்தின் நிழற்றிய பகுதி முழு உருவின் என்ன பின்னம்?

1) 5/12 2) 6/12 3) 1/3

28) சதுர வடிவமான கடதாசித் துண்டொன்று நான்காக மடிக்கப்பட்டு அதிலிருந்து இரு பகுதிகள் வெட்டி அகற்றப்பட்டது. இதன் படி அக் கடதாசித் துண்டைப் பிரித்துப் பார்த்தால் காணப்படும் மிகச் சரியான முறை யாது?




29) உருவில் காட்டப்பட்டுள்ள தாயக் கட்டையிலுள்ள 3 எழுத்துக்கள் போன்று அடுத்த மூன்று பக்கங்களிலும் எதிர் பக்கங்களில் அதே எழுத்துக்கள் இடம் பெற்றுள்ளன எனின் அதனை விரிக்கும் போது பெறப்படும் சரியான வடிவம் எது?

